உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத்ரயம்.

சிவசம்பு பக்தி விளக்க நிஜதத்வரூபம்
என்னும் ஸத்ஸதாவ்ஸத்ரய பாஷியமா
யினிது பெறப்பட்டன.

---

இஃது சிவநேசச்செல்வர்கள் விருப்பத்தின்படி
ஸ்ரீசிவசமயத்திற்குத் தொண்டு பூண்டொழுகும்
அடியார்களில் ஒருவரும்
வேதாந்த சித்தாந்த சமரச சுக்ஞானவிலாச
சபாப்ரசங்க கோளரியும்
சென்னைத்திருமயிலை வடகூர் இராயப்பேட்டை
அருட்கவி
கி. ஊ. பா. கங்காதரநாவலரென் றியற்பெயரமைந்துள்ள
"சிவஞானப் பரதேசியாரென்னும்"
சிவப்ரகாசதேசிக சுவாமிகளவர்களால்
இயற்றப்பட்டு.

---

கையோப்பக்காரர்களின் நன்முயற்சியினுல்
சென்னைப் புரசை
சரஸ்வதி அச்சு இயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

---

35-வது ௵த்தின் திருப்பணியாக கலியுகாப்தம் 5016-க்குச்
சரியான ஆனந்த௵ பங்குனி௴ 16௨
சுவாமிசந்நிதியில் தேசிகசுவாமிகளவர்களால்
அரங்கேற்றஞ்செய்யப்பட்டது.

1915௵ மார்ச்௴ 29௨

164408



Q123:38.211.K
N15

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ ஜஞானசம்பந்தகுருப்யோநம:

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞானத்ரயம்.

## நான்முகம்.

### சிவசமய பக்தி விளக்க நிஜதத்வரூபம்

ஸ்ரீஅகண்டாப ரோக்ஷித சின்மயானந்த சர்வமங்கள கவியாண பரிபூரணத்வ பரேஹிதஹிதாம்ஸ சுகாத்வைத பரமாணுபவ திரிவிதார்த்த பஞ்சாக்கர ஏகாக்கர பௌமியாஸ்த்ரய மஹா தேவதேவனும் சத்சதேபாஹிய விசாலம்ப சூட்சாதி விதேகதேக ஆஸ்ரய மனோரம்ய தோத்ர பூஷணைம்ஹிதே:, சகலகாருண்ய யீஸ்வரமூர்த்தயே அனந்தாதித ஜோபிதாம்ஸஹ: சம்போ சம்புகேஸ்வராம்ஸ லலாடன நித்ய நிருமலாதிப கேதனுதிப பயோதர ஞானகலாநிலய பராபர நிராதார சாட்குண்ய சச்சித சோருபலாவண்ய பக்தாபிடேக பாஞ்சபூத பௌதிக: சுப்ரதீப தேவதேவாம் சிவம். ஓம் சத்பதவ்யோ மஹா மந்திராஸ்ரயம் சிவம் சிவம்.

தத்சத்வ சத்வாதீத வியாபகானுபவானந்த ப்ரமசாம்ராஜ்ய நித்யாப ரோக்ஷித நிகிலலோக வான்மகோடி சரண்யானும் சிவம் பரஹித வேதாகம புராண ஸ்ருதி ஸ்மிருதி தோத்திர வாக்கியானும் சிவம் என நிருமிதாத்வ சம்பந்த சுதந்தராப்த சித்விலாசனுகவும்.

## பஸ்மஜாபாலம்.

" கைலாஸ சிகராவாஸ மோங்கார ஸ்வரூபிணம்
மஹாதேவ முமார்த்தக்ருத சேகரதும் ஸோமஸூர்
யாக்னிநயந மநந்தேந்துர விப்ரபும் வியாக்ரசர்மாம்
பாதரம் ம்ருகஹஸ்தம் பஸ்மோத்தூளித விக்ரஹம்
திர்யக் த்ரிபுண்டர ரேகாவிராஜமாந பாலப்ரதேசம்
ஸ்மிதம் ஸம்பூரண பஞ்சவித பஞ்சாநநம், வீராஸநா
ரூட மப்ரமேய மநாத்யந்தம் நிஷ்களம் நிர்க்குணம்
சாந்தம் நிரஞ்சந மநாமயதும், ஸூம்பட்தூர்வாணதும்
சிவநாமாந்ய நிசழச்சரந்ததும் ஹிரண்யபாஹூதும்
ஹிர்ண்ய ரூபதும் ஹிரண்யவர்ணதும் ஹிரண்ய
நிதி மத்வைதம் ச்துர்த்தம் ப்ரம விஷ்ணு ருத்ராதீ
தமேக மாசாஸ்யம் பகவந்ததும் சிவம்ப்ரணம்ய "

அத்வைதம், சாந்தம் சதுர்த்தம், ப்ரஹ்ம விஷ்ணு ருத்ராதீதம், கைலாஸ சிகராவாஸம் உமார்த்த க்ருதசேகரம், ஸோம ஸூர்யாக்நிநயநம், வ்யாக்ர சர்மாம் பரகரம் ம்ருகஹஸ்தம், பஸ்மோத்தூளித விக்ரஹம்' பஞ்சாநநம், மஹாதேவம்.

என்பனவாதி அடையாளங்களைப் பொருந்தி திருவிளையாடற் செய்கின்ற பரமகாருண்ய மஹேஸ்வரனுகவும்,

" ஆத்மாநம் பரமாத்மாநம், அந்தராத்மானமேவச,
ஜ்ஞாத்வாத்ரி விதமாத்மாநம், பாமாத்மாநமாச்ர
யேத், அந்தராத்மா பவேத் ப்ரஹமா, பரமாத்மா மஹேஸ்வர :'

ஸர்வேஸாமேவபூதாநாம் விஷ்ணுராத்மாஸ நாதந: " சிவம் யாதிது கேவலம் அதிஷ்டானம் ஸமஸ்தஸ்ய, ஜகதஸ் ஸத்ய சித்கநம், துரீயவஸ்துவினது ஸ்வரூபம், எனும் பரமாத்ம சொரூப சித்விலாசமுடையவனுகவும்,

## பாரதம்.

" ஈசாநச் சேதந: கர்த்தா—புருஷ; காரணம்சிவ:
விஷ்ணும் ப்ரஹமா சசீஸூர்ய:—சக்ரோதேவாச்சஸாந்வயா:
ஸ்ருஜ்ய தேக்ரஸ்ய தேசைவ—தமோபூதமிதம்யதா
அப்ரஜ்ஞாதம் ஜகத்ஸர்வம்—ததாஹ்யேகோ மஹேஸ்வர: "

" ப்ரத்யக் ஜநதிஷ்டதி சஞ்சுகோசாந்தகாலே, ஏக ஏவருத்ரோநத்விதீயாயதஸ்தே, நப்ரஹமாநவிஷ்ணு ஸூர்யோநாக்னி சந்த்ரதாரகா: என்றபடி, ஈசானர், சேதனர், கர்த்தர், புருஷர், காரணர், சிவம், மஹேஸ்வார். என்னுஞ் சிவபரஞ்சுடராகவும்,

## பிரஹ்மவித்யோபநிஷத்து.

"அகாரஸ்ய சரீரந்து—வ்யாக்யாதம் ப்ரஹ்மவாதிபி" என்று பிரஹ்மாவையும், "விஷ்ணுச்சபகவான் தேவ உகார: பரிகீர்த்தித:" என்று விஷ்ணுவையும், "ஈஸ்வர: பரமோதேவோ, மகார பரிகீர்த்தித:" என்று உருத்திரமூர்த்தியையும், பிரகாசப்படுத்தியபடி, அக்ஷரத்ரயாத்மகராகிய ஓங்காரவாச்யர் என்னும் ஸர்வரக்ஷகமூர்த்தியாகவும்,

## மஹோபநிஷத்திநுபக்ரமம்.

"தஸ்மாதீசாநோ மஹாதேவோ மஹாதேவ:"
"பராத் பரதரம் யக்மஹதோ மஹாந்தம்:
ஸ்வரூப தேஜோமய சாஸ்வதம் சிவம்"
"சிவ எவஸ்வயம் ஸாக்ஷாத்"
"ஸர்வம் சாந்தம் நிராலம்பம்
வ்யோமஸ்தம் சாஸ்வதம் சிவம்" என்னுஞ்சிவமாகவும்,

ஏகாந்த ஸ்தானங்களிலே சுகாசனத்திலிருந்து சுத்தமனத்தனய், இந்திரியங்களனைத்தையும் அடக்கிப் பக்தியால் தனது ஆசாரியரை யிறைஞ்சி, ஹ்ருதய புண்டரீகத்தைத் தூகளற்ற சுத்தமாகக்கருதி. அதன் மத்தியிலே தெளிவுடையவராய், சோகமில்லாதவராய், எண்ணுதற்கரியவராய், வெளிப்படாதவராய், அநந்தரூபராய், சிவமாய், அமிர்தராய், தற்பரமாய், ஆதிமத்யாந்தவிஹீனராய், ஏகராய், விபுமாய், சிதாநந்த ரூபராய், சுரூபராய், அத்புதராய், உமாஸஹாயராய், பரமேஸ்வரராய், பிரபுவாய், முக்கண்ணராய், நீலகண்டராய், பிரசாந்தராய், ஸமஸ்தசாக்ஷிமாத்திரையுடைய பரமேஸ்வரனுகவும்,

"ப்ருதிவ்யோபவ, ஆபஸ்ஸர்வ: அக்நேருத்ர:, வாயுர்ப்பீம:, ஆகாசஸ்ய மஹாதேவ, சூர்யஸ்யோக்ர:, சந்திரஸ்யஸோம: ஆத்மாந பசுபதி," எனும் அட்டமூர்த்தியாகவும்,

## ஸ்ரீமத்-திருஞானசம்பந்த சுவாமிகள்
## திரு ஆவூர்ப்பசுபதீச்சரம்-பண்-நட்டபாடை.

புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடுவார்தம் மனத்தார் திங்கட், கண்ணியரென்றென்று காதலாளர் கைதொழுதேத்த விருந்தவூராம், விண்ணுயர் மாளிகைமாடவீதி விரைகமழ்சோலை சுலாவியெங்கும், பண்ணியல் பாடலறாதவாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. க

முத்தியர் மூப்பிலராப்பிலுள்ளார் முக்கணர்தக்கன்றன் வேள்விசாடு, மத்தியரென்றென் றடியரேத்து மையனணங்கொடிருந்தவூராந், தொத்

தியலும் பொழில் மாடுவண்டு துதைந்தெங்குந் தூமதுப்பாயக்கோயிற்,
பத்திசை பாடலருதவாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. (உ)

பொங்கிவரும்புனல் சென்னிவைத்தார் போம்வழி வந்திழி வேற்ற
மானு, ரிங்குயர்ஞானத்தர் வானோரேத்து மிறையவரின்று மிருந்த
வூராந், தெங்குயர் சோலைசே ராலைசாலி திளைக்கும் விளைவயல் சேரும்
பொய்கைப், பங்கயமங்கை விரும்புமாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே.

தேவியோர் கூறினரேறதேறுஞ் செலவினர் நல்குரவென்னைநீக்கு,
மாவியரந்தண ரல்லல் தீர்க்கு மப்பனாரங்கே யமர்ந்தவூராம், பூவியலும்
பொழில்வாசம்வீசப் புரிகுழலார்சுவ டொற்றிமுற்றப், பாவியல் பாடல
ருதவாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. (ச)

பந்தணையுஞ்சடையார் விடையா ரிப்பிறப்பென்னை யறுக்கவல்லார்,
வந்தணைந்தின்னிசை பாடுவார்பால் மன்னினர் மன்னியிருந்தவூராங்,
கொந்தணையுங் குழலார் விழவிற் கூட்டமிடையிடை சேரும்வீதிப்,
பந்தணையும் விரலார்தமாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. (ரு)

குற்றமறுத்தார் குணத்தினுள்ளார் கும்பிடுவார் தமக்கன்பு செய்வா,
ரொற்றைவிடையினர் நெற்றிக்கண்ணா ருறை பதியாகுஞ் செறிகொள்
மாடஞ், சுற்றியவாசலின் மாதர் விழாச் சொற்கவிபாட நிதானநல்கப்,
பற்றியகையினர் வாழுமாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. (சு)

நீறுடையார் நெடுமால் வணங்கு நிமிர்சடையார் நினைவார் தமுள்
ளங், கூறுடையாருடைக் கோவணத்தார் குவலயமேத்த விருந்தவூராந்,
தாறுடைவாழையிற் கூழைமந்தி தருகனியுண்டுமீண் டிட்டினத்தைப்,
பாறிடப்பாய்ந்து பயிலுமாவூர்ப் பசுபதீச்சரம் பாடு நாவே. (எ)

வெண்டலைமாலை விரவிப்பூண்ட மெய்யுடையார் விறலாரரக்கன்,
வண்டமர் பூமுடி செற்றுகந்த மைந்தரிடம் வளமோங்கி யெங்கும், கண்,
டலர் சிந்தைக் கருத்தின் மிக்கார் கதியருளென்று கையாரக்கூப்பிப்,
பண்டலர்கொண்டு பயிலுமாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. (அ)

மாலுமயனும் வணங்கிநேட மற்றவருக் கெரியாகிநீண்ட, சீலமறி
வரிதாகி நின்ற செம்மையினாரவர் சேருமூராங், கோலவிழாவின ரங்கத்
தேறிக் கொடியிடை மாதர்கள் மைந்தரோடும், பாலெனவே மொழிந்தேத்
துமாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. (கூ)

பின்னிய தாழ்சடையார் பிதற்றும் பேதையராஞ்சமண் சாக்கியர்
கள், தன்னியலுமுரை கொள்ள கில்லாச் சைவரிடந்தள வேறு சோலைத்,
துன்னியமாதரு மைந்தர்தாமுஞ் சுனையிடைமூழ்கித் தொடர்ந்தசிந்தைப்,
பன்னியபாடல் பயிலுமாவூர்ப் பசுபதீச்சரம் பாடுநாவே. (க௦)

எண்டிசையாரும் வணங்கியேத்து மெம்பெருமானை யெழில்கொளா ஷூர்ப், பண்டரியார் சிலர் தொண்டர்போற்றும் பசுபதீச்சரத்தாதிதன் மேற், கண்டல்கள் மிண்டியகானற்காழிக் கவுணியன்ஞானசம்பந்தன் சொன்ன, கொண்டினிதாவிசை பாடியாடிக் கூடுமவருடையார்கள் வானே. (கக)

## ஸ்ரீமத்-திருநாவுக்கரசு சுவாமிகள்

## திருவலிவலம்-திருத்தாண்டகம்.

நல்லான்கா ணான்மறைக ளாயினான்கா ணம்பன்கா ணனுகாதார் புரமூன்றெய்த, வில்லான்காண் விண்ணவர்க்கு மேலானான்காண் மெல்லியலாள் பாகன்காண் வேதவேள்விச், சொல்லான்காண் சுடர்மூன்று மாயினான்காண் டொண்டாகிப் பணிவார்க்குத் தொல்வானீய, வல்லான்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (க)

ஊனவன்கா ணுடறனக்கோ ருயிரானான்கா ணுள்ளவன்கா ணில்லவன்கா ணுமையாட்கென்றுந், தேனவன்காண் டிருவவன்காண் டிசையானான்காண் டீர்த்தன்காண் பார்த்தன்றன் பணியைக்கண்ட, கானவன்காண் கடலவன்காண் மலையானான்காண் களியானை யீருரிவைகதறப் போர்த்த, வானவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (உ)

ஏயவன்கா ணெல்லார்க்கு மியல்பானான்கா ணின்பன்காண் டுன்பங்களில்லாதான்காண், தாயவன்கா ணுலகுக்கோர் தன்னொப்பில்லாத் தத்துவன்கா ணுத்தமன்காண் டானேயெங்கும், ஆயவன்கா ணண்டத்துக் கப்பால்வான்கா ணகங்குழைந்து மெய்வருந்தி யழுவார்தங்கள், வாயவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (ங)

உய்த்தவன்கா ணுடறனக்கோ ருயிரானான்கா ணோங்காரத் தொருவன்கா ணுலகுக்கெல்லாம், வித்தவன்காண் விண்பொழியு மழையானான்காண் விளைவன்காண் விரும்பாதார் நெஞ்சத்தென்றும், பொய்த்தவன்காண் பொழிலேழுந் தாங்கினான்காண் புனலோடும் வளர்மதியும் பாம்புஞ்சென்னி, வைத்தவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (ச)

கூற்றவன்காண் குணமவன்காண் குறியானான்காண் குன்றங்களனைத்துங்காண் கோலமாய, நீற்றவன்கா ணிழலவன்கா ணெருப்பானான்

காணிமிர்புன் சடைமுடிமே னீரார்கங்கை, எற்றவன்கா ணேழுலகு மாயினான்கா ணிமைப்பளவிற் காமனைமுன் பொடியாய்வீழ, மாற்றவன் காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (௫)

நிலையவன்காண் டோற்றவன்கா ணிறையானான்கா ணீரவன்காண் பாரவன்கா ணூர்மூன்றெய்த, சிலையவன்காண் செய்யவாய்க் கரிய கூந் தற் றேன்மொழியை யொருபாகஞ் சேர்த்தினான்காண், கலையவன்காண் காற்றவன்காண் காலன்வீழக் கறுத்தவன்காண் கயிலாயமென்னுந் தெய்வ, மலையவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (௬)

பெண்ணவன்கா ணானவன்காண் பெரியோர்க்கென்றும் பெரியவன் காணரியவன்கா ணயனானான்காண், எண்ணவன்கா ணெழுத்தவன்கா ணின்பக்கேள்வி யிசையவன்கா ணியலவன்கா ணெல்லாங்காணுங் கண்ணவன்காண் கருத்தவன்காண் கழிந்தோர்செல்லுங் கதியவன்காண் மதியவன்காண் கடலேழ் சூழ்ந்த, மண்ணவன்காண் வானவர்கள் வணங் கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்துளானே. (எ)

முன்னவன்காண் பின்னவன்காண் மூவர்மேனி முதல்வன்காண் முடியவன்காண் மூன்றுசோதி, அன்னவன்கா ணடியார்க்கு மண்டத் தார்க்கு மணியவன்காண் சேயவன்கா ணளவில்சோதி, மின்னவன்கா ணுருமவன்காண் டிருமால்பாகம் வேண்டினன்கா ணீண்டுபுனற் கங் கைக்கென்று, மன்னவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவ லத்தான் காணவனென் மனத்துளானே. (அ)

நெதியவன்காண் யாவர்க்கு நினையவொண்ணா நீதியன்காண் வேதி யன்கா ணினைவார்க்கென்றுங், கதியவன்காண் காரவன்காண் கனலா னான்காண் காலங்களூழியாக் கலந்துநின்ற, பதியவன்காண் பழமவன் கா ணிரதந்தான்காண் பாம்போடு திங்கள் பயிலவைத்த, மதியவன்காண் வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான் காணவனென் மனத்து ளானே. (௯)

பங்கயத்தின் மேலானும் பாலனாகி யுலகளந்த படியானும் பரவிக் காணாக், கங்கைவைத்த சென்னியரா யளக்கமாட்டா வனலவன்கா ணலைகடல்சூ ழிலங்கை வேந்தன், கொங்கலர்த்த முடிநெரிய விரலா லூன்றுங் குழகன்கா ணழகன்காண் கோலமாய, மங்கையர்க்கோர் கூறன் காண் வானோரேத்தும வலிவலத்தான் காணவனென் மனத்துளானே.

## ஸ்ரீமத்-சுந்தரமூர்த்திசுவாமிகள்

## திருக்கருப்பறியலூர்-பண்-நட்டராகம்.

சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில் வைத்துகந்து திறம்பாவண்ணங், கைம்மாவி னுரிவைபோர்த்துமைவெருவக் கண்டானைக் கருப்பறியலூர்க், கொய்ம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட மயிலாடுங் கொகுடிக்கோயி, லெம்மானை மனத்தினால் நினைந்தபோ தவர்நமக் கினியவாறே. (க)

நீற்றாருமேனியராய் நினைவார்தம் முள்ளத்தே நிறைந்துதோன் றுங், காற்றானைத் தீயானைக் கதிரானை மதியானைக் கருப்பறியலூர்க், கூற்றானைக்கூற் றுதைத்துக் கோல்வளையா ளவளோடுங் கொகுடிக்கோயி, லேற்றானை மனத்தினால் நினைந்தபோதவர்நமக் கினியாவறே. (உ)

முட்டாமே நாடோறும் நீர்மூழ்கிப் பூப்பறித்து மூன்றுபோதுங் கட்டார்ந்த விண்டைகொண் டடிசேர்த்து மந்தணர்தங் கருப்பறியலூர்க், கொட்டாட்டுப் பாட்டாகி நின்றானைக் குழகனைக் கொகுடிக்கோயி, லெட்டானமூர்த்தியை நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (ங)

விருந்தாய சொன்மாலை கொண்டேத்தி வினைபோக வேலிதோறுங், கருந்தாள வாழைமேற் செங்கனிகள் தேன்சொரியுங் கருப்பறியலூர்க், குருந்தாய முள்ளெயிற்றுக் கோல்வளையா ளவளோடுங் கொகுடிக்கோயி, விருந்தானை மனத்தினால் நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (ச)

பொடியேறு திருமேனிப் பெருமானைப் பொங்கரவக்கச்சையானைக், கடிநாறும்பூம்பொய்கைக் கயல்வாளை குதிகொள்ளுங் கருப்பறியலூர்க், கொடியேறி வண்டினமுந் தண்டேனும் பண்டெய்யுங் கொகுடிக்கோயி, லடியேறு கழலானை நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (ரு)

பொய்யாத வாய்மையாற் பொடிப்பூசிப் போற்றிசைத்துப் பூசை செய்து, கையினா லெரியோம்பி மறைவளர்க்கு மந்தணர்தங் கருப்பறியலூர்க், கொய்யுலாமலர்ச் சோலைக் குயில்கூவ மயிலாடுங் கொகுடிக்கோயி லையனையென் மனத்தினால் நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (சு)

செடிகொணோ யுள்ளளவுந் தீவினையுந் தீர்த்தொழியச் சிந்தை செய்ம்மின், கடிகொள்பூந் தடமண்டிக் கருமேதி கண்படுக்குங் கருப்பறியலூர்க், கொடிகொள்பூ நுண்ணிடையாள் கோல்வளையா ளவளோடுங் கொகுடிக்கோயி, லடிகளையென் மனத்தினால் நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (எ)

பறையாத வல்வினைகள் பறந்தொழியப் பன்னாளும் பாடியாடிக், கறையார்ந்த கண்டத்த னெண்டோளன் முக்கண்ணன் கருப்பறியலூர்க், குறையாதமறைநாவர் குற்றேவ லொழியாத கொகுடிக்கோயி, லுறைவானை மனத்தினால் நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (அ)

சங்கேந்துங் கையானுந் தாமரையின் மேலானுந் தன்மைகாணாக், கங்கார்ந்த வார்சடைக ளுடையானை விடையானைக் கருப்பறியலூர்க், கொங்கார்ந்த பொழிற்சோலை சூழ்கனிகள் பலவுதிர்க்குங் கொகுடிக் கோயி, லெங்கோனை மனத்தினால் நினைந்தபோதவர்நமக் கினியவாறே.

பண்டாழினிசைமுரலப் பன்னாளும் பாவித்துப் பாடியாடிக், கண் டார்தங் கண்குளிருங் களிக்கமுகம் பூஞ்சோலைக் கருப்பறியலூர்க், குண் டாடுஞ்சமணருஞ் சாக்கியரும் புறங்கூறுங் கொகுடிக்கோயி, லெண்டோ ளெம்பெருமானை நினைந்தபோதவர்நமக் கினியவாறே. (௧௦)

கலைமலிந்ததென்புலவர் கற்றோர்தம் மிடர்தீர்க்குங் கருப்பறியலூர்க் குலைமலிந்தகோட்டெங்கு மட்டொழுகும் பூஞ்சோலைக் கொகுடிக்கோயி லிலைமலிந்தமழுவானை மனத்தினாலன்புசெய் தின்பமெய்தி, மலைமலிந் தோளாரூரன் வனப்பகையப்பனுரைத்த வண்டமிழ்களே. (௧௧)

## ஸ்ரீ-மத் மாணிக்கவாசகசுவாமிகள்

### நேரிசைவெண்பா.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே—யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவாசக மென்னுந் தேன்.

## சென்னிப்பத்து

### சீவவிலைவு-என்பது சீவனுக்கு நிச்சயப்படுத்தல்.

தேவதேவன்மெய்ச் சேவகன் றென்பெருந்துறை நாயகன், மூவரா லுமறியொணா முதலாயவானந்த மூர்த்தியான், யாவராயினு மன்பரன்றி யறியொணாமலர்ச் சோதியான், றூயமாமலர்ச்சேவடிக்கணஞ் சென்னி மன்னிச்சுடருமே. (௧)

அட்டமூர்த்தி யழகனின்னமு தாயவானந்த வெள்ளத்தான், சிட் டன்மெய்ச் சிவலோக நாயகன் றென்பெருந்துறைச் சேவகன், மட்டு வார்குழன் மங்கையாளையோர் பாகம் வைத்தவழகன்றன், வட்டமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௨)

நங்கைமீரெனை நோக்குமின்னங்க ணாதனம்பணி கொண்டவன், றெங்குசோலைகள் சூழ்பெருந்துறை மேயசேவக நாயகன், மங்கைமார் கையில் வளையுங்கொண்டெம் முயிருங்கொண்டெம் பணிகொள்வான், பொங்குமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னிப் பொலியுமே. (௩)

பத்தர்சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பானெனச், சித்தர் சூழச் சிவபிரான்றில்லைமூதூர் நடஞ்செய்வா, னெத்தனாகிவந் தில்புகுந்தெமை யாளுங் கொண்டெம் பணிகொள்வான், வைத்தமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௪)

மாயவாழ்க்கையை மெய்யென் றெண்ணி மதித்திடாவகைநல் கினான், வேயதோளுமை பங்கனெங்க டிருப்பெருந்துறை மேவினான், காயத்துள்ளமு தூறவூற நீகண்டுகொள்ளென்று காட்டிய, சேயமாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (௫)

சித்தமேபுகுந் தெம்மையாட்கொண்டு தீவினைகெடுத் துய்யலாம், பத்திதந்துதன் பொற்கழற்கணே பன்மலர்கொய்து சேர்த்தலு. முத்திதந்திந்த மூவுலகுக்கு மப்புறத்தெமை வைத்திடு. மத்தன்மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௬)

பிறவியென்னுமிக் கடலைநீத்ததன் பேரருடந்தருளினா, னறவையென்றடி யார்கடங்க ளருட்குழாம்புக விட்டுநல், லுறவுசெய்தெனை யுய்யக்கொண்டெம் பிரான்றனுண்மைப் பெருக்கமாந், திறமைகாட்டிய சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (௭)

புழுவினாற்பொதிந் திடுகுரம்பையிற் பொய்தனையொழி வித்திடு, மெழில்கொள்சோதியெம் மீசனெம்பிரா னென்னுடையப்ப னென்றென்று, தொழுதகையின ராகித்தூய்மலர் கண்கணீர்மல்குந் தொண்டர்க்கு. வழுவிலாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னிமன்னி மலருமே. (௮)

வம்பனாய்த்திரி வேனைவாவென்று வல்வினைபகை மாய்த்திடு, மும்பரானுலகூடறுத்தப் புறத்தனாய்நின்றவெம்பிரா, னம்பரானவர்க் கருளி மெய்யடி யார்கட்கின்பந்தழைத்திடுஞ், செம்பொன்மாமலர்ச் சேவடிக் கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (௯)

முத்தனைமுதற் சோதியைமுக்க ணப்பனைமுதல் வித்தினைச், சித்தனைச் சிவலோகனைத் திருநாமம்பாடித் திரிதரும், பத்தர்காளிங்கே வம்மினீருங்கள் பாசந்தீரப் பணிமினோ, சித்தமார்தருஞ் சேவடிக்கணஞ் சென்னிமன்னித் திகழுமே. (க௦)

எனச் சைவாகமங்களினு லினிதெடுத்து
சதா பாராயணஞ்செய்து சிந்தித்து, வந்திக்கத்தக்க
சிவகடாக்ஷ வீட்சண்ய ஞானப்பிழம்பாகவும்.

ஆகாய தத்துவமாய். சுத்தவெளிபாய். சதாசிவரூபமாய், அக்கினி சொரூபமாய், நிர்மலமாய் நிட்களமாய், நிராமயமாய், நிரஞ்சனமாய்; நிராதரமாய் நீங்காத சத்துசித்து வானந்தமாய், அருவமாய், உருவமாய், அருவாரூபமாய், நிரதிசயானந்த நித்தியாபரோட்சிதமாய். சதசத்வாதீத பிரணவாகார லலாடன சர்வவியாப்பிய. அகண்ட சிதாகாய பரப்பிரமமாய், சாந்தமாய், சச்சிதானந்த சதோதய சட்பாவ விகாரங்களற்றதாய் உடலினுயிராய், மலரில்மணமாய், நெருப்பிற்காங்கையாய். சலத்திற் சீதளமாய், கண்ணிலொளியாய், கருத்தில்வத்துவாய், கனியிற்சுவையாய் கண்டார்க்காட்சியாய், காணுதார்க் கிருளாய், சகலாகம சொரூபலட்சண ஸ்வயம்பிரகாசமாய், இறப்பிறப்பிலாத தனிப்பரமாய். எல்லாவத்துவினிடத்துங் கலந்து, ஆன்மாக்களுடைய கன்மதன்மத்திற் கீடாக சனனங்களையும், முத்திமோட்சானந்த வைபவங்களைத் தரக்கூடிய சமயப் பக்தி மந்திரப். விரதப், தானப். தவப், ஆசாரம், அனுட்டானப், மனேலயப்படு நிர்ச்சிந்தை, இரண்டற்ற பரிபக்துவப், குருமூர்த்த தரிசன்ப். அடயோக சகசநிட்டை, மலப்படுசனனவாதனையை நீக்கி, தூவிப்புழுவைத் தன்மயமாக்கும் வண்ணப், சீவனகியப் பசுவைப் பதியாகிய சிவப் தன்னுட னடக்கிக்கோள்ளல்) முதலாகிய புண்ணியசாதன வினைவிற்கு கருணைக்கடலாகியும், சரிதை, கிரியை யோகம், ஞானம்’ இவற்றைக் கைவரக்கலந்து, அதனதன் கிரமானுசாரப்படிபாடுபெட்டுவுழைத்து தன்னை யதார்த்த சொரூபயிலக்கணத்தி னுண்மைப்படிக்கண்டு வொடுங்கும்படியான நிலை, பலவாருகமுமூட்சுகளாகியபெத்தமுத்தசிவேஸ்வரர்கள். பரமாச்சார்ய ஞானபானுக்களாகிய குருமூர்த்திகள். முனிவர்கள், நிட்டானுபரர்கள். பத்தர்கள், விரதானுசாரர்கள், மஹரிஷியர் முதலாகிய பரிநாமங்களையுடைய பெரியோர்களா லனுபவானந்த வதீத முறைகளாக பலவிதமாக தம் தம் மனேச ந்த நிலையினைப் பின்னடியார்களாகிய பசுக்களெனும் சீவர்கள் எடுத்தப் பிறவிக்கேற்றப் பலனையனுபவித்து நலமடைவான் வேண்டிய பெருங் கிருபாநிதியாய். அனுக்ரஹ புண்ணிய பூதியராய் வரைந்துள்ள சைவாகம புராண, சுருதி. ஸ்மிருதி. வுபநிடத. மகாவாக்கிய. தோத்திர கீதபாராயண பாஷியங்களால் கொண்டாடத்தக்க பரமேஸ்வரனுகியும்,

இருக்கு. எசுர், சாமம், அதர்வணமென்னு நான்கு வேத ஸ்வரூபமாகியும், ஸ்ரீ நீலகண்டனுய், தேவ தேவார்ச்சித சேகரனுய், மலரஹித

னாய், அநாதி முத்த நித்யாதீத சொரூபனாய், தத்துவத்தை யொடுக்கிச்
சுத்தமாயையை யொழித்து நித்திய வ்யாபகமாய், ஞானத்தினிற்சிறந்த
பெரியோர்களுக்கு ணிறைந்த சித்விலாச சம்புகேஸ்வரனாகியும், (முத
லில் கோழியைப்போல அடைக்காத்து பத்திய மிகுத்தல்போல், ஆசார
வனுட்டான விரத மந்திர சேவை, பக்தி முதலியவைகளை யெவ்வவ
சரத்தும் விடாதுழைத்தும், அதன்பின் தீவிரதரபக்குவம் கைவர,
ஆமையைப்போல் முட்டையிட்டு அடைக்காக்குங் கஷ்டமின்றியும்,
அதிதீவிரதரபக்குவம் கைவர நிலைத்தும், மீனைப்போல இந்திரியப்பார்
வையினால் மாத்திரமே நிலைகொண்டிருத்தல் போல, மனதையொடுக்கி
அறிவு மாத்திரமாய் சச்சிதானந்த பூரண விலாசசிவத்துடன் சிதாபாஸ்ய
சொச்சொரூபமா யென்றுமொரு படித்தாய், எல்லாமா யியாவினுளும்
வ்யாபகமூர்த்தமாய், பிறப்பிறப்பின்றிநித்யாபரோக்ஷ விதேகதேக போக்
தாவாய் இரண்டற்ற சாயுஜ்ய சித்தாத்ம பரஹித பரமானுபவ ஞானதேகி
யாய்) விளங்கும் மேலவர்க்குள் என்று நீங்காது சர்வான்மப் பகுதியுமா
யினிது விளங்குஞ் சந்திரசேகரனாகியும், ஓம் ஹரஹர சிவசிவ மகா
தேவ சம்போ சங்கரா அரஹர மகாதேவ யென சதாக்கனவினும் நினை
வினு மறவாது சிந்திக்கு முண்மையன்பர்களையும், கற்பு[illegible]வர்தனது
கழுத்தில் மாங்கல்யத்தினாலும், முகத்தில் மஞ்சள் குங்குமத்தினாலும்,
சுமங்கலியென்றுந் தனக்கோ ராடவனுளனென்றும், அன்னவன் கட்
டளையைப் பிறழ்ந்து மாறுபடு சிந்தைக் காட்படின் ஒழியாத வாதையும்
பழியுமேற்படுவது முக்காலத்து முண்மையென கௌதம ரிஷியினால்
தன்மனைவியாகிய அகலிகை இந்திரன் மோகத்தினால் கல்லாக சாபம்
பெற்றனள், இந்திரன் பூனையாய் மாறியும் தேகமுழுதுங் கண்ணாகச்
சாபம் பெற்றனன். பத்தாவின் விரதத்தில் மிகுந்த ஓர்ப்பதிவிரதை
துறவறமடைந்த கொங்கணரைச் சேயித்தாள். எனயேற்படுதெற்
கிணங்க, புருடனைவிட்டுப் பிரியாத வசிட்டருடைய மனைவியெனும்
அருந்ததி நட்சத்திரமாகிய அம்மையாரைப்போன்ற சிவனடியார்க
ளாகிய பக்தர்கள், ஒருக்காலும் விட்டுப் பிரிவதற்கு கிஞ்சித்து மனமில்
லாது சதா வெகு வபேட்சையுடன் அணிந்தும், பூணும்படியான திருநீ
றென்னும் (மலத்தைக் கெடுத்து) சுத்த சித்தனாக மனத்தூய்மையனாகி,
ஆபாசமாகிய தானென்னும் மமகார அஞ்ஞான விருட்சத்தை ஞானாக்கினி
யென்னும் மந்திரதாரணமாம் சிவயநம’ எனும் பாஞ்சாக்கரத்தினாற்
சுட்டெரித்துப் புனிதனாக்கத் தக்கதும், புண்ணியஞ்செய்தார்க்கன்றி, மற்
றெவ்வகையினும் பெறுதற்கு அதாவது பூசுவதற்கு யெட்டுணையும்வாய்க்
காதெனும் அரும்பெருஞ் செல்வமாகிய விபூதியும், ஊனக்கண்ணை
மறைத்து ஞானக்கண்ணால் தன்னையுள்ளபடி யறிந் தறிவானந்தப்பெ

ரும்பிழம்பை யனுக்ரஹஞ் செய்யக்கூடிய, உருத்திராக்கமாலையும், அணிந்து நிர்ச்சிந்தையராய் 'கணவனோடுடன்கட்டையேறு முத்தமி போலும். தாய்த்தந்தையைப் பிரியாத மக்கட்போலும், கறவையை நீங்காத கன்றைப்போலும், குரு தெய்வதரிசன சேவையை யெவ்வவதரத்து மறக்காத மெய்த்தொண்டர்கட்போலும், "கன்மேந்திரியத்தை யடக்கி ஞானேந்திரியத்தின் மயமாய் விளங்குஞ் சர்க்குண விலாச சம்பன்னர்கட் களவில்லாத வானந்த பரம புருஷார்த்தக் கடவுளாகியும்,

## ஸ்ரீமத் - தாயுமான சுவாமிகள்.

### ஆகாரபுவனம் - சிதம்பரரகசியம்.

ஆதியந்த மெனுமெழுவா யீறற்றோங்கி யருமறையின் னமுங்காணா தரற்ற நாளு, பேதமதங்களுமலைய மலைபோல்வாதப் பெற்றியரும் வாய் வாதப் பேயராகச், சாதகமோனத்தி லென்ன வடவானீழற் றண்ணருட் சந்திரமௌலி தடக்கைக்கேற்க, வேதகசின்மாத்திரமா யெம்மனோர்க்கும் வெளியாக வந்தவொன்றே விமலவாழ்வே.

விமலமுதற் குணமாகி நாற்றெட்டாதி வேதமெடுத் தெடுத்துரைத்த விருத்திக்கேற்க, வமையுமிலக்கணவடிவா யதுவும் போதா தப்பாலுக் கப்பாலா யருட்கண்ணாகிச், சமமுடன் கலப்புமவிழ் தலுமியாங்காணத் தண்ணருடந் தெமைக்காக்குஞ் சாட்சிப்பேறே, யிமையளவுமுபகார மல்லால் வேறொன் றியக்காநிர்க்குணக்கடலா யிருந்தவொன்றே.

ஒன்றாகிப் பலவாகிப் பலவாக்கண்ட வொளியாகிவெளியாகி யுருவுமாகி, நன்றாகித் தீதாகி மற்றுமாகி நாசமுடனுற்பத்தி நண்ணாதாகி, யின்றாகி நாளையுமாய் மேலுமான வெந்தையே யெம்மானே யென்றென்றேங்கிக், கண்ணாகிக் கதறினர்க்குச் சேதாவாகிக் கடிதினில்வந் தருள் கூருங் கருணைவிண்ணே.

அதுவென்றாலெதுவெனவொன் றடுக்குஞ் சங்கை யாதலினா லதுவெனலு மறவே விட்டு, மதுவுண்ட வண்டெனவுஞ் சனகனாதி மன்னவர்கள் சுகர் முதலோர் வாழ்ந்தாரென்றும், பதியிந்த நிலையெனவு மென்னையாண்ட படிக்குநிருவிகற்பத்தாற் பரமானந்த, கதி கண்டு கொள்ளவுநின் னருள்கூரிந்தக் கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன்.

அன்றுமுத லின்றைவரைச் சனனகோடி யடைந்தடைந்திங் கியாதனையாலழிந்ததல்லா, லின்றைவரை முத்தியின்றே யெடுத்ததேக மெப்போதோ தெரியாதே யிப்போதோதான், றுன்னுமனக் கவலைகெடப்புலை

நாயேனைத் தொழும்புகொளச் சீகாழித் துறையேதூது, சென்றிடவே பொருளைவைத்த நாவலோய்நஞ் சிவனப்பா வென்றவருட் செல்வத் தேவே.

தேவர்தொழும் வாதவூர்த் தேவே யென்பேன் றிருமூலத்தேவே யிச் சகத்தோர்முத்திக், காவலுறச் சிவவென்வாக் குடனேவந்த வரசே சும்மாவிருந்துன் னருளைசாரப், பூவுலகில் வளரருண கிரியேமற்றைப் புண்ணியர்கா ளோவென்பேன் புரையொன்றில்லா, வோவியம்போல சைவறவுந்தானே நிற்பே ஞேதரியதுயர்கெடவே யுரைக்குமுன்னே.

## ஆசையெனும்.

அண்டமுமாய்ப் பிண்டமுமா யளவிலாத வாருயிருக் கோருயிராயம ர்ந்தாயானுற், கண்டவரார் கேட்டவரா ருன்ஞலுன்னைக் காண்பதல்லா லென்னறிவாற் காணப்போமோ, வண்டுளப மணிமார்பன் புதல்வனேடு மனைவியொடுங் குடியிருந்து வணங்கிப்போற்றும், புண்டரிக புரத்தினி ஞதாந்தமௌன போதாந்த நடம்புரியும் புனிதவாழ்வே.

## ஹரதத்தஸஹஸ்ரம்.

“காயத்ரீ வல்லபத்வாத் தசரத தநயஸ்தாபிதாராதி தத் வாச்சளரே: கைலாச யாத்ராவ் ரதமுதித தயாபீஷ்ட சந்தா நதாநாது நேத்ரேணஸ்வேந ஸாகம் தசசத கமலைர் விஷ்ணு நாபூஜி தத்வாத்தஸ்மை சுக்ரப்ரதா நாதபிசபசுபதிஸ் ஸர்வதேவ ப்ரக்ருஷ்ட: கந்தர்ப்பத் வம்ஸகத்வாத் கரள கபளநாத் காலகர்வாபஹத்வாத்தைதேயா வாஸபூதத்ரிபுரவி தளநாத் தக்ஷயாகே ஜயத்வாது பார்த்தஸ் யஸ்வாஸ்த்ர தாநாந் நரஹரி விஜயாந் மாதவேஸ்த்ரீசரீரே சாஸ்தஸ்ஸம்பாத கத்வாத பிச பசுபதிஸ் ஸர்வதேவப்ர க்ருஷ்ட: பூமோலோகை ரநே கைஸ்ஸ்த தவிரசிதாராத நத்வாதமீஷா மஷ்டைச்வர்ய ப்ரதா நாத் தசவிதவபுஷா விஷ்ணு நாபூஜி தத்வாத் ஹப்ஸக்ரோடா ங்கதாரி த்ருஹிணமுரஹராத் விஷ்ட சீர்ஷாங்க்ரிகத்வாத் தா நாத்ப்ரக்ஞாந முக்தயோரபிச பசுபதிஸ் ஸர்வதேவ ப்ரக்ரு ஷ்ட: வாரணஸ்யாஞ்சபாராச ரநியமபுஜஸ்தம்பநாத் ப்ராக் புராணம்சீரத்வம்ஸே கேசவேநாச்ரித வ்ருஷவ புஷாதாரி தத் வா ரதத்வாத் அஸ்தோகைர் ப்ரம்ஹப்ர்ஷைரநிச களக தால

ங்க்ருருதா பூஷிதத்வாத் ஜந்மத்வம் ஸாத்ய பாவாதபிச பசுபதிஸ் ஸர்வ தேவ ப்ரக்ருஷ்ட :

### ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள்.

ஓது மண்ணிலை யுதகமிங்கிலை யொளிருந்தேசிலை காலிலைப், பூத விண்ணிலை யிந்தியமிலை புகன்றவைகளின் றிரளிலை, யேதுமேவிப சாரமேவி யிறப்பதாலிச்சுழுத்தியின், மீதியாயுள பூரணனந்த மேனியானசிவோகமே. (க)

சாதியுமிலை யாச்சிரமமிலை சாதியாச்சிரம தருமமா, நீதியுமிலை தாரணையிலை நீதித்தியாசன யோகமே, யாதியுமிலை கற்பனையப வாதவாசிரயமாதலாற், சோதியாய்நிலை நின்றபூரண சுத்தரூப சிவோகமே. (உ)

தந்தைதாயிலை தேவருமிலை தங்குலோகங் களுமிலைச். சந்தவேதங்களில்லையாகங்கள் .சகலதீர்த்தங் களுமிலை, .தொந்தமற்ற சுழுத்தியிற் ரொடராதுநீங்குத லான்மகா, னந்தபூரண சத்தியகேவல ஞான நித்த சிவோகமே. (ங)

பன்னுசாங்கிய சமயமுமிலை பாஞ்சராத்திரமுமிலை, யுன்னுசைனமீமாஞ்சையுமிலை யுலகுண்மற்ற மதமிலை. துன்னுஞானிக ளனுபவப் பிரசித்ததூய சொரூபமாய்ப், பின்னமேயற நின்றபூரணப் பிரமமென்ற சிவோகமே. (ச)

பகருமே லிலை கீழிலைப்பத வுள்ளிலைப்புறமுமிலை, யகலமே நடுவில் குறுக்கிலையாகிழக்கிலைமேற்கிலை, ககனமென்ன நிறைந்தகண்டசிற்ககன கேவலரூபமாய்ச், சுககனச்சொக தாதிபேத விகீன சுத்த சிவோகமே.

வெள்ளையுமிலைக் கருமையுமிலை வேறு பூதசிவப்பிலை. குள்ளமுமிலை நெடியதுமிலை குறைபெருத்தலுமில்லையே, தள்ளி யித்தனை ரூபமுந் தவிராத சோதி சொரூபமா, யுள்ள பூரணஞானவின்ப வுபாதிகீன சிவோகமே. (சு)

சாத்திரந்தனைப் போதிப்பானிலை சாத்திரம் படிப்பானிலை, சாத்திரமிலை பாடமுமிலை சாற்றுநீயிலை நானிலை, சாத்தியாதி சகத்திலைச் சலமற்று மிஞ்சுதலான்மகா, சாத்திரப்பொரு ளான பூரண சாந்தபோத சிவோகமே. (எ)

சாக்கிரமிலை சொர்ப்பனமிலை சார்சுழுத்தி யிலையிதிற், ருக்கு விஸ்வ நிறைசதனிலை தங்கு பிராஞ்ஞனு மில்லைமூன், ருக்கையுமிலையவைய வித்தை விகாரமாதலி னுலிவை, நீக்கிநின்றிடு துரியபூரண நித்தபோத சிவோகமே. (அ)

அதிகவியாபக மாதலா லழிவற்ற தத்துவமென்றதாற், சொதசித் தப்பொரு ளானதாற்றனில் வேறொன்றைத் தொடராததாற். சததமா யுள சிவனொழிந்திஙன் சகமெனும் பொருளேயிலை, யதுவிதென் றுரை செய்வதற்கரி தாமகண்ட சிவோசமே. (க)

சிவோகமாம் அகண்டாகார சுப்ரதீப வனுர்தசடபேதாதீத மனோ வாச்சல்ய சுகாதீதாம்பர கர்த்தவ்ய சொரூபானுமூர்த்த அஷ்டலட்சண சர்வ மங்கள கலியாணகுண பரமாணுபவானந்த சுகதபேதா ப்ரியாத்ம மஹா கார்ய காரண ஆத்மானுசார பயோதர பூதபௌதிக வசேதன சேத னபாஹிய சம்வர்த்த சமயாதீத பிரமாதார வாதேய சனன மரண சம் ஹார நித்யாம்ஸ பக்த ப்ரிய சரண்யாசார தேவ தேவ மஹா தேவ தேவ சம்போ ஹர ஹர சிவ சிவ மஹேஸ்வர ஓம் சிவ சிவ ஓம் சிவய நம ஓம் ஹர ஹர சிவ சிவ சங்கரவென சதா பாராயணஞ் செய்யுந் திருத் தொண்டர்களே பிறப்பிறப்பாகிய பெருஞ் சமுத்திரத்தைத் தாண்டபர மேஸ்வரனின் கருணைக் சருகராவர்களென வேதாகமங்கள் கூறுநிற்கும்.

பிறவியெனும் பெருஞ்சமுத்திரத்தைத் தாண்டவும், நிரதிசயானந்த வாழ்வாகிய யிரண்டற்ற நித்தியாபரோக்ஷ முத்திசாதன சுகாரம்ப சாயுஜ்ய நிலையையடையவும். சாட்சாத்கார சிவபெருமானால் விதிக்கப்பட் டுள்ள விபூதியாகியத் திருநீறு, உருந்திராக்கமுமேயாம். இவைகளை யனு, சரியாதுச் செய்யுந் தவம், தானம், விரதம், அனுட்டானம், மந்திரம் ஆசாரம், சாதனம், இவை முதலாய சத்கருமங்களியாதொரு பலனையுந் தரமாட்டாதெனவும், சிவசின்ன மில்லாதவனை சிநேகிக்கின்றவனும், அவனோடு வழிபடுகின்றவனும், தெய்வ துரோகிகளும், சமயதுரோகி களுமாவார்கள். இறுதியில் அமங்கலியை யனுபவிப்பான் அடையும் ரௌரக வாதனையை யடைவார்களென சிவாகமங்கட் கூறு நிற்கும்.

ஆதலால் உண்மைச் சைவர்கட்கு, விபூதி, உருத்திராக்கம், சடை முடி. இவைகளே சிறந்ததும் விலையில்லாத ஆபரணமுமாதலான். இவை களுக்குச் சமானமான ஆபரணமொன்றுளதாக வொருபோதும் நினை யாதுமிவைகளே சிவானந்தபோகத்தைத் தரவல்லதுவென நம்பி வழி படுவராவர்.

சிவபெருமான் உமாதேவியார்க்குபஞ்சாக்கர வுபதேசஞ் செய்த காலத்து அம்மையார் அதைக் கவனியாது தன்னெதிரில் நடனஞ் செய்த மயிலைப்பார்த்திருந்த குற்றத்தினால் மயில் வடிவந்தாங்கி சிவலிங் கப்பூசைச் செய்து வாமபாகம் பெற்றாரென்றால் சாமனியர்கள் அப் பஞ் சாக்கரதியானமின்றி முத்தியாகிய மோட்சத்தை யடைய நினைப்பது மண்குதிரையினால் ஆற்றைக்கடக்க யெண்ணுதற் கொப்பாகுமென விவேகிகளுணர்வர்.

## சமணவூரைச் சைவமாக்கி அரசாண்டது.

சமணவரசனாற் சந்தனக்கட்டைக் கிடைக்காமலதற்கானி யேற்படத் தன் முழங்கையையே அக்கட்டையாக வெண்ணித் தேய்த்துத் தனது திருப்பணிக்கியாதொரு குறையு மேற்படாது நடத்திய புண்ணியவசத்தினு லச்சமணவரசனிறக்க அவ்வூர்க்கு அதிபதியாக விளங்கிய மூர்த்தி நாயனாரவர்கட்கு அரசனுடைய முடி ஆபரணமுதலியவற்றைக் கொடுத்த காலத்து. விபூதி, உருத்திராக்கம், சடைமுடியே முடியும், ஆபரணமெனவும், அவ்வித ஆசாரமாகிய சைவாகமத்தைக் கைக்கொண்டாலன்றித் தானவ்வரசை யேற்றுக்கொள்ளுவதில்லை யெனவுங் கட்டளையேற்படுத்தி. புறச்சமயமாகிய சமணத்தை யொழித்து சிவசமயத்தையும் விபூதி முதலிய சிவசின்னங்களையும் விர்த்திச்செய்து (விபூதி, உருத்தி. ராக்கம், சடைமுடி) இம்மூன்றினலரசுஞற்றி முத்தியடைந்த மும்மையாலுலகாண்டாரின் அற்புத சரித்திர புண்ணிய முடைத்தவனேயாம்.

## ஒரு துளி விபூதிக்குச் சமமான ஆபரணம் விண்ணுலகத்துங் கிடையாதுத் துலையேறினது.

பார்வதி தேவியாரிடம் சாட்சாத்கார சிவபெருமானல் கொடுக்கப்பட்ட ஒரு துளி விபூதிக்கு நிறைவுள்ளதும், சமானமானதுமான, ஆபரணமுதலிய கனகங்கள், தெய்வலோகத்தும், குபேரன் பட்டனத்தும் மற்றுந் தேவர்களணிந்திருந்த யெப்பொருளும் துலாக்கோலில் தாழ்ந்தனவே யன்றி அவ்விபூதி தூளிதத்திற்குச் சரியொத்திருக்காமையினுலேயே தேவர்களியாவரும், விபூதிக்குச் சமானமான வொருபொருள் எவ்வுலகத்துங் கிடையாதென மனபுளகாங்கிதமாய் தேவர்களெல்லாம் விபூதியைப்போற்றி யெல்லாருந் திரிபுண்டரதாரிகளாக விளங்கினுர்களென்றல் சாமானிய வறிவுடையவர்கள் விபூதியணியாதது அன்னோர் தவக்குறைவும் கன்மத்தின் பலனென வேதாகமங்களாலும் குருமூர்த்திகளாகியப் பெரியோர்களாலும் நிச்சயிக்கப்பட்டது.

## உழவுமண்ணை விபூதியென மதித்து சோழராஜன் வண்ணானைக் கும்பிட்டது.

உழவு மண்ணினுல் தேகமுழுவதும் வெண்மையாகத்தெரிந்த ஓர் வண்ணானை முழுநீறுப் பூசிய முனிவரென வெண்ணிச் சோழமகாராசன் அவ்வண்ணானின் பாதத்தைக் கும்பிட்டதாக யேற்பட்டதென்றல், (உழவு மண்ணிற்கே யித்தகைய சிறப்புவுண்டானதெனில்) ஆகம விதிவத்தாய் செய்யப்பட்டு பூசும் திருவெண்ணீருகிய விபூதிக்கு உண்டாகும்

மகிமை, அருள், கிருபை, பெருமை, வலி, ஞானம், இவை முதலாகிய அளவிறந்த மஹா அற்புத சிறப்பினைப் பற்றி அனுபவிகளேயன்றி மற்ற வொருவராலுஞ் சொல்லத்திறமன்றென வேதங்களெடுத் தோதா நிற்கும்.

## விபூதி மஹாத்மியம்.

### யஜுர்வேதம்-தைத்திரியோபநிஷத்வாக்கியம்.

ஸத்யாந்நப்ரமதிதவ்யம் - தர்மாந்நப்ரமதிதவ்யம்
குசலாந் நப்ர மதிதவ்யம் - பூத்யை நப்ரமதிதவ்யம்
ஸ்வாத்யாய ப்ரவச நாப்யாந் நப்ரமதிதவ்யம்

(இதன் பொருள்) சத்தியத்தில் நின்றுந் தவரக்கூடாது ; தர்மத்தில் நின்றுந் தவரக்கூடாது ; க்ஷேமத்தில் நின்றுந் தவரக்கூடாது (அதாவது தன்னைப் பாதுகார்ப்பவன் க்ஷேமத்தைக் கோருமலிருக்கக்கூடாது) விபூதியைக் கைவிடக்கூடாது ; வேதத்தை கற்றுக்கொள்ளுதல், பிறருக் கோதி வைத்தல் இதுகளினின்றுந் தவரக்கூடாது.

வேதத்தில் கன்மகாண்டமென்றும், ஞானகாண்டமென்றும் இருவகைப்படும். அதில் விரதம், யாக முதலான கன்மங்களைச் செய்வதால் ஸ்வர்க்காதிபோகங்கள் சித்திக்குமென்று கூறியதைக் கன்மகாண்டமென்றும், சிரவண மனனாதிகளால் பசுபாசங்களையும் இகபரசாதனங்களான புருஷார்த்தங்களையுந் தொலைத்து ஸர்வம் மித்தை சிவமொன்றேயுளது என்று ததேகத்தியானபராளாய் ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருப்போர்களுக்கு முக்தி யென்றுரைத்ததை ஞானகாண்ட மென்றுஞ் சொல்லப்படும்.

கன்மகாண்டம், ஞானகாண்டமென் றிருபகுதிகளால் "பூத்யை நப்ரமதிதவ்யம்" என்கிற மஹா வாக்கியம் ஞானகாண்டத்திலுளது. அப்படி ஞானகாண்டத்தில் உத்கோஷித்த "பூதி" சப்தத்திற்குச் செல்வப்பொருள் கூறுவது கூடாது. அந்த "பூதி" சப்தம் கன்மகாண்டத்திலுளதேல் திரவிய பரமாய்ப் பொருள்படும். அப்படிக்கில்லாமல் "பூதி" சப்தம் ஞானகாண்டத்திலிருப்பதாலும் ஞானகாண்டம் ஐசுவரியத்தை விரும்பும்படி விதிக்காததலாலும் பூதி சப்தத்திற்கு பஸ்மபரமாய் பொருள் கூறுவதே உசிதம். மேலும் ஐசுவரியத்தால் வருந்தீங்குகளளவற்றது. ஆதலாற்றான் ஞானகாண்டம் ஐசுவரியத்தைப் பலவாறு நிஷேதித்திருக்கிறது தவிர ஞானமார்க்கத்தில் பிரவேசிப்போர் ஐசுவரியாதி போகங்களை விரும்பார்; விரும்புவோர் ஞானியாவது ஒருக்காலுமில்லை.

## கூர்மபுராணம்.

த்விஜாதிர் வாந்தயஜாதிர்வா ஸிதசுத்தேந பஸ்மநா
தாரயேத்யஸ் த்ரிபுண்டராங்கம் நத்ராஸ்தேநவசீக்ருத:

(இ-ள்) அந்தணராலும் சூத்திரஜாதியாலும் வெண்மையாயும் பரிசுத்தமாயுமிருக்கிற பஸ்மத்தாலெவன் திரிபுண்டரந் தரிக்கிறானோ அவன் சிவனை வசியப்படுத்திக் கொண்டவன்.

## பராசரஸ்மிருதி.

சிவஸ்ய விஷ்ணோர் தேவாநாம் ப்ரம்மணஸ் த்ருப்திகாரணம்
பார்வத்யாஶ் சமஹாலக்ஷ்ம்யா பாரத்யாஸ் த்ருப்திகாரணம்
பஸ்ம நாவேதமந்த்ரேண த்ரிபுண்டரஸ்யதுதாரணாத்.

(இ-ள்) வேத விதிப்படி பஸ்மத்திரிபுண்டரந்தரிப்பதால், ஈசனுக்கும், கேசவனுக்கும், பிரமனுக்கும், பார்வதிக்கும், லக்ஷ்மிக்கும், சரஸ்வதிக்கும், திருப்தியுண்டாகிறது.

## (சாமவேதம்) காலாக்கிருத்ரோபநிஷத்.

“ ஆக்நேயம் பஸ்மஸத்யோஜாதமிதி பஞ்சபிர்மந்த்ரை:
ப்ரக்ருஹ்ய அக்நிரித்யநே நசாபி மந்த்ரிய மாநஸ் தோகஇதி
ஸமுத்ருத்ய ஜலேநஸம் ஸ்ருஜ்ய சிரோலலாட வக்ஷஸ்கந்தேஷு
த்ரியாயு ஷைஸ்த்ரியம்பகைஸ் திர்யக் திஸ்ரோரேக: ப்ர [தம்
குர்வீத வ்ரதமேதச் சாம்பவம் ஸர்வவேதேஷு வேதவாதிபிருக்
பவதி தஸ்மாத் ஸமாசரேத்தம புநர்பவாயத்ரிவிதாரேகாஸ்
திரிபுண்டர ப்ரமாணம் த்ரிதாசாலலாடா தௌசக்ஷு
ஷோராப்ருவோரிதி தத்ரைவப்ர ஸம்ஸாரசஸூயதே
த்ரிபுண்டரம் பஸ்மநாகரோதியோ வித்வாந்
ப்ரம்மசாரீ க்ரஹஸ்தோ வாநப்ரஸ்தோ யதிர்வா [வாந்
ஸமஸ்த மஹாபாதகோபபாதகேப்ய: பூதோபவதிஸஸ்வ தே
த்யாதோபவதி ஸஸர்வேஷு தீர்தேஷுஸ்நாதோபவதிஸஸர்வ
ஸம்பத்ஸம்ருத்தோபவதி ஸஸர்வருத்ர மந்த்ரஜாபீபவதி [தி
ஸஸாவபோகயுக்தோ தேஹம்த்யக்தவாசிவஸாயுஜ்யமாப்நோ
நசபுநராவர்ததே நசபுநராவர்தத இத்யாஹ பகவாந்காலாக்
[நிருத்ர:

(இ-ள்) அக்கினியினுல் சமஸ்காரஞ் செய்யப்பட்ட பஸ்மத்தை ஸத்யோஜாதாதி ஐந்து பிரம மந்திரத்தினுல் ஜபித்தெடுத்து இடது கையில் வைத்துக்கொண்டு வலது கையினுல் மூடி பன்னிரண்டு தடவை பிரணவத்தை ஜபித்து ஜலத்தால் நனைத்து சிரசிலும், நெற்றியிலும், மார்பிலும், தோளிலும், குருக்காக மூன்று ரேகைகளாக வணிந்துக்கொள்ள வேண்டும். இந்த சாம்பவ விரதமானது ஸமஸ்த வேதங்களிலும் விதிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் மறுபிறப்பில்லாமலிருப்பதற்காக இந்த பஸ்மதாரணத்தை மூன்று ரேகைகளாகக்கொள்ளவேண்டும். நெற்றியில் இரண்டு கண்களின் புருவத்தின் முனைவரையில் தரிப்பதுதான் திரிபுண்டரமென்று சொல்லப்படும்.

எவ்வகைப்பட்ட வித்வானும், பிரமசாரியும், கிரகஸ்தனும், வானப்பிரஸ்தனும், சந்நியாசியும், திரிபுண்டர தாரணஞ்செய்து கொள்ளுகிருனே அவன் ஸமஸ்த பாதகத்தில் நின்றும் புனிதனுகிருன்; தன்னிஷ்டதேவதையைத் தியானித்தவனுகிருன்; சகல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தவனுகிருன்; சகல சம்பத்துகளிலும் நிறைந்தவனுகிருன்; ஸமஸ்த சாம்பவ மந்திரத்தை யெப்பொழுதும் ஜபித்தவனுகிருன்; இல்லறத்திலெல்லா போகங்களையு மனுபவித்து தேகத்தை விட்டு சிவஸாயுச்சிய மடைகிருனென்றும் பழையபடியு மிக்கன்ம பூமியில் ஜனிக்கிறதில்லை ஜனிக்கிறதில்லை யென்று தேவாதி தேவனுன பரமசிவனருளினுர்.

## உருத்திராக்கம்.

### பிரமோத்தரகாண்டம்.

எத்தகையரேனுமிழி வெய்து தொழில் செய்யு, மத்தகையரேனு முமை யன்பனைவழுத்துஞ், சித்தமிலரேனுமிறை சீர்மணிதரித்தான், முத்தரவரென்றுமறை முற்றுமுறை செய்யும்.

ஆயமாமணி யாயிரம்புனைந்திடிலவரை, மாயனுன்முகன் புரந்தரன் வானவர் முதலோர், பாயுமால்விடைப் பரனெனப் பணிகுவரென்முற், றூயமாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்வீர்.

## பஞ்சாக்கரம்.

### ஸ்ரீமத்-திருஞான சம்பந்த சுவாமிகள்.

### திருப்பஞ்சாக்கரப் பதிகம்-பண்-காந்தாரபஞ்சம்.

துஞ்சலுக துஞ்சலிலாத போழ்தினு, நெஞ்சகைந்து நினைமினுடொறும், வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற், றஞ்சவுதைத்தன வைந்தெழுத்துமே. (க)

மந்திர நான்மறை யாகிவானவர், சிந்தையுணின்றவர் தம்மை யாள்வன, செந்தழலோம்பிய செம்மை வேதியர்க், கந்தியுண்மந்திரமஞ் செழுத்துமே. (௨)

ஊனிலுயிர்ப்பை யொடுக்கியொண்சுடர், ஞான விளக்கினையேற்றி நன்புலத், தேனை வழிதிறந் தேத்துவர்க்கிட, ரானகெடுப்பனவைந் தெழுத்துமே. (௩)

நல்லவர் தீய ரெனாதுநச்சினர், செல்லல்கெடச்சிவ முத்திகாட்டுவ, கொல்ல நமன்றமற் கொண்டுபோமிடத், தல்லல் கெடுப்பனவஞ் செழுத்துமே. (௪)

கொங்கலர் வனமதன் வாளியைந்தகத், தங்குளபூதமு மஞ்சவைம் பொழிற், றங்கர வின்பட மஞ்சுந்தம்முழை, யங்கையி லைவிர லஞ் செழுத்துமே. (௫)

தும்ம லிரும றொடர்ந்தபோழ்தினும், வெம்மை நரகம் விளைந்த போழ்தினு, மிம்மை வினையடர்த் தெய்தும்போழ்தினு, மம்மையினுந் துணையஞ்செழுத்துமே. (௬)

வீடு பிறப்பை யறுத்துமெச்சினர், பீடை கெடுப்பன பின்னை நாடொறு, மாடு கொடுப்பன மன்னுமானட, மாடி யுகப்பன வஞ் செழுத்துமே. (௭)

வண்டம ரோதி மடந்தைபேணின, பண்டையி ராவணன் பாடி யுய்ந்தன, தொண்டர்கள் கொண்டு துதித்தபின்னவாக், கண்ட மளிப் பன வஞ்செழுத்துமே. (௮)

கார்வண னான்முகன் காணுதற்கொணாச், சீர்வணச் சேவடி செவ் விநாடொறும், பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட், கார்வண மாவன வஞ்செழுத்துமே. (௯)

புத்தர் சமண்கழுக் கையர்பொய்கொளாச், சித்தத்தவர்க டெளிந்து தேறின, வித்தக நீறணி வார்வினைப்பகைக், கத்திர மாவன வஞ் செழுத்துமே. (௧௦)

நற்றமிழ் ஞானசம் பந்தனான்மறை, கற்றவன் காழியர் மன்ன னுன்னிய, வற்றமின் மாலையீ ரைந்துமஞ்செழுத், துற்றன வல்லவ ரும்பராவரே. (௧௧)

---

## நமச்சிவாயத் திருப்பதிகம்-பண்-கௌசிகம்.

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி, யோதுவார்தமை நன்னெறிக் குய்ப்பதும், வேத நான்கினு மெய்ப்பொருளாவது, நாதனும நமச்சிவாயவே.

நம்புவார் நமர் நாமநவிற்றினல், வம்பு நண்மலர் வார்மது வொப்பது, செம்பொனர்தில தம்முலகுக்கெலா, நம்ப னும நமச்சிவாயவே. (உ)

நெக்கு ளார்வ மிகப்பெருகிந்நினைந், தக்குமாலை குடங்கையி லெண்ணுவார், தக்க வானவ ராத்தகுவிப்பது, நக்க னும நமச்சிவாயவே. (ங)

இயமன் றூதரு மஞ்சுவரின்சொலா, னயம்வந் தோதவல் லார்தமை நண்ணினு, னியமந் தானினை வார்க்கினி யானெற்றி, நயன னும நமச்சிவாயவே. (ச)

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைக, ளில்லா ரேனு மியம்புவராயிடி, லெல்லாத் தீங்கையு நீங்குவரென்பரா, னல்லார் நாம நமச்சிவாயவே. (ரு)

மந்தரம் மன்ன பாவங்கண்மேவிய, பந்தனை யவர்தாமும் பகர்வரேற், சிந்தும் வல்வினை செல்வமுமல்குமா, னந்தி நாம நமச்சிவாயவே. (சு)

நரக மேழ்புக நாடினராயினு, முரைசெய் வாயின ராயினுருத்திரர் திரவியே புகு வித்திடுமென்பரால், வரத னும நமச்சிவாயவே. (எ)

இலங்கை மன்ன னெடுத்தவடுக்கன்மேற், றலங்கொள் கால்விரல் சங்கரனூன்றலு, மலங்கி வாய்மொழி செய்தவனுய்வகை, நலங்கொ ளும நமச்சிவாயவே. (அ)

போதன் போதன கண்ணனுமண்ணறன், பாதந் தான்முடி நேடியபண்பரா. யாதுங் காண்பரி தாகியலர்ந்தவ, ரோது நாம நமச்சிவாயவே. (கூ)

கஞ்சி மண்டையர் கையிலுண்கையர்கள், வெஞ்சொன் மிண்டர் விரவிலரென்பரால், விஞ்சை பண்டர்கள் வேண்டவமுதுசெய், நஞ்சுண் கண்ட நமச்சிவாயவே. (க0)

நந்தி நாம நமச்சிவாயவெனும், சந்தை யாற்றமிழ் ஞானசம்பந்தன் சொற், சிந்தை யான்மகிழ்ந் தேத்தவல்லாரெல்லாம், பந்த பாச மறுக்க வல்லார்களே. (கக)

## ஸ்ரீமத் - திருநாவுக்கரசு சுவாமிகள்.

### நமச்சிவாயப்பதிகம் - பண்-காந்தாரம்.

சொற்றுணை வேதியன் சோதிவானவன், பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக், கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும், நற்றுணை யாவது நமச்சிவாயவே (க)

பூவினுக் கருங்கலம் பொங்குதாமரை, யாவினுக் கருங்கலம் அர னஞ்சாடுதல், கோவினுக் கருங்கலங் கோட்டமில்லது, நாவினுக் கருங் கல நமச்சிவாயவே. (உ)

விண்ணுற வடுக்கிய விறகின்வெவ்வழ, லுண்ணிய புகிலவை யொன்றுமில்லையாம், பண்ணிய வுலகினிற் பயின்றபாவத்தை, நண்ணி நின் றறுப்பது நமச்சிவாயவே. (௩)

இடுக்கண்பட் டிருக்கினு மிரந்தியாரையும், விடுக்கிற்பிரானென்று வினவுவோமல்லோம், அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளினுமுற்ற, நடுக்கத் தைக் கெடுப்பது நமச்சிவாயவே. (௪)

வெந்தீநீ றருங்கலம் விரதிகட்கெலா, மந்தணர்க் கருங்கல மரு மறையாறங்கந், திங்களுக் கருங்கலந் திகழுநீண்முடி, நங்களுக் கருங்கல நமச்சிவாயவே. (௫)

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால், நலமில ஞடொறு நல்கு வானவன், குலமில ராகிலுங் குலத்திற்கேற்பதோர், நலமிகக் கொடுப் பது நமச்சிவாயவே. (௬)

வீடினு ருலகினில் விழுமிய தொண்டர்கள், கூடினு ரந்நெறி கூடச் சென்றலு, மோடினே னேடிச்சென் றுருவங்கண்டாலு, நாடினே னடிற்று நமச்சிவாயவே. (௭)

இல்லக விளக்கது விருள்கெடுப்பது, சொல்லக விளக்கது சோதி யுள்ளது, பல்லக விளக்கது பலருங்காண்பது, நல்லக விளக்கது நமச்சி வாயவே. (அ)

முன்னெறி யாகிய முதல்வன்முக்கணன், தன்னெறி யேசர ணுதல் திண்ணமே, யந்நெறி யேசென் றங் கடைந்தவர்க்கெலாம், நன்னெறி யாவது நமச்சிவாயவே (௯)

மாப்பிணை தழுவிய மாதோர்பாகத்தன், பூப்பிணை திருந்தடி பொருந்தக்கைதொழ, நாப்பிணை தழுவிய நமச்சிவாயப்பத், தேத்தவல் வார்தமக் கிடுக்கணில்லையே. (க0)

## திருப்பாதிரிப்புலியூர்—திருவிருத்தம்.

வைத்தபொருணமக் காமென்றுசொல்லி மனத்தடைத்துச், சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கினல்லான், மொய்த்த கதிர்மதி போல்வாரவர்பா திரிப்புலியூர், அத்தனருள்பெற லாமோவறிவிலாப் பேதை நெஞ்சே. ௫

## திருமாற்பேறு—திருக்குறுந்தொகை

ஏதுமொன்று மறிவிலராயினும், ஓதியஞ்செழுத் தும்முணர்வார்கட்குப், பேதமின்றி யவரவருள்ளத்தே, மாதுந்தாமு மகிழ்வர்மாற்பேறரே. ௧

இருந்து சொல்லுவன் கேண்மின்களேழைகாள், அருந்தவந்தரு மஞ்செழுத்தோதினல். பொருந்துநோய்பிணி போகத்துரப்பதோர், மருந்துமாகுவர் மன்னுமாற்பேறரே. ௪

## சித்தத்தொகை—திருக்குறுந்தொகை.

நமச்சிவாயவென் பாருளரேலவர், தமச்சநீங்கத் தவநெறிசார்தலா. லமைத்துக்கொண்டதோர் வாழ்க்கையனுகிலு, மிமைத்து நிற்பது சாலவரியதே. ௨௨

## தனித்திருக்குறுந்தொகை.

நமச்சிவாயவே ஞானமுங்கல்வியும், நமச்சிவாயவே நானறி விச்சையும், நமச்சிவாயவே நாநவின்றேத்துமே, நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே. ௨

## தனித்திருநேரிசை.

சந்திரன் சடையில்வைத்த சங்கரன்சாமவேதி. அந்தரத் தமரர்பெம்மா னனல்வெள் ளூர்தியான்றன். மந்திர நமசிவாய வாகநீறணியப்பெற்றால், வெந்தறும் வினையும்நோயும் வெவ்வழல்விறகிட்டன்றே ௪

## ஸ்ரீமத்—மாணிக்கவாசகசுவாமிகள்.

போற்றியோ நமச்சிவாய புயங்கனே மயங்குகின்றேன், போற்றியோ நமச்சிவாய புகலிடம் பிறிதொன்றில்லை, போற்றியோ நமச்சிவாய புறமெனைப் போக்கல்கண்டாய், போற்றியோ நமச்சிவாய செயசெய போற்றி போற்றி.

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநமவெனப் பெற்றேன், றேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான், றானேவந் தெனதுள்

ளம் புகுந்தடியேற்கருள்செய்தா, னூனுரு முயிர்வாழ்க்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.

## ஸ்ரீமத்-திருமூலர் திருமந்திரம்.

ஐம்பதெழுத்தே யனைத்து வேதங்களு, மைம்பதெழுத்தே யனைத்தாகமங்களு, மைம்பதெழுத்தி னடைவை யறிந்தபி, னைம்பதெழுத்தே யஞ்செழுத்தாமே.

தெள்ளமு தூறச் சிவாயநமவென்று, வுள்ளமு தூற வொருக்காலுரைத்திடும், வெள்ளமு தூறல் விரும்பியுண்ணுதவர், துள்ளிய நீர்போற் சுழல்கின்றவாறே.

குருவழி யாய குணங்களினின்று, கருவழி யாய கணக்கையறுக்க, வரும்வழிமான மறுக்கவல் லார்கட், கருள்வழி காட்டுவ தஞ்செழுத்தாமே.

## உபதேசகாண்டம்.

அஞ்செழுத்தெனு மருமறை மந்திரமதனை, நெஞ்சழுத்துவர் முழுமுதற்றேவனை நிகர்ப்பார், பஞ்சபாதகர்மீதுமற் றவர்நிழற்படினுஞ், செஞ்செவேயவர்க் காண்கினும் பவந்தொலை செல்லும்.

அஞ்சுதிருவுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை, நெஞ்சினினைவாசிதழியொடுநீணிலாப், பிஞ்சுபுனையும் பெருமானே யென்பதல்லால், வஞ்சமருத்தீரவரையென்னென்று வாழ்த்துகேன்.

ஆதியருளுருவம் பெற்றெடுத்த வஞ்செழுத்தை, யோதியுணர்ந்தாரை யுள்ளத்துணர்ந்தாலுந், தீதுபிறப்பறுப்பா ரன்னவர்க்குத் தீங்கிழைப்பார், போதுநரகினிக்கு மண்ணுத்தல் போகாதே.

## வாயுசங்கிதை.

அண்ணலாமீசன்சொன்ன மந்திரமநேகமுண்டா, லெண்ணிவிவ் வஞ்செழுத்தோ டிணையிலதாகுமொன்றும், பண்ணமை வேதநான்கும் பழுதில் சாத்திரங்களாறு, நண்ணுமாலெவைக்குமேலா நவையிலஞ்செழுத்தின் மன்னே.

## சிவதருமோத்தரம்.

ஆதிதனி லோமென்னும் பதமதாக வந்தமதிற் சிவாயவொலி யணைந்துநிற்க, வோதியவா றெழுத்தினையு முடைத்தேயிந்த வோமென்னும் பதப்பொருடா னுயிர்கட்கெல்லாம், போதகனுய்ப் பொருவிலியாய் நிற்குமீசன் புனிதனவன் சத்திவித மைந்துமற்றை, யேதமிலா வஞ்செழுத்தின் பொருளே யெண்ணி லிருபயனு முயிரடையு மிவற்றுலென்றும்.

## கடம்பவன புராணம்

அஞ்செழுத்தினு ளோரெழுத் தின்பயனளவைக், கஞ்சநாண்மலர்க் கண்ணனுங் கண்ணனுங்காணர், செஞ்சவேபிர ணவத்தொடுஞ் சேர்த் தியுச்சரிக்கிற், பஞ்ச பாதக ராயினும்பரனெனப் படுவார்.

## ஸ்ரீமத்-தாயுமான சுவாமிகள்.

அஞ்செழுத்தி னுண்மை யதுவான வப்பொருளை
நெஞ்சமுழுத்தி யொன்ருகி நிற்குநா ளெந்நாளோ.

## பட்டினத்தடிகள்.

தவியாதிரு நெஞ்சமேதில்லை மேவிய சங்கரனைப், புவியார்ந் திருக் கின்ற ஞானகரனைப் புராந்தகனை, யவியாவிளக்கைப்பொன் னம்பலத் தாடியை யைந்தெழுத்தாற், செவியாம னீசெவித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே.

மாடுண்டு கன்றுண்டு மக்களுண்டென்று மகிழ்வதெல்லாங், கேடுண் டெனும்படி கேட்டுவிட்டோமினிக் கேள்மனமே, யோடுண்டு கந்தை யுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு, தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே.

உரைக்கைக்குநல்ல திருவெழுத்தைந்துண் டுரைப்படியே, செருக் கித்தரிக்கத் திருநீறுமுண்டு தெருக்குப்பையிற், றரிக்கக்கரித்துணி யாடை யுமுண்டெந்தச் சாதியிலு, மிரக்கத்துணிந்துகொண்டேன் குறையேது மெனக்கில்லையே.

நாய்க்குண்டுதெண்டு நமக்குண்டுபிச்சை நமனைவெல்ல, வாய்க்குண் டுமெந்திர பஞ்சாட்சர மதியாமல்வரும், பேய்க்குண்டுநீறு திகைப்புண்டு நின்ற பிறவிப்பிணி, நோய்க்குண்டு தேசிகன் றன்னருணோக்கங்க ணோக்குதற்கே.

அஞ்சக்கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும், வஞ்சப்பு லக்கட்டை வேரற வெட்டி வளங்கள்செய்து, விஞ்சத்திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப், புஞ்சக்களை பறித்தேன் வளர்த்தேன் சிவ போகத்தையே.

## வெண்பா.

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல்விழுந்தே
யுற்ரு ரழுமுன்னே யூரார் சுடுமுன்னே
குற்ருலத் தானையே—கூறு.

## ஸ்ரீமத்-திருநாவுக்கரசு சுவாமிகள்
## பாவநாசம்-திருக்குறுந்தொகை.

கங்கையாடிலென் காவிரியாடிலென், கொங்குதண் குமரித்துறை யாடிலென், ஓங்குமாகட லோதநீ ராடிலென், எங்குமீச னெனாதவர்க் கில்லையே.

பட்டராகிலென் சாத்திரங்கேட்கிலென், இட்டமெட்டியு மீதொழில் பூணிலென், எட்டுமொன்று மிரண்டுமறியிலென், இட்டமீச னெனாத வர்க்கில்லையே.

வேதமோதிலென் சாத்திரங்கேட்கிலென், நீதிநூல்பல நித்தல்பயிற் றிலென், ஓதியங்கமோரா றுமுணரிலென், ஈசனைவுள்கு வார்க்கன்றியில் லையே.

காலைசென்று கலந்துநீர்மூழ்கிலென், வேலைதோறும் விதிவழிநிற்கி லென், ஆலைவேள்வி யடைந்ததுவேட்கிலென், எலவீசனெனன் பார்க்கன் றியில்லையே.

கானநாடு கலந்துதிரியிலென், ஈனமின்றி யிருந்தவஞ்செய்யிலென் ஊனையுண்ட லொழிந்துவானோக்கிலென், ஞானனென்பவர்க் கன்றிநன் கில்லையே.

கூடவேடத்த ராகிக்குழுவிலென், வாடியூனை வருத்தித்திரியிலென், ஆடல்வேடத்த னம்பலக்கூத்தனைப், பாடலாளர்க்கல் லாற்பயனில்லையே.

சகல சொரூபானந்த ஷட்பாவ குணரஹித மனோவாச்சல்ய திடச் சித்தத்தினாலும், பூர்வவாசனையின் புண்ணியத்தினாலும் எடுத்த பிறவிக் கேற்றப் பயனையடைவது மக்கட்குரிய பெருந்தன்மமாதலானும், அவற் றை யுன்னி உண்மைச் சமயமாகிய சிவசமயத்தினிடத்து யாவருந் திடச் சித்தமுள்ள பக்தி வைராக்கியமுடையரா யினிது விளங்கி சைவாகமப் பெருக்குற்ற சிவசின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கம், எங்குமெல் லாரிடத்தும் பிரகாசித்து, தமிழெனு முலகமாதாவாகிய கலைவாணியின் மெய்ப்போதமும், பரமாசாரியர்களாகிய சிவஞானபானுக்களின் அற்பு தாதீத சர்வமங்கள விக்ரஹ சொரூபமாக யெவ்விடத்தும் ஸ்தாபித்தும், அநுக்ரகஞ் செய்துள்ளதுமான சிவாகம புராண தோத்திர, தேவார, தமிழ்வேத, சுருதி, ஸ்மிருதி முதலிய எல்லையிலாத சைவப்பேரின்பப்

பிழம்பின் சுவையை வாய்மடுத்து கன்மசன்ம மரக்கலத்தை யுடைத்தெரிந்து, கண்களிலானந்த பாஷ்பம் பொழிய, தேகஞ் சிலிர்க்க, அன்பெனுஞ் சிறந்த மூலாதாரச் சுழுச்சியோசாதனையில் அகண்டாகார ஓம் எனும் பிரணவாகாரத்திலொளித்து ஹர ஹர சிவ சிவ் மஹா தேவ சங்கர சம்போ சதா சிவ நமஸ்துதே என அந்தரங்கப் பூசையினால் இருதயவாலயத்தில் மனமாகிய ஆட்டை பலி கொடுத்து பஞ்சபூதங்களைப் பதார்த்தம் அன்னம் பலகார சிற்றுண்டி காய் கனி முதலியவைகளாகச் சமைத்துப் படைத்து கண்ணீரினாற் சிவலிங்காபிஷேக முடித்து, ஆர்வ முதலாய ஆசை தத்வ பாசங்களைத் தூபதீப வலங்காரங் கொடுத்து. சனனமரண வாயில்களை யடைத்து ஆருதார, சுவாதிட்டான, மணிபூரக, விசுத்தியாப்தாதீதமுடன், ரேசித்து, பூரித்து, கும்பித்த, ஆயிர யிதழ்களையுடைய, வெறுவெளி சுகாரம்ப, பேசாத மௌன சாகரப்பெட்டகத்துள் அறிதற் கருமையாகவும் காணசக்கியமாகாததுமான குண்டலிசத்தியினிடங் கலந்து வெளியிலனுபவித்த யெல்லாவற்றையும் அங்ஙனமனுபவித்து அளவு கடந்த ஆனந்த சொரூபமாய் கவியெனும் பூமாலையைச் சாத்தினால் (பாசுபதாஸ்திரம் பெறக் கைலைக்குச் சென்ற பர்க்குணன் சிவபூசை மலரினால் அதை மறந்தவனாகி பக்திச் செய்ய மனங் குவிந்த வண்ணம் மறு சனனத்தில் தனது வேண்டுகோட்படி கண்ணப்பநாயனாராகவவதரித்து சிவத்துடனயிக்கமானதைப்போல்) அக்கவிமணத்திற் பூரணதிசையடைந்து இரண்டற்ற நிரதிசயானந்தராக விளங்குவான் வேண்டி சிவாசமங்களினாதரவினாலும், குருமூர்த்திகளாகிய ஆசாரியர்களினனுக்ரகமிருந்தபடி ஸ்ரீ சிவசமய பக்தி வி..க்க நிஜ தத்வ நுபமெனப் பெயர் நிறுவிய யிந்நூலை யினிது முடிக்கப்பட்டன. காகந் தன்னினத்தைக் காப்பதுபோலும், அம்ஸபட்சி சலத்தைப் பிரித்துப் பாலையுண்பதுபோலும், கோழி கல்லை நீக்கி நெல்லைப் பொசிப்பதுபோலும், பக்த முத்த பரமாத்ம சிவானுபூதிச்செல்வர்களிதனுளமைந்துள்ள சிவஞானபூரணத்தை யறிவினிடமமர்த்தி யதனுடைய புண்ணியத்திற்கருகராகி சதாசிவமாக விளங்குவார்களெனத் திருவருளைச் சிந்திக்கின்றனம்.

ஓம் நமப்பார்வதே பதயேநம :

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

# ஸ்ரீ கபாலீஸ்வரரின்

# சிவஞான த்ரயம்.

## விநாயகர் வணக்கம்.

பதிகம்

பதினாறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பண்-நட்டராகம்.

அற்புதா கரசொரூப மானபரத் துவமே
வகண்டித மனோலயமே வாப்தர்களின் றுதியே
அநுர்தசட பேதமனைத் தினுக்கு மரியவனே
வதுவதுவா யிருந்தபடி யாட்டுவிக் தும் பொருளே
தற்சுதந் தரபரம கிருபாகர வடிவே
சருவபரி பூரணமாய்த் தழைக்கும்பகாப் பதமே
சச்சித சதானந்தனே சாஸ்வித சொரூபமே
சனனவினைத் தாண்டினவர் தனக்குளொளி ரொளியே
விற்பன விவேகதவ மிருந்தவர்கட் கினிய
வேதவே தாந்தமறை விளக்கேசதோ தயமே
விஞ்சையினில் மிஞ்சினவர் கொஞ்சுங்குரு மணியே
விமலன்றிரு மயிலைஸ்ரீக பாலீச்சுரன் றட்கே.
உற்றநிலை யடையவுன்னி சிவஞான த்ரயநா
லுரைக்ககடைக் கணித்தருள வேண்டும் பிரணவமா
யொளிகிளறு முயர்நவவைங் கரனே கணபதியே
ஓம்விகட தடதும்ப விநாயககண் மணியே. (க)

துய்யகரு ணகரமே துங்கனேமங் களஞ்சூழ்
சுபிஷதத் வதிசுகுண சுஜனசுக நிதியே
தொந்திநிறை கந்தமறை யுந்திகழுஞ் சுந்த்ரா
தும்பிமுக வெம்பரனே சம்பிரம சாட்சியனே
வெய்யகுண வைவர்நடு விட்டெங்ஙன மொளித்தாய்
வித்துடனே விளைவுமதன் சுவையெனவே கலந்த
விபரமதை சபலபுத்தி யதில்விளங்கத் தரமோ?
மெய்யழியா மெய்யுணர்ந்த மேலவர்கட் குறவே
செய்யநடை யுய்யுங்குண மையோ சிறிதுமிலாச்
சிதடன்வாய்ப் பதடனுன்றன் பதமலரை ஞான்றுஞ்
சேவைபுரிந் தேநெடிய பாவக்கடல் கடக்க
சித்தம்வைத்தா ளத்திமுகக் கர்த்தனே வுத்தமங்காண்
உய்யுநெறி வையகமீ துதவிசெய மயிலை
வுயர்ஸ்ரீக பாலீச்சுரன்மேற் சிவஞான த்ரயநூ
லுரைக்ககடைக் கணித்தருள வேண்டும் பிரணவமெய்
ஓம்விகட தடதும்ப விநாயகக்கண் மணியே. (உ)

மாதவர்க ளுளவனத்தில் மணக்குஞான மலரே
மகத்துவ மெலாமலிந்த வள்ளலே சுஷ்கிதனே
வளரும்பவத் தருவதனை யருளனலாற் றகித்து
வாழ்விக்க நின்னையன்றி மாநிலத்தியா ருணர்கேன்
சாதனைகட் பலவுளதென் றெனினுமுன தடியிற்
சார்ந்துபக்தி நேர்ந்துவுண்மை கூர்ந்துதொழு திறைஞ்சுஞ்
சகசநிட்டைக் கைவரினே சனன மரணமதுத்
தலைக்காட்டா தொழிந்துவிடுந் தருணந்தயைப் புரிவாய்
பேதமிலா நெஞ்சினருட் பிறங்குஞ் சிதாகாயப்
பெம்மானே யெம்மானே பேசுதற்கிங் கியலா
பெருந்துறையே சகஸ்ற்றிரசதோ தயமே திரு மயிலைப்
பிஞ்ஞகன் சந்திரமௌலி ஸ்ரீகபாலீச் சுரன்றட்
கோதரிய சிவஞான த்ரயமெனுந் தொடையு
லுரைக்ககடைக் கணித்தருள வேண்டும் பிரணவனே
ஒளிகிளறு முயர்நவவைங் கரனேகண பதியே
ஓம்விகட தடதும்ப விநாயகக்கண் மணியே. (ங)

எச்சமயத் தினுக்குமிறை யாகிவிளங் குபவா
ஏகதந் தாயகபி லாயகஜ கர்ணிகா
ஹிபமுகனே சகலசுகா தரனேலம்போ தரனென்

றேத்தியன்பின் மலரதனைச் சாத்திவினை மாற்றி
சொச்சொரூப லட்சணவி லக்கணத்தை யறிந்துத்
தொல்லையெனு மல்லலற்ற தூயர்த்தொழு பவனே
சுத்தநிலை வத்துவொடு சித்தமுற பணித்தாள்
சுமுகனே சருவத்துளுந் துலங்குங்கணேச் சுரனே
நச்சுமர மெனினுநிழற் றருகுமென நசிக்கா
ஞாயநிகர்ப் பேதைதனைக் கைவிட னீதியதோ?
நாட்டமெலா மோட்டைவழி நீட்டிடிற் பூட்டுவரார்
நமனுயிர்க்கொண் டிடுமுன்கழ லுடும்வரந் தருவாய்
உச்சிதமா மயிலைவளர் ஸ்ரீகபாலீச் சுரன்றட்
குளமலிய சிவஞான த்ரயமாநூ லுரைக்க
ஒளிகிளறு முயர்நவவைவங் கரனேகடைக் கணித்தாள்
ஓம்விகட தடகும்ப விநாயககண் மணியே (௪)

அம்பரனே வதுலிதனே வகண்டிக சூக்மையனே
வம்பிகை மனோகரிபார் வதியுமையாள் மகிழ
வமலசதா சிவன்களிக்க நைமிமட மதிலே
வமைந்தசித் திரயானை யுயிர்கொண்டெழுந் தவனே
எம்பரனே யிபமுகனே யேகபர வெளியே
யெல்லாமா யெப்பொருட்கு மிறையெனவே விளங்கு
மிறையேசைவ மறையேயேழைக் குறையனைத்துங் குறைத்தா
லெவர்கட்குன ற கூறுவரென் றெண்ணிமறைந் திடலென்
கம்பிகுரல் வெம்பியுன்று ணம்பித்துயர் நவின்றுங்
கசடன்மிசை யிதக்கம்வராக் கன்மமென்செய் தனனோ?
காலமோயூழ் மூலமோபொய்ச் சாலமோயென் னறிவேன்
கன்மமற மயிலைவளர் ஸ்ரீகபாலீச் சுரனு
மும்பர்துதி வள்ளலின்பூந் தாண்மேலொதி யவனு
முயர்நவஞ்சூழ் சிவஞான த்ரயமாநூ லுரைக்க
ஒளிகிளறும் பிரணவவைவங் கரனேகடைக் கணித்தாள்
ஓம்விகட தடகும்ப விநாயககண் மணியே. (௫)

பத்தர்களி னிருதயமாங் கோயில்தனி னடிக்கும்
பன்னிரண்டு கலைமுடிவே பாக்கிய மோக்கியமே
பரமாணு தயசுடரே பகரரும் பாசுரனே
பாலன்சிறு வல்லாளன் றனதர்ச்சனைக் கிதங்கி
யெத்திசையும் புகழ்மலிய போற்றிநலம் பரவ
ஹிருடியர்க்குங் கிடைக்கரிய வரம்பலிக்கச் செய்தோய்
எல்லவரி னுங்கடையே னேழையரி லேழை

யெவ்வுலகத் தினுமெனைநே ரிருப்பதரி தரிதே
முத்தர்களு மோனர்களு முத்தம பத்தர்களு
முன்சனன தன்மநிலை மூழ்கியுன்ரு ளடைந்தார்
மூடனையூழ் வினைப்படல மூடமிக நலிந்து
முறையிடுமென் குறைதீர்த்தாள் மூஷிக வாகனனே
உத்தமர்வாழ்த் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரன்றட்
குயர்நவஞ்சூழ் சிவஞான த்ரயமாநூ லுரைக்க
ஒளிகிளறும் பிரணவவைங் கரனேகடைக் கணித்தான்
ஒப்விகட தடதுப்ப விநாயககண் மணியே. (௬)

தன்னிக ரிலாதவனே சமஸ்தசீவா தரனே
சத்துசித்தா னந்தமெனத் தழைத்த திவாகரனே
சனகன்முன்னந் தொழுநோயைத் தாங்கி நாரதமுனித்
தன்விருப்பந் தனக்கிதங்கி யெழுந்தவனுச் சரிய
மன்னனுணர்ந் துபசாந்த நிலையடைய வணங்க
மனதுகந்து வநுக்ரஹித்த வள்ளலே மாதவத்தால்
மாலயனிந் திரர்தேவர் வாழ்த்திமுடி தாழ்த்தி
மன்னுபுக ழதைப்பாடி வரமதனை யடைந்தார்
மின்னலது விசும்பதற்குண் மறையும்வண்ண மறையு
மித்தையினை நத்தியுன்றன் பத்தியதை யிழந்த
வீணனைக்கை விடிலந்தோ மிகதவிப்பே னறிவாய்
வித்தகனே சித்தசுத்த வுத்தமர்கட் கரசே
உன்னதஞ்சூழ்த் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரன்றட்
குயர்நவமாஞ் சிவஞான த்ரயமாநூ லுரைக்க
ஒளிகிளறம் பிரணவவைங் கரனேகடைக் கணித்தாள்
ஒப்விகட தடதுப்ப விநாயககண் மணியே. (௭)

கணங்கடமக் கிறையவனே கயமுகனைத் தடிந்துங்
கருணைவைத்து பதங்கொடுத்த கதியே கணபதியே
கனதேவ நகரரசன் சோமகாந்தன் றனது
கன்மமற்று நன்மைபெறக் கழலருட்செய் தவனே
மணமலருண் மறைவனப்போல் வளருயிர்க டமக்குள்
வசித்துவிசு வசித்தவரூழ் நசிக்கவரந் தருகும்
வல்லவனே நல்லவனே யெல்லாஞ்செய் துல்லியனே
மறைமுழங்கும் பெரியவனே மாசற்ற சூட்சியனே
குணமறிந்து யருட்சுரக்குங் குஞ்சரமா முகனே
கோதகன்ற மாதவருட் சாதனையாய் மலியுங்
கொற்றவனே பற்றகன்று னற்கழலைத் திடுநாட்

கூறுயோ விழியினுற்பா ராயோமுன் வாராயோ
உணர்வரிய திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரன்றட்
குயர்நவமாஞ் சிவஞான த்ரயமாநூ லுரைக்க
ஒளிகிளறும் பிரணவவைங் கரனைகடைச் கணித்தாள்
ஓம்விகட தடதும்ப விநாயககளை மணியே. (௮)

எண்ணரிய சனனமது னிணையடியை யேத்தி
யிறப்புபிறப் பகன்றுலகோ ரேத்துமெழி லடைந்தூ
ரெளியேன்படுந் துயரளவிங் குளதோயாவுந் தெரிந்து
மேனென்றுங் கேளாது யிருப்பதுந் தன்மமதோ
கண்ணிருந்துங் குருடனெனக் கன்மமெனு வனமாங்
காட்டிடையி னரைதிரைசூழ் வினைமூப்புசாக் காடிற்
காலமென்னுங் காலனுயிர்க் கனற்படிந்துத் தவிக்குங்
கடையவனைக் கைத்தூக்கி யாளலுன்றன் பரங்காண்
அண்ணலேயெ னப்பனேவா ருயிரேவுயிர்க் கரசே
வண்ணையினு மரியவித மாதரிக்கும் பரமே
அகத்தியனுங் குறுமுனியின் கமண்டலநீர்க் கவிழ்த்து
வண்டர்தமக் கிறையிந்திர னந்தவனஞ் செழிக்க
உண்மைகண்டோர் மகிழ்மயிலை ஸ்ரீகபாலீச் சுரன்றட்
குயர்நவமாஞ் சிவஞான த்ரயமாநூ லுரைக்க
ஒளிகிளறும் பிரணவவைங் கரனைகடைக் கணித்தாள்
ஓம்விகட தடதும்ப விநாயககளை மணியே. (௯)

அருமறையா கமஞ்சுருதி யளப்பரிய முனிவ
ராப்தர்களு மெய்யடியா ரயன்மாலிந் திரர்க
ளருகிருந்து ஹர ஹர ஓம் சிவ கணேச வெனவே
அன் தனு லார்ப்பரித்து வணங்கமனங் கனிந்துத்
திருதியென வஞ்சலிதந் தருட்சுரந்த பரனே
சித்திபுத்தி யிருவர்சதா சேவைசெய்யும் புனிதா
தேவர்தமக் கரியவனே சிற்சுகலட் சணனே
தேன்கொழிக்கும் பூம்பாதத் திருநிழலென் றருள்வாய்க்
கருணைபொழி வாரணமே கலைவாணி யௌவையர்க்குக்
கனசேர மான்றன்முனங் கயிலைத்தந்தத் தலைவா
கனிபெறவே வலம்வந்தமெய்க் காரண பூரணமே
கந்தனுக்கு முன்னவனே கனகமணிசிகர
வுருதவழுந் திருமயிலை ஸ்ரீகபாலீச் சுரன்றட்
குயர்நவமாஞ் சிவஞான த்ரயமாநூ லுரைக்க

ஒளிகிளறும் பிரணவவைங் கரனேகடைக் கணித்தாள்
ஓம்விகட தடதும்ப விநாயககண் மணியே. (௧௦)

செப்பரிய விதமுயிர்க ளியாவினுளு மமர்ந்துக்
திருநடனஞ் செயுமகிமைத் தெரிந்தமஹா னியர்கட்
சித்தமதே வொத்தவிட மெனப்புகுந்து வரசு
செலுத்துகின்ற மாண்பதனைச் சிறியனென்னத் தெரிவேன்?
அப்பமவல் பொரிகடலை கனிசர்க்கரைத் தேன்பா
லதிரசமோ தகம்பலவு மன்புடனே படைத்து
ஹரஹர கணேசநம வெனத்துதிக்கு மடியார்க்
களவில்வர முதவிச்செய்தாண் டருளுந்தந்தா வளனே
எப்பொருட்கு மெய்ப்பொருளா யனுபவிக டன்மு
னெழுந்தருளி செயங்கொடுக்கு மிணையிலிறை யவனே
யெங்கும்வியா பகப்பொருளே யெளியேனுளந் தெரிந்த
வெம்பரனே நம்பியாண்டார்க் கெழிடந்த யிபமுகா
ஒப்பிலா மயிலை வளர் ஸ்ரீகபாலீச் சுரன்றட்
குயர்நவமாஞ் சிவஞான த்ரயமாநா லுரைக்க
ஒளிகிளறும் பிரணவவைங் கரனேகடைக் கணித்தாள்
ஓம்விகட தடதும்ப விநாயககண் மணியே. (௧௧)

---

## நூல்

## சிவசிவசிற்பர துவாதச மணிமாலை

### முப்பத்திரண்டுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

பண்-நட்டராகம்.

ஆனந்த ஞானமனோ லயவடிவி லொன்று
யமர்ந்துதிரு நடம்புரியு மானந்த விமல
வதுலிதசத் கருமநிலை யதனு டதாகரமா
யவைக்கெலா மப்புறத்திற் கப்பாலே விளங்கு
மகிலாண்ட பிண்டசரா சரமனைத்து மதற்கு
மளவுபடா திரிபுடிகட் கடங்காபகாப் பதமா
யதுவாஞ லதுவாகி யமைந்தடங்கி வொடுங்கி
யறிவதனு ளறிவாகி யமரர்பதிக் கிறையாய்
தானந்தவ முஞற்றினவர்க் கிறுதியெனும் பதமாய்ச்
சச்சித சதானந்தசுவ்ஷ் கிதபரா பரமுமாய்த்

தாணுவாய்த் தனக்குளன்பு சார்ந்தொழுகு நெறிக்கே
தக்கபடி சித்தசுத்த மாகிதயா நிதியாய்ச்
சன்னமெனுஞ் சங்கேதப் புணரிமடை யடைத்துத்
தனுகரண புவனமய றனதலவென் றொழித்துத்
தானாகித் தானனத் தன்மையதில் வீறி
தகத்தகா யச்சொரூப சாட்சிசின்மாத் திரமா
யூனன வுடலதற்கு ளுயிரெனவே மறைந்து
வுளதிலது யலதுளதென் றுரையுமொழி யதனி
னுள்வறிந்துப் பஞ்சவர்கட் களவுங்கப டறிந்து
வுள்ளபடித் தனைத்தெரிந்து வூமையென மௌன
முற்றநெறி கற்றுவினை யற்றுவருட் பெற்று
வொருபடித்தா யிருப்பவரே வும்பர்பதி யடைத
லுண்மையென யெண்ணரிய புண்ணிய வாகமங்க
ளுரைத்தமுத்தி நிலையடைய னீசனேற்கென் றருள்வாய்
தேனமருங் கொன்றைமலர் திங்கட்கங்கை யரவந்
திகழ்மழுமான் சதுர்ப்புயமுந் திரிவிழியு மிலங்கத்
தேவியுமை மயில்வடிவந் தாங்கிசேவை புரியத்
திருமாலெனும் ரிடபமிசை பிரம கபாலமுடன்
ஜெகணகண வெனநடனம் புரிந்துவருட் சுரக்க
திருத்தொண்டத் தொகையடியர் சூழவலம் வருகுஞ்
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
திருவருடா ஹரஹரவோய் சிவசிவசிற் பரனே. (௧)

முத்திதரு முதலவனே மூதண்ட கோடிகட்கு
முறையறிந்து கருணைசெயு முன்னவ தற்பரனே
முச்சுடராஞ் சோமசூர் யாக்னியினு லனைத்து
முகிலெனவே மூடியேகாத் தருட்சுரக்கும் புனிதா
மும்மலத்தைத் தாண்டியருண் மணக்குஞான மலரை
முடிக்கணியா யணிந்துவரும் பஞ்சவர்கண் மூடி
முப்பாழுக் கப்பாலாய் மூண்டெழுங்குண் டலியின்
மூதறிவா லுறமமிர்த மருந்திபேசா நிலைகொண்
டெத்திசையும் பணிபுரி யேகாந்தமனோ லயத்தி
லெத்தொழிலு மின்றிச்சும்மா யிருக்குந்தொழி லுடையோ
ரெவர்களோவன் னோர்கள்சன்ம சமுத்திரவா யடைத்தா
ரெந்நாளுந் துன்பமிலை யிருந்தபடி யிருப்பா
ரெனும்வேத ரகசியத்தை யறிதலெளி தலவே
யெஞ்ஞான்றுங் கன்மமெனு மிடர்சுழலி லகப்பட்

டேங்குகின்ற மெய்யும் பொய்யு மிறைவநின்கண் மறைவோ
  யெப்பொருட்கு மெய்ப்பொருளா யிலகுஞ்சதா சிவமே
பத்திவழா வுத்தமர்க டனக்கிதங்கிக் கருணைப்
  பாலித்த தயாநிதியே கற்றைவார்ச் சடையனே
பகரரிய பரமசுகா ரம்பமேசொச் சொரூப
  பண்ணவனே கண்ணனயன் கலங்கவளர்ந் தவனே
பன்னிரண்டு கலைமுடிவி றிகழும்பஞ பரஞ
  பலிதமுற விடமதனை யமுதமென வருந்திப்
பண்புநிறை தேவர்கட்கு வருட்சுரந்த ஹரனே
  பார்வதியாள் மயில்வடிவந் தாங்கிபுன்னை மரக்கீழ்
சித்தமது வொருவழிநின்றே லிங்கமொன் றமைத்து
  ஸ்ரீபஞ்சாக் கரந்தனைக்கே ளாதபழி யகன்று
சித்திபெற தபம்புரிய திருமால்விடை யதன்மேன்
  செய்யவயன் சிரங்கரங்கொண் டேயடியர் வலமே
திகழசிவ சின்னமொலித் திடவேவருட் சுரக்க
  சிந்தாகுலந் தவிர்த்துசீ ரன்பர்கட்கு யிதங்குஞ்
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
  திருவருடா ஹரஹரவோய் சிவசிவசிற் பரனே. (௨)

பூதல மெலாம்பரவி போற்றிசெய போற்றி
  போற்றிசெய போற்றியென போற்றிசெய்து மகிழும்
புனிதவர முடையவர்கள் புண்ணியமதை விழைந்தார்ப்
  புகழார்ந்த தேகமதும் பொருந்திமுத்தி யடைந்தார்ப்
போனகமாய் ஞானக்கனி புசித்துவினை நசித்துப்
  பொய்கெட்டு மெய்யடைந்தார் புத்திநிலைப் புகுந்தார்
புரமூன்று மெரித்தவனே புலித்தோலரைக் கசித்த
  புரந்தரனே சந்திரசடா தரனேமனோ கரனே
பேதமிலா மனத்தவருட் பிறங்குஞ்சதோ தயனே
  பிரமசுக வாரியனே பேச்சற்றவோ ரிடத்திற்
பேசாமற் பேசுகின்ற பிஞ்ஞகனே ஹரனே
  பின்னுமுன்னு மில்லாதப் பெருந்தகைப் பேருரே
பேரறிவா யோங்கிஞானப் பீடுதரும் பெரியோய்
  பெம்மானே பெற்றவனே பிள்ளைமதி சூடும்
பெற்றியனே சருவத்துளுந் தழைத்தபுரா தனனே
  பிழையனைத்தும் பொறுத்தருள ஞானதுபர மதுவே
சாதனை வழாதவரு டாண்டவஞ்செய் பவனே
  சத்துசித்தா னந்தகுண தற்பர வற்புதனே

தத்சுதகா யச்சுடரே யெங்குநிறை பவனே
சர்வபரி பூரணவ கண்டிதசங் கரனே
சமரச சுபாவநிலைத் தனில்விளங்கி நெறிகொட்
சன்மார்க்க சாதுசங்கத் தவர்களிரு தயத்திற்
சந்ததமும் பந்தமற ஸ்கந்தமென மணக்குஞ்
சம்போசிவ சம்போஹரா சம்போசதா சிவனே
சீதளஞ்சூழ் கொன்றைகமழ்க் கற்றைவார்ச் சடையனே
சிவகாமி யெனதன்னைப்பார் வதிகேதார வடிவாய்
சிவலிங்கந் தனையமைத்து தபம்புரியும் ஹரனே
செங்கண்மா லெனூஉநந்தி மீதுசாரி வருகுந்
தேவேமஹ தேவேவயன் சிரங்கரங்கொண் டவனே
சீரடியார்ப் புடைசூழ்ந்து சேவைசெயு மகண்ட
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
திருவருடா ஷ்ராஹரவோம் சிவசிவசிற் பரனே. (௩)

கனகவரையே ஞானக் கலைகடலே மறையுட்
கருத்தேயக் கருத்ததனுட் கலந்தகலை முடிவே
கங்குல்பக லற்றவனே கங்கை வேணியனே
கருணைநிறை பரம்பொருளே கண்டோருட்காட் சியனே
கண்ணேகண் ணி ஒளியேஞானக் கயிலைமலை விளக்கே
காலனைநல் பாலனுக்காய்க் கடிந்துத் தடிந்தவனே
கற்பகமே கைநிறைந்தப் பொக்கிஷ பூஷணமே
கருதரியப் பரவெளியிற் கான்மாறி யாடினவா
மனம்புத்தி சித்தமெனு மகங்காரக் கள்ள
வஞ்சப்புலை யர்களையடுத் தந்தோமதி குலைந்து
மாற்றிப் பிறக்கவகை யொருசிறிது மறியா
மாருட்ட முடனைவர்ப் போராட்ட மதினல்
வாழ்நாளதை வீழ்நாளெனப் போக்கிமய றேக்கி
மனிதசன னந்தனக்கு யேற்றபல னடையா
மறலிக்கே யுடலதனை வளர்த்ததுமிங் கழகோ?
வள்ளலே பிழைபொறுத்துன் மலர்ப்பதந்தந் தருள்வாய்
வனமதனிற் காய்ந்தநிலாப் போலுநிலை யறியா
மாதவனைப் போலும்பக்தி வளமிலாத்தொண் டனைப்போல்
மன்னனிலாக் குடிகளைப்போல் வணக்கமில்மா ணவர்போல்
மதியிலா விசும்பெனவும் வழியில்குண நிகராய்
மைந்தனன்னை யற்றவிதந் துயர்ப்படுத னலமோ?
வாடாவென் றழைத்துனருண் வழங்கினிந்தை யுறுமோ?

வாய்ப்பேசா மௌனநிலை வாய்ந்தவரே முமல
வலிமலியும் புலிதலையை யுடைத்துசூட்ச முணர்ந்தார்த்
தினகரோ தயவடிவே சிந்தைதனைத் தெரிந்தா
டெய்வீகத் தன்மையனே திகம்பரி சங்கரியாந்
தேவியுமை மயிலாகி சிவலிங்கப்பூ சனைகட்
செய்துவாம பாகமுறத் துதிக்க சதுர்முகனின்
சிரங்கரங்கொண் டேதிருமால் விடைமேல்சாரி வருகுஞ்
செஞ்சடா டவியனேநற் றிருத்தொண்டர்கட் புடைசூழ்
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ்வரனே
திருவருடா ஹரஹரவோம் சிவசிவசிப் பரனே. (௪)

வான்மணக்குங் கற்பகமே வல்லிருடீர்ப் பவனே
மஹனியர்க ளெனும்பெரியோர் வாழ்த்துஞ்சதோ தயமே
மாசில்லா மாமணியே மரகதவை டூர்ய
மாணிக்கமே பசியநீல மணியேமுத்தா வடமே
மங்கள குஞ்சரமே வழுத்துதற்கு முடியா
மாமறையே மாமறையுண் மலிந்தாக சியமே
வையகமீ துய்யும்வழி செய்யகுரு வடிவாய்
வந்துயெழி டந்தமவூ னச்சொரூப மகத்தே
வூன்மணக்கும் பொதியதனை வூத்தைமலி கடத்தை
வுண்டிநிறை திண்டிவனத் தொண்டிதனை யடைக்கு
முளவதனை யறிந்தவன்றே வொன்பது வாசலதி
னேட்டையிடித் துள்கோட்டை வீட்டின்கூட்டா ளிகளை
வுறவுகொண்டங் குளவேடர் சேட்டையதை யொழித்து
வுள்ளும்புறம் பொன்ருகக் கண்டுநெறி விண்டு
வோங்காரச் சுழுச்சியினி லொடுங்கிமதி யமுர்த
முண்டுபசி யாறிமய லொழிந்து வினைக் கழிந்து
பான்மணக்குஞ் சத்தியெனுங் குண்டலியின் மடியிற்
படுத்துறங்கி யுறங்காதப் பக்குவங்கட் பலித்து
பரமார்த்த நிலையறிந்து பருதியென விளங்கிப்
பகரரிய சுத்தசித்த பாக்கிய மோக்கியத்துட்
பரவிசித்தியா னந்தசுகம் பற்றுவதெஞ் ஞான்றில் ?
பசுபதியே சந்திரமௌ லியனேநிரா தரனே
பண்ணவனே விண்ணவரு மண்ணவரும் வருந்திப்
பணிபுரியும் பாசுரனே பதுமக்கழ டருவாய்த்
தேன்மணக்கு மலர்ச்சடையாய்த் திங்களுடன் கங்கை
செய்யமழு மானரவஞ் சதுர்ப்புயமு முக்கண்

டிகழ்பவனே திரிபுரத்தை நகைத்துயெரித் தவனே
சிவகாமி மயல்வடிவந் தாங்கிலிங்கார்ச் சனையைச்
செய்துதொழ நந்தியின்மே லயனின்சிரங் கரத்திற்
சிறக்கதிருத் தொண்டர்புடை சூழசாரி வருகுஞ்
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
திருவருடா ஹரஹரவோப் சிவசிவசிற் பரனே (௫)

கற்றவர்க ளுண்டுபசி யாறிசதோ தயத்துட்
கலந்துவொரு படிசொரூபக் காட்சியதை யடைந்துங்
கலகலென சிலம்பொலிக்குங் கழலடியி னரியக்
கண்ணனின்கண் டிகழுயெம காலனஞ்சிக் கிடக்க
காலமொரு மூன்றுடனே கருவியொடு கரணங்
கடந்தவற்றை மறுகதருங் கன்மவினைக் கடலைக்
காணாது வுலகமயல் வேணாதுத் தோணாதுக்
கங்குல்பக லற்றவிடந் தனிர்கூடிக் குலவிப்
பற்றென்ப தொருசிறிது மின்றிசிவ ஞானப்
பாலதனைக் கந்தனுஞ்சம் பந்தவள்ள டனக்குப்
பார்வதி மஹேஸ்வரிசங் கரியுமை பராயிப்
பாரளந்த தாமோதரன் றங்கைநன் மீனாட்சி
பஞ்சசத்திக் கிறைவிதடா தகைசுந்தரி யருட்சூழ்
பஞ்சாட்சரி மாமனோன் மணிதிவ்யக் கருணைப்
பாலித்து தரமாந்தித் தத்துவசாத் திரத்துட்
படிந்துகிடந் திடுமேழைப் பரமகுரு வருளா
லுற்றதெது வற்றதெது முற்றுந்துணை யதெது
வுறவுபகை சுகதுக்கநோ யுண்மையும்பொய் யதெது
வொளியுமிருண் வலிநலிகொண் டெலுளுயிர்ப் புகுந்து
வோயாது மாயாதொன் றுஞ் சாயாதுத் தோயாது
வொலியடங்கா வுததியெனப் புலிவாய்க்கிரை மறியா
யோகோகோ வெஞ்ஞான்று மகங்கரித்து கர்ச்சித்
தொருப்போழ்தும் விடுவதிலை யெனப்பந்தயம் போடு
மூழ்வினையு ளாழ்ந்துவிதிச் சூழ்ந்தியாவர்க்குந் தாழ்ந்துச்
சிற்றறிவா லற்பன்வெகு சொற்பன் றுயர் மலிந்துத்
தீவினையை மேவியாவிக் கூவிக்கழல் தாவிச்
சிந்தையது நைந்துமாயப் பந்தநிந்தை சந்தைச்
செறிந்தலையுஞ் சிறியவனைப் புரந்தாள்வெகு புண்ணியங்
தேவிமயி லாகித்தொழ நந்தியின்மே லயனின்
சிரமேந்தித் திருத்தொண்டர்க ளேத்தசாரி வருகுஞ்

சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
திருவருடா ஹரஹரவோம் சிவசிவசிற் பரனே (௬)

அங்கையினில் மழுகாட்டி யடியர்த்துய ரோட்டி
யவமதித்தார்த் தமையனலால் வாட்டியுண்மைக் காட்டி
யமணர்புர மூன்றையழல் தனில்மாட்டியூழ்க் கூட்டி
யருணிறைந்த மெய்யன்பர்கட் கந்தரங்க நாட்டி
லரசளித்து சனனமற்ற வமிர்தசஞ்சீவி தனை
யபிலாசை யுடன்றந்த வண்ணலே சங்கரனே
யார்க்கொடுக்க வல்லவர்கா ணண்டரயன் மால்மற்
றளவிலாத் தேவர்களா லாமோவாவ திலைமெய்த்
துங்கமிகு மஹனியர்க டோத்திரனேத்ரி நேத்திரந்
துலங்குபவா கண்ணேயோர்நா ளுமையுமை மூடிடவே
ஜோபிதமற் றிருண்மூடிட சகலவுயிர்க டுயர்ச்
சூழ்ந்ததன்றோ விதன்மகிமைச் சொல்லவவை யெளிதோ?
சுத்தபரி பூரணர்க ளறிந்துலக மயலாந்
தொல்லையற்று நல்லருட்பெற் றெல்லையிலா மகிழ்ச்சித்
தொடர்ந்தடர்ந்த யிடாடல்விட் டிகலில்சுக மடைந்தார்த்
தோற்றமென்று மொடுக்கமென்றுஞ் சொல்லுஞ்சொல்லற்றவரே
மங்காது மலைமேலிட்ட தீபமென விளங்கு
மஹத்துக்களின் பாதநிழற் படினுமாயை யொழியும்
வல்லாளன் றன்முன்மக வாயெழுந்தப் பரமே
மாசில்லா மாமணியே வளநிறைந்த மதியே
மாணிக்க மணிவரையே வழுத்தவொணு மறையே
வானவர்க்குந் தானவர்க்கும் வரந்தரும்வள் ளலேசீர்
மணக்குஞானக் குணக்குன்றே மாதாவின் கர்ப்பமதில்
வந்துனைந்து பந்தமுறு வண்மையீந்தா னலங்காண்
செங்கண்மால் விடைமீது சாரிவந்தாள் பவனே
சிவகாமி மயில்வடிவந் தாங்கிலிங்கப் பூசைச்
செய்துவாம பாகம்பெற களித்ததயா நிதியே
செப்பரிய சதுர்முகனு கிடவேசிரங் கொய்தத்
தினகரனே நினைவணங்கார்க் கதியெவரோ யுரைப்பார்
தீனர்களுக் கடைக்கலந்தந் தாளும்புராதனனே
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
திருவருடா ஹரஹரவோம் சிவசிவசிற் பரனே. (௭)

அம்பர பரம்பனே வனைத்தும்படைத் தவனே
வகிலமுத லும்பரர்க ளடிவணங்கித் துதித்து

வஞ்ஞானக் கறையகன் றுஞ் சுஞ்ஞானக் கலைசூழ்ந்
தபரோக்ஷ நிலைப்படிகண் டனுகித்தன்னை யறிந்து
ஆபாசப் பொள்ளலெலா மகற்றிமதித் திறக்கு
மளவுமுள வுணர்ந்துவைவர்க் களவைத்தெரிந் தொடுங்கி
வன்னைதந்தை குருவரசன் மனைவி மக்கட் சுற்ற
மனைத்துநீதந் தருளியதா லவைநினக்கே யளித்து
வம்புசெறிந் தலக்கழிக்கு மனதைபலி கொடுக்கும்
வண்மையது வந்திடினே வந்தபந்த மொழியும்
மாற்றானும் வணங்கிடுவன் மறுபிறப்பிங் கிலைகாண்
மனுவான ததற்குப்பயன் மலியுமுண்மைப் பொலியு
மனிதரிலே தேவரென வரம்பெறுவ ரிதன்சீர்
மாய்கையெனு நோய்ப்பிடித்தார் வழுத்தவெளி தலவே
மந்திரமுந் தந்திரமு மகிழட்டசித் திகளும்
வருணச்சிரமங் கள்பலவும் வகுத்தகூதைக் தெரிந்தால்
நம்புவரோ நம்பிப்பின்னல் வெம்பிவம்பாட் டமரா
னங்கதற்கும் பங்கமதின் பங்காளியாய் முடிவி
னமனின்பாச வலைக்குயிரைத் தருவரோ தந்திடின்பி
னவிலரிய சனனமுற வெவர்சகிப்ப ரந்தோ ?
நாதாந்த முடிவிலொளிர் விளக்கேவிளக் கொளியே
நட்டநடு வணைமீதி னடனமிடு நடமே
நயனமதை யுள்திருப்பி நாரணிகுண் டலியி
னயசொரூபங் கண்டவர்க ளுட்டமதை விலகார்
செம்பதுமத் தாளிறைஞ்சி சிந்தையில்வந் தனஞ்செய்
செழுங்குணத்தர்க் கருட்சுரக்குந் திவ்யமனோ ரதமே
தித்தித்தா வெனமால்விடை மீதுசாரி வருகுந்
தேவேமஹா தேவேயுமா தேவிமயில் வடிவாய்ச்
சேவைசெயு மைம்முகனே பிரமன்சிரங் கரத்திற்
றிகழ்பவனே திருத்தொண்டத் தொகையடியார்ப் புடைசூழ்
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
திருவருடா ஹரஹரவோம் சிவசிவசிற் பரனே (அ)

ஆதியந்த மத்யமிலா வகண்டிதலட் சணனே
ஆணும்பெண் ணலியிவைமூன் றற்றவனே யகிலா
தாரனே பூரணவிலா சனேசாட்குண ரஹித
வமலகரு ணம்பரயே காம்பரயீச் சுரனே
அன்னைகரு வதிலேவந்த ரங்கமாய்க்காத் தவனே
வப்பனேநி னதிமகிமை யுரைக்கவல்லா ரெவர்காண்

ளருந்தாலியை விற்றுங்கைத் தேய்த் தைச்சந்தன மெனவே
யன்பர்கட்குக் கொடுத்தரசை மும்மையினு னடத்தி
வல்லமையாய்க் கைலையைவிட் டன்புவழா மூலர்
மரித்தவுட லினிற்புகுந்து கோக்களுக்கின் புனுற்றி
வருடமொருச் செய்யுளாக மூவாயிர வருட
மாண்புறாஉந் திருமந்திர மமைத்துந் துணைவியுடன்
மைந்தனையுங் கோல்பிடித்துக் குளமூழ்கியு மமணர்
வன்குருடா கவும்விழிபெற் றருள்மலிந்துங் கல்லே
மலரெனச்சாத் தியேவரம்பெற் றுளங்கமழ்ந்துஞ் சமரில்
வலிமிகுந்துங் கவராடிமூக் கரிந்துங்கனிப்பெற்றுத்
திருக்கயிலையினு மாலங்காட்டினுங் காட்சிபெற்றுச்
சிந்தையெனு மிருதயத்தி லாலயத்தை முடித்து
சேரமான் றனக்குமுத்தி யனுக்ரஹித் தளவில்
செயல்மலிந்த திருத்தொண்டருந் திருவள்ளுவர் முதலுஞ்
செயசெயவென் றுர்ப்பரிக்க வுமைமயிலாய்த் தவத்திற்
றிகழமால் விடையேறி வயன்சிரமேந் திவருஞ்
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ்வரனே
திருவருடா ஹரஹரவோம் சிவசிவசிற் பரனே, (கக)

ஆடல்செயு மம்பலத்தே வயன்மாலி ந்திருட
னந்தணர்மூ வாயிரவர்ப் பதஞ்சலி வியாக்ரமரோ
டளவிலடி யர்கட்கிடையா வமலத் திருவடியை
யன்பனெனு நந்தனுக்கன் றளித்த புண்ணிய மிஃதென்
றருளதனு லறிந்தவர்க ளறிவர்மற்றோர்க் கெளிதோ
வனந்தகோல வடிவமதா யடியவர்மு னமர்ந்த
வதுலிதனே வமரர்தொழு மகண்டிதசிற் பரமே
வாப்தர்களி னற்றுணையே யனைத்தையு மாட்டுபவா
தேடரியத் திருவுருவே திவ்ய மனோ ரதமே
தேஜோன்மயப் பிரகாசத் தேவதேவர்க் கரசே
செக்கர்வேணி யனேசெஞ்சடா டவியனே சிட்டையதிற்
சிறந்தவர்கட் கருவிருந்தே தீங்கனியின் சுவையே
தின்னத்தின்னத் திகட்டாகத் தெள்ளமிழ்கே பாகே
சிவசிவவென் றுரைநாவில் மணக்குந்தேன் சுரக்குஞ்
செப்பாதார்க் கென்மொழிவென் றனுபவிக ளறிவார்
சீரியரா மாரியர்கள் வாரியென யிசைத்தாற்
மூடமனந் தனக்கிவ்வுப தேசம்அரு வருப்பே
முத்தர்கட்கும் பத்தர்கட்கு முத்திதரு மிதுவே

மோனப்பர மானந்தத்தில் மூழ்கினவர் வாழ்ந்தார்
முப்பசையைக் கடந்தவரு முறைப்போலன்புச் சூழ்ந்தார்
முச்சுடராய் முத்தொழிற்செய் முதல்வ சதோதயனே
முனிவரருஞ் சித்தரண்ட ரேத்தவருட் கரந்த
முன்னவனே சமயநெறி நில்லாவறி விலரை
முனிந்தவனே தொண்டர்கண்மேன் கனிந்தவனே ஆதி
சேடனளப் பரியவனே சந்திரசடா தரனே
சிவகாமி மஞ்ஞையுருத் தாங்கிதவம் புரிய
சேவையதுத் தந்தவனே மால்விடையோ யடியார்த்
திறம்பாடி சின்னமோதை யொலிக்கசாரி வருகுந்
தேவேமஹா தேவேசம்போ தேவேசதாக் கியமே
திரிபுரத்தை நகைத்தவனே செழுமறைக் காதிபனே
சின்மயனே மன்னுபுகழ் ஸ்ரீகபாலீஸ் வரனே
திருவருடா ஹரஹரவோம் சிவசிவசிற் பரனே. (கஉ)

---

## சிவசிவசங்கர சிவமாலை

---

### பதினாறுசீர்ப் பஞ்சக குணித விருத்தம்

ஆதி யந்தமிலா வண்ணலே ஹரனே வற்புதா கரனே தற்பரனே, அகண்டலட் சணனே வாருயிர்த் துணையே வளவில்லா மாபரத் துவனே, சோதியே சுடரே சுத்தசைதன்ய சூட்சமே தோற்றமு மொடுக்கத், தொந்தங்கட் கியலாத் தூயகற்பகமே தொல்லையற் றவர்த்தொழுந் துதியே, பாதி மதியணிப் பரமனே ஞான பானுவே தாணுவே நன்மைப்.பரவிடுந் தொண்டர்ப் பாக்கியமோக் கியமே பகரருந் திருபஞ்சாக் கரமே, தீதிலா வுருவே திகழ்மனோ ரதமே தீண்டிடாத் திருமேனி யுடைய, சின்மய ஹரவோம் ஹரஹர மயிலை சிவசிவ சங்கர சிவமே (க)

மெய்யில்வெண் ணீறுங் கண்டிகைப் பூண்டு வித்தக வைந்தெழுத்ததனை, விதிபறந் தோட விஞ்சையி னீட விமலனே வோதியாஸ் ரயித்து, வையகமீது பக்திசெய் தேத்தும் வரமதை யெளியேற்கென் றருள்வாய, யான்மழு வரவப் படையுடை யவனே, மதிதிகழ்க் கற்றைவார்ச் சடையாய், தெய்வீக வடிவே சித்தரு முத்தர்த் திருத்தொகை யடியவர் ஞான்றுஞ், சேவைச்செய் பவலை சிக்குவே றில்லைத் திருவுளந் தனக்கிது மறைவோ? செய்ய மேனியனே தேவர்க டேவ சிவகாமி மயிலாகி வணங்குஞ், சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ, சிவசிவ சங்கா சிவமே (உ)

முப்பொருட் கிறைவ முதல்வனே ஞான மூர்த்தியே தாத்திரை வலையில், மூழ்கிடா துன்ருட் சதமென வணங்க மூடனேற் கெவருரைச் செய்வார், எப்படி வினையா லெடுத்தப்புன் குரம்பை யேகுமோ மோக வாரிதியி, லிறங்கியே தவித்து கூற்றனுக் குயிரை யீயுமோ மாயுமோ யேழை. முப்படு கிணற்றி லாழ்ந்துக்கண்மூடி முண்டகத் தாளதை வந்தோ, முற்றுமே மறந்தே னென்னினும் பரனே முனிந்திடா தாட்கொளல் புண்ணியம், செப்பரு .மறைக டிகழ்பவா மயிலாய்ச் சிவகாமி யுமை தொழுபவனே, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (௩)

ஐவராம் பூத வசடரா லிடிபட் டவத்லைதக்கொ ணேயையா ரறிவா, ரகில காரணத்து மூலவத் துவென வமர்ந்தவா சந்திரமௌ லியனே, கைவர நன்மை யடைந்த மாதவர்கட் கருத்தினிற் கண்ணுங்கண் ணொளியாய்க், கலந்தசிற் பரனே காலனை யுதைத்தக் கடவுளே கடத்தினி லுயிராய், மெய்யுணர்ந் தவர்க்கு விளக்கம தான விபர மிலேச்சனென் னுணர்வேன், விகற்ப மிலாத மேலவர்க் கண்ட விமலனே வமலனே யடியேன், செய்வினை யாவு நீக்கியாள் வதுநின் சித்தமே பத்தர்களேத் துஞ், சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே.

அனந்த மேனியனு யருந்திருத் தொண்டர்க் கன்றருட் சுரந்து காட்சியதை, யகம்பிரம வாதை யொழியத்தந் தவனே அளவிலா மங்களாகரனே, மனந்தடு மாறி மதியதுச் சிதறி மாய்கையி லலைந்திடும் பேயேன், வனசர னிடம்பட் டுழலுமா னெனவே வாடுத லுனக்குசம் மதமோ? சனகனு தியர்நால் வரின் முனமன்று தட்சணு மூர்த்தியா யெழுந்து, சங்கற்ப மதனைச் சொல்லாமற்சொல்லி தடுத்தவவ் வுளவையா ருரைப்பார், தினகர னெனவே வுமைமயில் வடிவாய்சேவிக்க வரமுகந் தவனே, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (௫)

வெய்யலில் துடிக்கும் புழுவென யெளியேன் வேதைநோ யெனுமுன்னூழ் வினையான், மிகமெலிந் தந்தோ கண்கலக் கப்படும் வேளைக் காதரவெவ ருரைப்பாய், துய்ய ஞானியர்க டோத்திரனே திங்க ளலங்கிடுங் கற்றைவார்ச் சடையாய்த், துணையாயித் தருணம் பிணைப்படுங் கதியார் சோம சவுந்தரப்பாண் டியனே, எய்தவ னீயாய் வேதங்க ளியம்ப யிணையிலா வம்பை நோவதிலெ, னீசனே நீச னென்றுக்கை விடினே யெவரோகைத் தூக்கிகார்த் திடுவர், செய்வினை யோடுச் சிந்தையுந் தெரிந்த சிற்ப ா திருவுள மறியேன், சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (௬)

பிரிந்திலா மனத்தோ டென்றும் பூசனையும் பிறங்கிடும் பக்தி சாதனையும், பெரியவர்க் கேண்மை சிவபாரா யணமும் பின்னிடையா வைராக்ய நெறியு, முரியவரெல்லா மழிவிலாக் கதியு முயர்தவப்பலனும்பெற்றனரென், ஞேதிடும் வேத வொலிசெவி மடுத்தெ னூழ்வினை யதன்வழி மறைக்க, பரிவிலாப் பாபச் செய்கைக்குத் தலையாய்ப் பாபியேன் கெடுவது நலமோ?, பத்தரை மாற்றுப் பசுந்தங்கமே யிப் பாலனின் றுயரங்களனைத்துந், தெரிந்தின்னும் வாதோ சிவகாமி மயிலாய்ச் சேவிக்க யிடபாக மளித்த, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (எ)

மூவித வேட்கை யெனுமண முகர்ந்து முப்பசைக் கிணற்றினி விறங்கி. முண்டகத் தாளை முற்றுமே மறந்த மூடனே னெங்ஙனம் பிழைப்பேன், கூவியே யென்றன் குறையெலா மெடுத்துக் கூறியுங் கேட்டிலாதவர்போற், கொஞ்சமு மிரங்கா திருப்பதென் விதியோ?, கொற்றவா பற்றிலார்த் துணையே, ஆவியா யாக்கை யதற்குளே மறைந்து வாட்டுமுன் வித்தையா றறிவா, றன்றுமா தேவி மஞ்ஞையாய் தபங்கொண் டர்ச்சிக்க யிடபாகங் கொடுத்த, தேவனே செங்கண் மால்விடை யோனே திகழயன் சிரங்கரங் கொண்ட சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (அ)

கற்பனை யாவுங் கடந்தவென் கண்ணே கண்ணினு ளொளியே கற்பகமே, கனகமே கற்றோர்க் கருத்தின்மெய்க் கருத்தே காண்பவர்க் காட்சி சாட்சியமே, பொற்புயர் ஞானப் பூரணா னந்தப் புனிதமே தனிமுதற் பொருளே, புலையனேன் கொலையிற் றலைமையே னுன்சீர்ப் போற்றவுஞ் சாற்றவும் போமோ, அற்புத மலிந்த வன்பர்கட் கன்பே வாதியே சோதியே வமலா, அளவிலாத் தொண்டர்த் தொழும்பினுக் கிரங்கி அருளதை யநுக்ரஹஞ் செய்த, சிற்பரா மயிலா யுமைதொழும் பரமே திக்கிலா வெனைக்கடைக் கணித்தாட், சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கூ)

வானவர் ஞான்று மருகிருந் தேத்த மனங்களித் தெழிலதை யளித்த, வள்ளலே யாவும் வல்லவா சைவ மறையினுண் மணக்குநன் மலரே, கானமுந் தவமுந் தருமமும் விரதஞ் சந்ததம் வழுவா துஞற்றிய, சாதுக்களன்றோ நின்கழ னிழலைச் சார்குவ ரூழ்வினைத் தீர்வர், ஊனதற் கூன்தந் தொதியெனத் தடித்த வொதியனேன் றனையடி மைக்கொளி, னும்பரிம்ப ரேசி நகைப்பரோ வுறவும் பகைநீயலா துளரியார், தீனனே னுள்ளந் தெரிந்தக் கடவுளே சிவகாமியுமைமகிழ்த் திருவே, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கய)

மலையென யிருவர்த் தேடிட வளர்ந்த வள்ளலே திரிபுர மெரித்தோய், மாசிலா மணியே மாணிக்க வரையே வணங்கின ரிருதய விளக்கே, கலைபனி ரெண்டி னிறுதியிற் றோன் றுங் கர்த்தனே சித்தநிர்த் தனனே, கன்மநோ யொழித்துக் கரணமொன் ருகிக் கருதினோர்க் காணுஞ் சுந்தரமே, உலைமெழு காக வுருகியுள் ளுடைந்து வுடல்சிலிர்த் திடக் கண்ணீர்த் ததும்ப, வுண்மையுஞ் சாந்த முடனேவர்ச் சனைச்செ யுத்தமர்ப் புகழ்க்கங்கை வேணி, சிலையென மௌன நிலையடைந் தோர்தொழுந் தெய்வமே வுமைமகிழ் செல்வச், சின்மயஹரவோம் ஹரஹர சம்போ சிவசி வசங்கர சிவமே. (கக)

மயமெல்லாஞ் சிவ மயமென வகுத்த மாண்பதைக் காண்பனோ? கண்டால், மறப்பனோ கன்மத்திற் சிறப்பனோ வொருக்கால் மறக்கினு மனமது சகிக்க, நயமிலென் றுணர்ந்தா னுட்டம்விட் டகன்று நலிந்திட நினைவனோ னாயேன், ஞானவா ரிதியே நம்பனே நம்பினோர் நறவெனப் பொசிக்குந்தெள் ளமிழ்தே, செயசெய செயவென் றண்டர் மாதவருஞ் சீரடி யவர்மஹ ரிஷியர்கட், சிந்தையுள் வந்தித் தருள்பெறப் பணிந்த செஞ்சடா டவியனே வினையாற், றியங்கிடு மெளியேன் சிந்தா குலந்தீர் சிவகாமி மஞ்ஞையாய் தவஞ்செய் சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ, சிவ் சிவ சங்கர சிவமே. (கஉ)

கூடியே கெடுக்கும் பஞ்ச பூதியத்தின் கொடுஞ்செய லெந்தநாளொழியுங், குணப்படுங் கால மன்றிவே றொன்றைக் கொள்கையுணினைத்திலென் பயன்காண், ஆடிய வாட்ட மனுபவ மனைத்து மையகோ விழலென முடிய, வற்பனென் முந்நாள் விழைந்த கன்மமதோ வண்ணலே நின்றய வதுவோ, நாடிய நாட்டந் தனைவிடா ருளத்தி னட்டஞ் செய்ப் பதமென் றுத் தருவாய், நாதனே சாம வேத கீதனேமெய் நான்மறை யுணர்த்து மாதிபனே, தேடியே யுமையாள் மயிலுருக்கொண்டு சிவலிங்கார்ச் சனைச்செய மகிழ்ந்த, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கங)

அருள்வடி வாகி யனந்த மூர்த்தமதா யமர்ந்தவா யகில நாயகனே, ஆசிலா ருளத்தி லன்பதாய்ச் சிவமா யநிவதா யறிவரும் பொருளாய்த், தெருண்மயச் சொரூபா சித்தியெட் டினுளே சிறந்தவைத் துறந்துப்பின் மறந்தச், சிந்தையுள் ளவரே சீவமுத் தரெனச் செப்புநூண் முறைத் தெரிந் தவரே, யிருள்வழிப் பொலியுங் கருவழி யடைத்து யேகாந்த நிலையினிற் றழைப்ப, ரெங்குமோர்ப் படித்தா யென்றும்வீற் றிருப்ப ரீசனே நினதெழின் மிகுந்தோர்த், திருவடித் தொண்டுச் செய்திடிற் பிழைப்பேன் சிவகாமி மயிலாக தவஞ்செய், சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கச)

அப்பனே வரசே வன்னைத் தந்தையுமா யகிலலோ கனைத்தினும் விளங்கு, மண்ணலே புண்ணியத் திருவெண்ணீற் றினனே வாத்மரட் சகனேசச் சிதனே, எப்பொருடனக்குந் தலைவனே மறைசொல் மஹேசனே கைலை வாசனேந, வின்பமுந் துன்ப மென்பதில் லானே யிமையவ ரேத்தும் பெம்மானே, செப்பரும் வடிவே தீனர்க்கா தரவே செங் கண்மால் விடையின்மேல் வருகுந், தினகரப் பொருளே தேவி யுமை மகிழ் செல்வமே தீவினைக் கடக்குந், தெப்பமாய் நிறைந்த சிற்சுகோதயமே திருவுளச் செயலென்னத் தெரிவேன், சின்மய ஹரவோம் ஹர ஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கரு)

காணுதற் கரிய கங்கை வேணியனே கற்றவ ரெடுத்துணுங் கனியே, கற்பகத் தருவே காரண கார்யங் கடந்தமெய்க் கடவுளே பரனே, தாணுவே சர்வா பரணனே கருணைத் தற்சுதந் தராதரப் பொருளே, சாம்பவந் தொலைக்குந் திருவெண்ணீ றளித்த சம்பந்த நாதன் றந்தையெனத். தோணுநற் பதியாங் காழியின் கண்ணே தொம்பதத் துவந் தொய்தப் பதமே, சுத்தசாட் குண்ய வீட்சண்ய வடிவே தொல்லையற்ற வருளச் சுடரே,சேணுல கரசே செங்கண்மால் விடையாய் சிவகாமி மஞ்ஞையாய்த் தவஞ்செய். சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கசு)

அண்டரு முனிவ ரளப்பருந் தொண்ட ராப்தரு மஹனிய ரறமே, யணுத்துணை யேனு மறவாது நடத்தி யாசீர்பெற் றருள்வழி நின்று, ரெண்டிசை யோரும் போற்றிடுங் கீர்த்தி யெய்தின ருண்மையி ஃதன்றோ? ஏழையேன் கதியெ னெத்தகை முடிவை யீவையோ யின்னதென் றுணர்ந்து, விண்டிட முடியா விஞ்சையர்த் தெரிவார் வேழ்வியுந் தபம் விரதம்வழா, மேலவர்க் கன்பு விழைந்தவா பக்தி விரும்பியேத் திடேடமெய் யடியார்த், தெண்டனிட் டென்றும் பணிபவா மயிலாய்த் தேவி யுமை தொழு மாதிபனே, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கஎ)

பார்த்திபன் கூனை நிமிர்த்தி வெண்ணீறும் பஞ்சாக் கரமுஞ்சைவ நெறியும், பருதிபோ லுலக மியாவினுஞ் சிறந்துப் பலுகிட நலம்பணித் தவனே, கார்த்திகே யன்சிவ சுப்ரமண் யனெனுங் கந்தன் சம்பந்தனுலமணக், காடதை யழித்து வீடரு ளியமா கருணா கரனேபராஞ் சுடரே, பூர்த்தியா யன்புப் பொருந்திப் பூசனைச்செய் புண்ணிய ரிருதய மூர்த்தி, புன்புலா லியாக்கைக் கையகோ வுழைத்தப் புலையனேன் கதியென்னப் புகலாய், தீர்த்தமாய் மூர்த்த க்ஷேத்திரமாய்ச் செழித்த சிற்பரா வுமை மகிழ் பவனே, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே. (கஅ)

16440

அப்பர வணிந்த வாண்டவா தொண்ட ரறிவினி லடைம்புரி விமலா,
அண்டமும் பிண்ட வசர சரமெலா மாடிட வாடற்காண் பவனே, தப்பி
லாச்செயலுஞ் சாந்த தேவதையின் சதுரிதக் கருணையுஞ் சத்தியந்,
தழைத்திடு வளமுஞ் சங்கற்ப 'வொழிவுந் தான்வரின் முத்தியைச் சார்
வர், ஒப்புயர் வில்லா வொருதனிப் பொருளே வோமெனும் பிரணவத்
தொன்று, லுரைப்பதற் கொண்ணு சருவமும் படைத்த வுண்மையை
யறிவதிங் கெளிதோ? திப்பிரமைக் கொளுமுப் புலிவலி யொடுங்கிற்றெ
ரியுமென் றுரைக்கு மாகமமே, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ
சிவசிவ சங்கர சிவமே. (கக)

பஞ்சாட் சரத்தை பக்தியாயோதிப் பவம்பொடிச் செயுந் திருநீற்
றைப், பாழுட லழியாப் படி நிலையடையப் பணிவுடன் பூசி ருத்ராக்க,
விஞ்சைத் தாவடத்தைப் பூண்டுநின் புகழாய் விளங்குந் தேவாரந் தமிழ்
வேத, விதிவத்தாய் மன்னும் பாமாலைப்பாடி வினைதனை யொழித்தனர்
மேலோர். குஞ்சிதப்பாத னிழலில்வீற் றிருந்துக் குறையகற் றிடசதா வரு
ந்திக். கும்பிடும் வரமுங் குணநிலைக் கலையுங் கூற்றனை வெல்லுஞ் சாத
னையுஞ். செஞ்சடா டவியோய் செடியர்க்கென் றருள்வாய் தேவி யுமை
மயிலாய்த் தவஞ்செய், சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ
சங்கர சிவமே. (உ0)

சத்த சாகரமுந் தேவரண் டரெலாஞ் சரண்புக விடமுண்ட பரனே,
சச்சிதா னந்தா சகஸ்ற்றிரா பரஞ ஜைவசாட்சியனே சூட்சியமே, பெத்த
முத் தர்களு மத்தர்ப் பேயருமாய்ப் பிள்ளைபோற் றன்னையே மறந்து,
பிறப்பிறப் பின்றி மௌனமே விட்டு பேச்சுமூச் சற்று ஞானநிலை. வொ
த்துயா திறுமோர்ப் பற்றுதலில்லா ருடனேழைச் சரியெனக்கருதி. யுள்
ளமும் வெளியுந் தனித்தனி வேருயுணருவே னுளறுதற் றகுமோ?. சித்
தமொன் றுறைற் றிகழ்வரைம்முகனே சிவகாமி மஞ்ஞையாய்ப் பணி
செய்சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்கர சிவமே.(உக)

பழுதிலா தவருட் பழுத்தசெம் பழமே பருகினோர்க் கினியதீஞ் சு
வையே, பன்னிரு கலையின் முடிவினிற் றுலங்கும் பருதியே பால்வெண்
ணீற் றினனே, தொழுத வாலால சுந்தரர்த் தோழ்மைத் தொடர்ந்தவா
சூக்மசை தன்யச், சொருப வரூப சுப்ரதீ பமேநற் சுகபரி பூர்ணத்தத்
துவமே, மழுவுமா னரவங் கங்கையுந் திங்கள் மலர்க்கொன்றை மணக்
குஞ்செஞ் சடையாய், மாயவன் கண்வைத் தடிதொழுதவனே மலரவன்,
சிரங்கரங் கொண்ட, செழுஞ்சுடர்ப் பரமே வுமை மயிலாகச் சேவைசெ
ய்திடபாக மளித்த, சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவசிவ சங்
கர சிவமே. (உஉ)

Q/23:38.211.K

அங்குயிங் கெனுஞ்சொ லம்மை யிம்மையுமா யனுசரித் ததனனு
பவத்தி. லறிவொடுங்கி நிலை யதுவதாய்த்· தழைத்தா லன்றலோ நித்திய
தத்வமசித். தங்கிடு மௌனந் தழைத்திடு முத்தி சருவமு மொன்றதாய்ப்
பொலியுஞ். சச்சிதா னந்தங் கைவருஞ் சனன சமுத்திரம் பொங்கிடா
தடங்குந். துங்மமூ வெழுத்தோ டைந்துவக் கரமே சுகமு மாகார
மாய்ப் பொசித்து. தூங்கித் தூங்காமற் கண்டுங் காணுமற் சொல்விச்சொ
ல்லாப்பதிச் சூழ்வர். செங்கண்மால் விடைமேற் சாரிவந்தருளுஞ், சிற்
பரா வயன்சிரங் கைக்கொட். சின்மய ஹரவோம் ஹரஹர சம்போ சிவ
சிவ சங்கா சிவமே. (௨௩)

மூவருட் டலைவா முதல்வனே கபால மூர்த்தியே முளரிதா ளதனை,
முறைப்படி மலரிட் டன்பினுற் குழைந்து முதிர்ந்த மூவரின்றமிழ்ப்
பாடி. சீவருட் சிவமாய் செழித்துளே மறைந்துத் திருவிளையாடற்செய்
திறத்தைத், தெரிந்த மாதவரின் சேவடி யணுகிச் சிந்திக்கும் வரமதென்
றருள்வாய், காவனப் பூக்க ளுதிர்ந்தொழி வண்ணங் கட் மதைக் கன்ம
நோய்க் களித்து. கண்மூக்குச் செவிவா யடைந்தப்பின் பயனென்
காண்பது சுத்தப்பொய் யல்லவோ ?, தேவர்க டேவே சிறியவன்
முறைக்கு செவிசாய்த்தா ளுமைதவம் புரியுஞ். சின்மய ஹரவோம் ஹர
ஹர சம்போ சிவசிவ சங்கா சிவமே. (௨௪)

அரும்பெரும் பொருளே வணியேநற் பணியே வைம்முகச் சொரூ
பமே வமலா, வாருயிர்த் துணையே யன்புள வடியார்க் கடைக்கலலந் தரு
ம்பரத் துவனே, கரும்பென யினிக்குங் கருணையங் கடலே கண்கள்மூன்
றுலுல கனைத்துங், கார்த்தருள் பவனே கஞ்சனின் றலையைக் கையினி
லேந்திமால் விடைமேற், பெருமையாய்த் தொழும்பர்க் களித்துள மகி
ழப் பிரசன்னங் கொடுக்குமற்புதனே, பெட்புய ருமையாள் மயிலுருத் தா
ங்கிப் பீடுறத் துதிக்கும் பெம்மானே, திருவரு டாலுன் சித்தமே யடி
யேன் செப்புநான் முறையைக்கேட் டிதங்குஞ். சின்மய ஹரவோம் ஹர
ஹர சம்போ சிவசிவ சங்கா சிவமே. (௨௫)

---

## மறைபுகழ் மாணிக்கமாலை

### பண்-இந்தளம்.

பூதலமெல் லாம்பணிகொள் புனிதனே புரந்தரனே
சாதனையோர் சாற்றியேத்துஞ் சம்போ சதாசிவமே
காதலோடு கண்ணீர்ச்சிந்தக் கற்றோர்த் தொழுமணியே
மாதவர்க ளேத்துஞ் சைவ மறைபுகழ் மாணிக்கமே. (௧)

நன்மையாவுந் தரவருகு நடுநிலை நவமணியே
தின்மையில்லாச் சிந்தையுள்ளே திருநடம் புரிபரனே
மின்னுந்திங்கட் கங்கைமங்கை விளங்குஞ் சதுர்ப்புயனே
மன்னுஞானந் துலங்குஞ்சைவ மறைபுகழ் மாணிக்கமே. (உ)

அழகனேவம் பரனேமன் றாடிய வம்பலவா
பழமெனவே பக்திசன்னிற் பழுத்தமெய் யடியவர்க்குள்
மழலையென கலைகட்பேசு மௌனமே மகத்துவனே
வழங்குமுண்மை மலியுஞ்சைவமறைபுகழ்மாணிக்கமே. (௩)

அதிபதியா யாலவாயி லரசகை வுஞற்றியவா
நிதியேஞான நித்தியபோக நிறைபஞ்சாக் கரபதியே
சதிசெய்மூன்றச் சமுத்திரத்தைத் தாண்டிடக் கடைக்கணித்தாள்
மதியெனவே விளங்குஞ்சைவமறைபுகழ்மாணிக்கமே. (௪)

வாசிவா சிவாவென் றுள்ளே மடக்கிமூச் சகையொடுக்கி
தேசிகனாய் நினதுருவைத் தெரிசித்துக் குண்டலியோ
டாசிலாத வெளிச்சென்றுடு மறிவினு லறிந்துஞான
மாசிலாதோர் வணங்குஞ்சைவமறைபுகழ்மாணிக்கமே. (ரு)

சிறந்தசத்தியோ சாதனைக்கு டிகழ்சந்திர மௌலியனே
பறந்தவாயன் பாதலத்தைப் பார்த்தகண் ணனுமறியாப்
பறந்தவண்ணம் பலிதமானப் பரனே சடாதரனே
மறந்தழைத்தோ ருணராசைவ மறைபுகழ் மாணிக்கமே. (சு)

புலியதனைப் போர்த்தவனே புரமதை நகைத்தெரித்த
வலிமிகுந்த சங்கரனே மாயஞ்சூழ் மனமறியைப்
பலியெனவே தந்துயேத்தும் பரமர்க டலைவனேசீர்
மலியுமாண்பு வளஞ்சூழ்சைவ மறைபுகழ் மாணிக்கமே. (எ)

கணக்கிலாத மூர்த்தமாகிக் காட்சிதந் தருளளித்த
குணக்குன்றேமெய்க் கோர்த்தமுத்தே கோமே தகசரமே
பிணக்குளழூழ்ப் பீடையற்றப் பெரியோ ருள்ளமதில்
மணக்கும்வாச மலரேசைவ மறைபுகழ் மாணிக்கமே. (அ)

சுகமுந்துக்க மிரண்டுமொன்றாய்ச் சொல்லரு மொழிநிலைத்துப்
புகலஞ்ஞான புறச்சமயம் போதமப் புறப்படுத்தி
திகழ் வெண்ணீறுந் ராக்கமாலை சிறக்குநல் லோரி சைக்கு
மகத்துவஞ்சூழ் மணியேசைவ மறை புகழ் மாணிக்கமே. (கூ)

சித்தமதுட் சிவத்தைக்கண்டு சேவித்தைம் பொறியதனை
பத்தியோடு வன்னங்கறிகாய்ப் பலகாரங் கனியமுதமாய்

வித்தகமா யளித்துயிரை மிகுதாபந் தீபமெனும்
வத்துவாகித் தொழுதோர்சைவ மறைபுகழ் மாணிக்கமே! (கഠ)

நிணநிறைந்த யாக்கைக்குள்ளே நிர்த்தனஞ் செயுமுளவை
கணங்கடன்னை தத்தமாக்கிக் கண்டங்கு ளுளநிலைக்கு
ளிணங்குந்தன்ம மருளிற்சன்ம மிடுகொடன் றெரிந்திடவே
வணங்குந்தொண்டர் வாழ்த்துஞ்சைவ மறைபுகழ் மாணிக்கமே. (கக)

கள்ளமில்லா மனத்தவர்கட் காணுஞ் சிவப்பிழம்பே
யெள்ளிலெண்ணெ யெனசர்வத்து மிருந்திடுந் தனிமுதலே
உள்ளமெனுங் கோயிடன்னி லுயர்நட்டம் புரிபவனே
வள்ளலேசீர் மணக்குஞ்சைவ மறைபுகழ் மாணிக்கமே. (கஉ)

பழுத்தப்பழமே பாலின்சுவையே பரமசாஸ் விதசுகமே
விழுத்தக்கொள்கை பக்தியன்பு மிகுந்தவர்ப் பணிதவமே
யிழுத்தபாவ மிடுக்கணீங்க யிறைவனே கடைக்கணித்தாள்
வழுத்துஞான வாழ்வேசைவ மறைபுகழ் மாணிக்கமே. (கங)

தானந்தவந் தருமஞ்சத்தியஞ் சார்ந்தவ ரனுபவிக்கு
மோனமேநன் முத்தர்க்கிடமே முளரிதா ளொழுகமிழ்தை
பானஞ்செய்துப் பற்றற்றமெய்ப் பழவடி யார்க்கிறையே
வானவர்மா லயன்சொல்சைவ மறைபுகழ் மாணிக்கமே. (கச)

களவுமலி மனமாங்காட்டைக் கருணையா லெரித்தொடுக்கி
யுளவறிந்துட் கண்ணைப்பெற்று வும்பர்க டலைவனடி
விளங்குநேர்மைக் கண்டொன்றாகி விதியகன் றன்பெனூஉம்
வளங்குலாவ வரஞ்சூழ்சைவ மறைபுகழ் மாணிக்கமே. (கரு)

## வா ழி வி ரு த் த ம்.

மதியொளிரு மைங்கர விநாயகன் கபாலீச வள்ளல்வாழி, மயில்வடி வந்தாங்கியகற் பகவல்லித் தாய் சுப்ர மண்யபெம்மான், நிதியொளிரு வள்ளிதெய்வ யானை நவகண மயில்வேல் செகங்கள்போற்றித், திகழ் சைவமறை குரவர் திருஞான சம்பந்தர்த் தீய சமணைப், பதியொளிரு வணஞ்செயித்த திருநாவுக்கரசர் மணிவாசக பிரான், பண்பு நிறை திரு த்தொண்டத்தொகை யடியார் சைவம்வழா பக்திஞான, அதியொளிருந் திருநீறு ருத்ராக்க மிந்நூலச் சிட்டுநல்க, அன்புடனே பொளுதவிச் செய் தோர்படித்தவரருளால் வாழிமன்னோ.

சென்னைத் திருமயிலை

## ஸ்ரீ கபாலீஸ்வரரின் சிவஞானத்ரயம்

ஸம்பூர்ணம்.

ஓங்கார மதிலெழு மளவிலா சுகரூபத்
தொக்கியுட் சொக்கிபுக்கு
மூயாருளி னிறுதிகுண வலங்கிர்த சித்துகளி
லுண்மையுருக் கொளுங் கணபதி
தேங்கனியி னிரதமென வன்பர்க ளெஞ்ஞான்று
தின்னதின்னத் திகட்டா
தெய்வீக வமிர்தமே தேடினுங் கிடையாத
தேஜோ மயானந்தமே
மாங்கனிக் காகமயின் வாஹனன்முன் மலைவலம்
வந்துசங்கரன் பழமதை
வழங்கபெற் றானந்த முற்றவா கணாதிபதி
மன்னுநின் விழிசாய்த்திடாய்
தீங்கிலா மனத்தவர்த் தொழுபவா திருமயிலை
ஸ்ரீகபாலீஸ்வரரின்மேற்
சிவஞான மனோரஞ்சித மெனுநூற் சொலவருட்
சிற்பர கணேசமணியே. (௪)

பன்னகம் வாய்த்தேரை ஆலைவாயிற் கரும்பு
படுமனலில் விழுந்த வுயிர்கட்
படும்பாடு படுமெனத் துயரமுக மானைப்
பார்த்தும் பாரதலர்கட்போ
லின்னமு மின்னவெனுங் கொன்னையிற் சின்னமுற
யிருப்பதழகோ வுரைசெயாய்
ஏகாந்த மனதுடைய நாதாக் களல்லாம
லேழையே னறியவசமோ
அன்னையிலாச்சேயு மரசனில் லாக்குடியு
மன்பிலான் பூசைதவமு
மறமிலான் கனதனமு மாசிரில்லாசிட
னருளிலான் பணியுநினைவுஞ்
சின்மயா நவமிஃதென செப்புவரியார் திருமயிலை
ஸ்ரீகபாலீஸ்வரரின்மேற்
சிவஞான மனோரஞ்சித மெனுநூற் சொலவருட்
சிற்பர கணேசமணியே (௫)

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீகபாலீஸ்வரரின்

# சிவஞான மனோரஞ்சிதம்.

## திருவருடவேண்டுஞ் சோடசமாலை.

### கொச்சகக் கலிப்பா

ஞானமனோ ரஞ்சிதமே நாடகமா யயிரானைத்துந்
தானகத்து மேனகத்துந் தானாட்டுந் தற்பரனே
வானவர்க டொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தீனன்மிசைக் கடைக்கணித்துன் திருவருடந் தாண்டருளே (க)

படிமீதென் போலமிகப் பாபமுடன் சாபம்பெற்ற
கடிபட்ட பேதையிலேக் கண்டு மின்னுந் தயையிலையோ?
மடியில்லார்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
செடியன்மிசைக் கடைக்கணித்துன் திருவருடக் தாண்டருளே (உ)

வாயற்ற மூகையென வசைமொழியான் மங்கிவுள்ளச்
தாயற்றச் சேயனைப்போ டயங்குகின்றேன் றுங்குவரியார்
தீமாயமற்றோர்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
யன்மிசைக் கடைக்கணித்துன் திருவருடந் தாண்டருளே (௩)

பூமணமும் பொன்னொளியும் பொலிவதுபோ லன்பருளே
சேமமிகு நிட்டையிலே நிர்த்தஞ்செயுங் கர்த்தீபனே
வாமனரித் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தீமையறக் கடைக்கணித்துன் திருவருடந் தாண்டருளே (௪)

ஆங்காரப் பேய்ச்செயலை யடக்கினமெ யடியர்மன
நீங்காத நித்தியனே நின்மலனே நின்பணிப்பின்
வாங்காதார்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தீங்ககலக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (ரு)

நெறியுடையார் நிலையுடையார் நேசமும் பூசையுமுடையார்
அறிவுடையா ரறமுடையா ரருளுடையா ரண்டிமன
மறிபலிதந்துத் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
சிறியவனைக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (சு)

போக்குசுத்திப் போட்டுவிட்டப் பொய்க்கதையிற் புலவனென
வாக்கியதா லென்பயன்கா ணந்தோ வந்தோ பெருந்துயர்காண்
வாக்கிசைப்பார்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தீக்குணனைக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (எ)

நயமிகுந்தத் தொண்டர்சதா நம்பித்தொழு மெம்பரனே
பயமிகுந்த சீவனெனப் படுகின்ற துயர்தவிர்ப்பாய்
வயமிகுந்தோர்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தியங்குமெனைக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (அ)

ஆடுகின்ற வாட்டமற்று வடங்கிடும்போ லஞ்ஞானப்
பாடுடையச் செயலொடுங்கிற் பற்றற்றுச் சுகமடைவேன்
வாடுகின்றோர்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தேடுமெனைக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (கூ

நாட்டமெலாநின்னுட்ட நலமுடையக் கேளினர்கட்
பாட்டிசைத்துப் பயனடைந்தார்ப் பணிபுரிந்து ணடிபுகுந்தார்
வாட்டமிலார்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தேட்டமிகு கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (க0)

மனமென்னு வனத்தினிலே மாயமெனும் புலியரசன்
கனத்தீப்பு விழைவதனுற் கரணமைந்தக் கசடனையாள்
மனதோய்ந்தோர்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
சினமின்றிக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (கக)

பந்தமெனும் பேய்க்கையின் பந்தாகப் பயிலுகின்றே
னெந்தவகைப் பிழைப்பதென வேழையா னறிந்திலனே
வந்திப்பார்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
சிந்தைசெயக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (கஉ)

தூயகுணமுடைய நலோர்த் தொல்லையற்று ரெல்லையுற்றார்
ஆயனவன் றலையதிலொன் றங்கையினி லேந்தியவா

வாயில்லார்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
சேயனெனக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (௧௫)

மூவகையாம் பசைப்பிடித்து மூடமன மூழ்கியருண்
மேவும்வழிச் சிறிதுமின்றி மெலிந்தேனின் முகம்பாராய்
மாவளமாய்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
சேவைசெயக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (௧௬)

கருவினையின் கட்டறுத்து கழலடிக்குத் தொண்டனெனும்
பெரும்பயனைத் தானளித்தாட் பேதையேன் பிழைத்திடுவேன்
வருந்தியன்பர்த் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
திருதியெனக் கடைக்கணித்துன் றிருவருடந் தாண்டருளே (௧௭)

கண்டமெனு மரணமதாங் காலன்வந்துக் கொடுபோமு
னிண்டைச்சடை முடியானே யிதங்கிநல மீந்திடுவாய்
வண்டமிழால் தொழுமயிலை வள்ளல் கபாலீச்சுரனே
தெண்டனிட்டேன் கடைக்கணித்துன் றிருவருடந்தாண்டருளே (௧௮)

---

## தயாநிதி மாலை.

### எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம். பண்-பஞ்சரம்

சந்திரசேகரனே சச்சிதானந்த தற்பர சிற்பர வடிவே
சுந்தரி வுமையாள் மயில்வடி வமதாய்த் துதிசெய்த சிவபெருமானே
மந்திரவாரணனே மான்மழு மறியு மன்னுஞ்செங்கரனே சுவ்திதனே
எந்தையே அளவில் மகிமைசூழ் கபாலீசனே மாதயா நிதியே (௧)

அண்ணலே ஹரனே ஹரஹர சம்போ அப்பனே அன்னையே அரசே
மண்ணெனு முடலைத் தாங்கியேவளர்த்து மண்ணுக்கு ளுழைந்திடுமாயச்
கண்ணிலுழனை காண்பனோ யேழை கற்றைவார்ச்சடை முக்கண்ணு
எண்ணிலேன் கருத்திலிதங்கியான் கபாலீசனே மாதயா நிதியே (௨)

ஒப்புயர்வில்லா வொருவனே பலவா யோங்கியே திருவுருசரந்து
செப்பருந்தோற்ற மொடுக்கமுமான சிவசிவ சிற்சுகோதயனே
தப்பிதமாயச் சகடையால் மரணச் சாக்காடுத் தவிருமோ சாற்று
யெப்பொருடனக்கு முன்னவா கபாலீசனே மாதயா நிதியே (௩)

முப்பகையாலே மூடிய மூட முன்னற்று லன்றோயான் பிழைப்பேன்
அப்பப்பா யிதனாற் பட்டதும்போது மையகோ யிதனைநீ தடுத்தாள்

கப்பிடும்பசிநோய் நரைதிரைக் காட்டிடை குலைப்போற்றிரிந்தே
னெப்படி சகிப்பே னிறையவனே கபாலீசனே மாதயா நிதியே (௪)

ஆகமங்கற்று நெறிநிலையுற்று வந்தரங்கப்பூசைசெய்து
மாகலைப்பன்னிரண் டன்பருளடக்கம் வாய்மையா மலர்தனைச்சாத்தி
போகமனைத்துமித்தையாயெனப் புன்புலாலியாக்கையைவெறுத்து
ஏக மனமாய்த் தொழவருட் கபாலீசனே மாதயா நிதியே (௫)

பாதமல்லாது வாதரைமீது பாவியேன் வேறுணர்ந் திலனே
சாதனைக்கடந்த சற்குணமுத்தர் சருவமு மொன்றெனக் காண்பர்
பேதமபேதம் பேய்க்குணமெனவே பெரியவர் வகுத்தனரிதனை
ஏதமிலறிய கருணைசெய் கபாலீசனே மாதயா நிதியே (௬)

முத்தொழிலோச்சி மூர்த்தியுமூர்த்த மூதண்ட க்ஷேத்திரமாகி
சத்துடன்சித்து வானந்தமெனவே தழைப்பவா சங்கராபரண
சித்தமொன்றின அன்பருனடியை சேவித்தார் பாவியென்றெரிவேன்
எத்தவத்தோரு மிறைஞ்சிடுங் கபாலீசனே மாதயாநிதியே (௭)

திருவெண்ணீ றணிந்துருத் ராக்கமும்பூண்டு சிவயநமவென மனது
வுருகியேகண்ணீர் கசியக் கசிந்து வோதியேமுத்திவா ழடைந்தார்
பருக்கைக்கேயிரவு பகலுமேவுழைக்கும் பாதகன் கதியென்னப்பகராய்
எருதேறு நந்திமிசைவருகுங் கபாலீசனே மாதயாநிதியே (௮)

திங்களுங் கங்கை கொன்றைச் செஞ்சடையுந் திகழ்பவா சிற்பரவடிவே
மங்கை பங்காளா மான்மழுகரனே மாதவன் மச்சமாய்த் திரிச்ச
துங்கனேஞானத் துரியா தீதமெனுஞ் சுழுச்சியிற் கலந்திடுஞ் சுகமே
எங்கும் வியாபகனே யெழிலுறை கபாலீசனே மாதயாநிதியே (௯)

கருணீகதெய்வக் கண்ணேகண்மணியே கற்பகவல்லித்தாய்க்கனியும்
பெருமானேயன்பர்ப் பேசியே களிக்கும் பிரம்மானந்தத்தின் முடிவே
சருகேனும்பயன்படு மவைக்குங்கேடாகத் தாங்கினேன் பீழைபூழைதனை
இருவினையற்றோ ரேத்திடுங் கபாலீசனே மாதயாநிதியே (௧௦)

ஒருவருமில்லை யென் றுயரறிவா ருத்தமா வுண்மை நீ தெரிவாய்
வெருவலனுக்கி வெகுளியைப்பெருக்கி வேதையில்விடுத்தசென்விதியோ
மருவிய வினைத்து மாய்கைபோராட்டம் வலியவந் துறவாடிக் கெடுக்க
இருதயம் வாடனல்லதோ கபாலீசனே மாதயாநிதியே (௧௧)

சித்தமல்லாது சிறிதசையாதெனச் செப்புநூன் முறைவழியெண்ணி
மெத்தவுந்திகைத்தே னந்தகோ வலியிவ் வேதையை சகித்திடமுடியா
தத்தனேயினியுன் கிருபையின்படியே ஆகுக வதுவுஞ் சம்மதமே
எத்திசையோரும் பணிசெயுங் கபாலீசனே மாதயாநிதியே (௧௨)

தவத்தளவதுவே சார்வதாய் மொழியுஞ் சற்பனைச் சற்பனைப்பலவு
மவமெனமுன்னோர் வகுத்தருங் கழற்கே வான்மாவை யர்ச்சனைசெய்து
சிவமெனக்கமழ்ந்தா ரிது பொய்யலவே சின்மயானந்தவான்பொருளே
எவரிதைமறப்பா ரேகனே கபாலீசனே மாதயாநிதியே (கங)

அன்னையின் கருவிலியாரெனைக் காத்தா ரமலனே தினதன்பின்மகிமைத்
துன்பவாரிதியிற் சுழலுமியானறிந்துத் துதிப்பனோ மதிப்பனோ துகளாம்
வன்கண்ணனென்மூடி யலைந்திறவாதுன் மலரடித் தந்தருட்புண்யம்
என்னைநானறியு முணர்வருண் கபாலீசனே மாதயாநிதியே (கச)

சுகதுக்கமிரண்டும் வேண்டிடாமனத் துறவினர்க்காணுஞ் சிற்சோதி
மகவெனத்தும்பி முகனையுங்கதிர் வடிவேலனை சம்பந்தன்றனையும்
புகழ்பெறவளித்து வசுரரை சமணப் புத்தரை யடக்கியப்புனிதா
இகபரந்தனக்குத் துணைவனே கபாலீசனே மாதயாநிதியே (கரு)

காமனையெரித்து வவன்வலி யடக்கி காரணவாதனைதனை யொடுக்கி
நேமமுநிட்டை யாதும் வேண்டாத நித்திய முத்தர்கட்குறவே
சாமளாதேவி யன்றுமார்க்கண்டன் றன்னுலே வாதையையுற்ற
எமனுக்காக தொழுபவா கபாலீசனே மாதயாநிதியே (கசு)

மச்சமாய்மாய னுதித்தனே ரகலவாஞ்சையரய்த் துதிசெய்தமகத்தே
எச்சமயத்தினுக்கு மேலாக மிளைத்திடுஞ் சைவசிற்பரனே
தச்சனுயுடலாம் வீடதைப்பணித்து சமஸ்த சீவர்க்குளிருப்பவனே
இச்சையற்றவர்களேத்திடுங் கபாலீசனே மாதயாநிதியே (கஎ)

மறையவன்றேட மாதவன்றேட மலையென நின்றனையெனவே
நிறைவுறுஞ்சுருதி முறையினுன் பெருமை நிலவினு மிருவிழிமாயத்
குறைகளையாய்ந்து குணமலி யறிவிற் கூடுதலென லந்தரங்க
மிறைவனீயுணர்த்தி யாண்டிடுங் கபாலீசனே மாதயாநிதியே (கஅ)

பாழெனமுப்பா ழவைக்குமே லொருபாழ் பாரமற் பார்த்திடும் பருதி
யேழையுண்வாயி லடைத்தொரு புரமாயிருப்பதைப் போற்சதாயிருந்து
வாழையைப்போல சனனம் வராது மதிக்குளே மகிழ்ந்து மௌனமுற
ஏழைக்கென் றருள்வா யியம்பிடுங் கபாலீசனே மாதயாநிதியே (ககூ)

தேசுயருனதுத் திருவடியடிமைச் சேர்ந்து சேவித்து நற்புகழை
—கற்ற மனமாய் வாக்கினுற்பாடி மன்னுநின் கருணைக்காளாகி
நேசமுற்றிடுநாள் வாய்க்குமோ வன்று நீசனேன் பிறப்பதுவொழியும்
ஏசிடுமுணவுக் குழைப்பனையான் கபாலீசனே மாதயாநிதியே (உ0)

நல்லவரெல்லா முனதருண் வழியே நாடினுர் சாடினுருழை
கல்லேனுங் கரையு மையோவெனெஞ்சங் கடினமுங் கொடியதுமாகி

வில்லைப்போறேகம் வளைந்தது தீமை விளைந்தன யலைந்தனன் விதியென்
எல்லவர்முன்ன மெளியேனியான் கபாலீசனே மாதயாநிதியே (௨௧)

கனியெனத்தொழும்ப ருண்டுவானந்தக் கடலிடை மூழ்கினரரனே
சனியெனு வினையிற் சனித்திவண் படுஞ் சஞ்சலஞ் சிறிததோ சாற்றாய்
தனியனுய்த்தனித்து சாந்ததேவதையைத் தான்வசப் படுத்திடுமார்க்க
மினதெனத் தெரிந்து வணங்கருட் கபாலீசனே மாதயாநிதியே (௨௨)

பெரும்பயனியாவு முனதல்லா லெனதாய்ப் பேசிடு மாசா பாச மதைக்
கிருபைசூழ்விழியாற் பார்த்தவை யொழித்து கேடனை மூடனைதோடனை
பருதியாம் பதுமக் கழலுக் காளாக்கிற் பற்றுமோ வஞ்ஞானச் சுழல்க
ளிருமல நலம்பொல நீக்கியாட் கபாலீசனே மாதயாநிதியே (௨௩)

சுத்தசாட் குண்ய சூக்மபஞ் சாக்கர சோதியுட் சுடரெனத் துலங்கு
மத்தனே துவிதாத்விதனே சாட்சியனே வைம்முக வைந்தொழினடத்துங்
கர்த்தனே கருணைக் கடவுளே யடிமைக் கருத்தெலாந் தெரிந்தவனே
இத்தகி கடையேன் றனக்கருட் கபாலீசனே மாதயாநிதியே (௨௪)

கலைவழி நின் றுட் கண்ணதைப் பெற்று காமமாஞ் சீராளன் றனையே
தலைப்பலிகொடுத்து சிரதைப்பெற்ற சாதன மியாரறிவார்கள்
மலைப்பமோஹயைச் சூழ்ந்திடிலெங்ஙன் மன்னுங்கா ணுண்மை சைவநிலை
இலையிலையருளெவ் வகைப்பிழைப்பேன் கபாலீசனே மாதயாநிதியே

காட்டினிலெரிக்கு நிலவுங்கருத்திலான் கல்வியுஞ் செல்வமுஞ்சிறப்பு
மேட்டினி லெழுகி வைத்திடு நூலு மிசையிலான் பாடிடும் பாட்டும்
வேட்டுவன் வலையிற் பட்ட சீவர்களும் வெளிப்படா பயன்படா வீணே
ஈட்டியை யுதைத்தா லென்கதியோ கபாலீசனே மாதயாநிதியே (௨௬)

சமரசஞான சர்ச்சனர் நேச சங்கமே சதுரித மெனவே
நிமலர்களாகு நிரதிசயானந்த நிட்டையர் நீதியா யமைத்தார்
கமரினிற் பொருளை சிந்துவான்கதி கன்மநீடினதந்தோ வந்தோ?
இமயவரேத்து மெம்பரனே கபாலீசனே மாதயாநிதியே (௨௭)

துங்கவான் பொருளே சுயம் பிரகாச தூமணியே சுகாதீதமே
சங்கரா சமஸ்த சீவரட்சகனே சதுர்முகன் சிரங்கரங் கொண்ட
யெங்களுயகனே யெவைக்கு மாதார யிறைவனே மாமஹாதேவே
இங்கித வடிவே யேழைக் கருட் கபாலீசனே மாதயாநிதியே (௨௮)

சொன்னயம்பொரு டொடர்நயந்தோன்றத் தொன்னூல்முறை பிறழாம
லென்றும் பயன்பட வேதமா யெழுத்தை யெழுதினு ருலகம் போற்றவே
பன்றிகட்போல புல்லர்க ளட்சரப் பகுப்பின்றி மகிமையைக் குறைப்பார்
என்றுலுஞ் சிறிதுங் கேடிலை யிலை கபாலீசனே மாதயாநிதியே (௨௯)

புனலிலேலிட்டமணைவென்றதும் பொய்யதோ இதைமறுப்பவரியார்
கனலினிற்பொன்னு யமைந்தவுண்மையினைக்கற்றவரன்றோசீரடைந்தார்
தனயிரு தனத்திற் சிக்கிடிற் சமயச் சார்பினைச்சார்வது வறிதே
இனத்தைவிட் டலைவேனென்னே? சொல் கபாலீசனே மாதயாநிதியே

வேதமேவேதத் தெழிலேந் விறையே விகிர்தனே விற்பனவிளைவே
நாதமே நாத நடுநிலைக் கருத்தே ஞானமே ஞானத்தின் முடிவே
போதமேபோதப்புதையேபொக்கிஷமே பொன்னேமாமணியேபூஷணமே
ஏதமென்பதிலா மோனமே கபாலீசனே மாதயாநிதியே (௩௧

நன்மைசே ருளத்தி னுடைக மாடு நாயகா நாயினுங் கடையே
னென்பலன்பெற யிவண்விடுத்தனை யெவரிட மென்குறையிசைப்பேன்
மன்றவே நடிக்கு மாணிக்கப் பாத மன்னுமோ பாவி நெஞ்சதிலே
இன்பவீ டருளு மெந்தையே கபாலீசனே மாதயாநிதியே (௩௨)

காப்பதுங் காத்துக் கருணைசெய்பவனுங் கடையனைக் கைவிடாதாண்டு
மூப்பது வருமுன் றிருவடிக் காளாய் முத்திவாய்ந் திடுநெறித் தந்தாற்
சாப்பாடு வினைத்துஞ் சஞ்சல மெனவே தானறிந் தேத்துவே னேமன்
எப்பமிட்டுயிரைக் கொளிற் பயனிலை கபாலீசனே மாதயாநிதியே (௩௩)

களியிலே நழுகி காலொடிந்தவனைக் கட்டியே தூக்கி யாதரித்து
வெளிப்படாகாப்போர்த் தனைநிகராடியேன் வேதனையை நீக்கியேகாப்பாய்
அளிந்தத் தீம்பழமே அற்புத சொரூபா அறுபத்து நால்வர்த்தொழுமமலா
எளியவ னெனவே நீக்கிடா தாள் கபாலீசனே மாதயாநிதியே (௩௪)

அப்பரவணிந்த வாதிமத்யாந்த வண்ணலே சருவலட் சணனே
செப்பரு மறையுட் செறிந்தப லுருவே சின்மயா சிவபெருமானே
உப்பிட்ட பாண்ட மொன்பது வாயினி லுறையுமு னுற்பவச் செயல்க
ளெப்படியோ வப்படி யருட்புரி கபாலீசனே மாதயாநிதியே (௩௫

---

## கடவுள் சத்தமணிமாலை

பன்னிருசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

ஆரணமெலாம் பணியு மற்புதசற் பரசகுண
வதுலித சம்பன்னவிபுத
வாச்சர்ய ஷட்பாவ மற்றநிரா மயசுபிக்ஷ
வனந்தபத வ்யோமதத்வ
பூரண விலாசனே புரந்தரனே கருணைமலி
புண்ணியபரா பரவடிவமே

பூசுரர்க ளெஞ்ஞான்றும் பூசனைசெ யண்ணலே
புனிதனே தேவதேவே
நாரணனு மலரவனு மண்டரிந் திரர்முனிவர்
நவிலரிய சித்தர் முத்தர்
நமசிவய வெனத் தொழும் பதுகுலவ வரமுதவு
நாதனே பஞ்சமூர்த்த
காரணமுங் காரியமு மானவா திருவருட்
கடாட்சிக்க வேண்டுமையனே
கயிலையெனு மயிலைவளர் கர்ப்பகவல்லிசமேதக்
கடவுளே கபாலீசனே (க)

விண்ணவரு மண்ணவரு நண்ணிதுதி பண்ணவரு
விகிர்தனே விமலனே மஹா
வித்தக மெய்ப் பத்திபுரி வுத்தமர்க ணத்திதிரு
வெண்ணீறு பூசியேத்தி
எண்ணரிய வரம்பெற்று விளங்கினா ரிவ்வுண்மை
யேழையே னென்னறிகுவேன்
எப்பொருடனக்குமுன் னவனே மெய்யாளருள
மிமைப்போது நீங்காமலே
தண்ணளிசூழ் வரந்தந்து காத்த சிவ சங்கரா
சம்புவே சகஸ்ற்றிர நாமா
சச்சிதானந்தனே சமஸ்தவை போகனே
தனைநிக ரிலாதபரமே
கண்ணிலொளி போலவே கருத்தினில் விளங்கிடுங்
கருணீக ஜெய சீலனே
கயிலையெனு மயிலைவளர் கர்ப்பகவல்லிசமேதக்
கடவுளே கபாலீசனே (உ)

பூதமும் பொறிபுல னடங்கியே மௌனநிலைப்
பொருந்தினார் முன்னவரெலாம்
பொய்வேடம் பூண்டலையு மென்கதிய தென்னவோ
புகலடைந்த னனையனே
சாதனை நான்கினு மவரவர்க் கேற்றவுருத்
தாங்கிவரு மமலரேறே
தல்கொணு வுயிரிடர் தழைப்பவா சச்சித
சதானந்தனே மறைசொலும்
போதனே புகலரிய சைதன்ய மூர்த்தியே
பொய்யிலா ருண்ணுங் கனியே

புத்தி நடு மத்தியதி னிர்த்தமது புரிபவா
போற்றிசெய போற்றியெனவே
காதலுடன் வந்தடைந் தவர்க்கருள் பொழிகின்ற
காருண்ய சிவவடிவமே
கயிலையெனு மயிலைவளர் கர்ப்பகவல்லிசமேதக்
கடவுளே கபாலீசனே (௫)

எல்லவரு நல்லவர்க ளென்பதற் கையமிலை
யிடருடைய வேழையென்போ
லெங்கணுங் கிடையாது தடையாது மிலைசொனே
னெம்பரனே கங்கைவேணி
சல்லாப மலியுலக வேட்கையெனுங் காட்டிலே
தானென்ற வாண்மையாலே
சஞ்சாரப்பிணமாகித் தவிக்கிறேனையகோ?
சாமி நீ யறிந்தவண்ணம்
பல்லாயிரஞ் சரண் செய்கின்றே னநாதியனைப்
பாதுகாத் தருளவேண்டும்
பார்க்கின்ற சகலமு முனதருளல்லாமற்
பாரினி லென்னுணர்வதோ
கல்லாத பாபியைக் கைவிடின் றவிப்பதே
கடையவ னெப்படி பிழைப்பேன்
கயிலையெனு மயிலைவளர் கர்ப்பகவல்லிசமேதக்
கடவுளே கபாலீசனே (௬)

இனியெந்த நாளுனது கருணைவருமோ வறியே
னெவ்வணஞ் சகிப்ப துரையாய்?
ஏகாதி பத்தியனே யிமையவர்க் கருடந்த
யெம்பிரானே மும்மலச்
சனியது பிடித்திடத் தாங்கொணா மிடியடா
சங்கேதங் கொண்டுழல
சம்மத முனக்காயி னியாவருள ருந்தனைத்
தடுக்கவோ முடிந்திடாது
பனியான ததுசூர்யன் முனமொடுங் குதற்போல
பாபியேன் வினையனைத்தும்
பகரரிய வருளதனா லோடியே பதுங்கிடும்
பட்சம்வைத் தாதரிப்பாய்
கனிவிலா நெஞ்சக னியானெனினு மேழையைக்
கடாட்சிக்க வேண்டுமையனே

கயிலையெனு மயிலைவளர் கர்ப்பகவல்லிசமேதக்
கடவுளே கபாலீசனே (௫)

தஞ்சமென வந்தடைந் தேத்திதுதி யெளியவன்
றன்குறையு முறைகேட்டிடாய்
சருவசாட்சிய நாத கருதரிய மறைபோத
சசிகண்ட சாமகண்டா
பஞ்ச பூதத்தினு லெஞ்சியே கெஞ்சுநிலைப்
பரமனே யறிந்து மென்றன்
பரிதாபந் தீர்க்கிலா தென்கொலோ? யிச்சமயம்
பட்சம்வைத் தாதரிப்பாய்
மஞ்சையா யுமையுரு கொண்டேபுன்னைத் தருவடியில்
வாஞ்சித்து லிங்கமதனை
வணங்கிடக் காட்சியது தந்தவா நந்திமிசை
வலம்வருகுஞ் சிவபிரானே
கஞ்சனின் சிரமேந்துங் கையனே மெய்யனே
கனக வொளி நிறை மேனியா
கயிலையெனு மயிலைவளர் கர்ப்பகவல்லிசமேதக்
கடவுளே கபாலீசனே (௬)

மடைதிறந் தோடிடு வாரியென நினதருண்
மன்ன வினை யின்னலவைகண்
மறையவுங் காருண்ய நிறையவு நினதுகழன்
வணங்கவென் றருடருகுவாய்?
தடைப்படா மனச்செருக் குளவரையு மெவ்வணஞ்
சாத்திரந் துள்ளமகிமைத்
தனையுணர்ந் தேத்திட புல்லனியா னறிந்திலேன்
சமரச சர்க்குண பூதியனே
அடைப்பட்ட மிருகமது வாக்ரமித் தெழுந்துயிர்க்
காகாரங் கொள்ளும் வண்ண
மந்தகோ? எமனண்டிப் பிடித்திடி லெவர்த்துணை
யாவுநீ யறிந்ததன்றோ?
கடைப்பட்ட பேதையேன் றனையடிமைக் கொண்டருளுங்
கங்கைவேணியனே ஹரனே
கயிலையெனு மயிலைவளர் கர்ப்பகவல்லி சமேதக்
கடவுளே கபாலீசனே. (௭)

## ஹரவோம் சிவபர துவாதச மாலை.

**எண்சீர்க்கழிநெடி லாசிரிய விருத்தம். பண்-இந்தளம்**

கருணாகரப் பொருளேபொரு ளுறவேபுரா தனனே
கண்ணேகண் ணுளொளியேவுருக் காட்டுந் தி[illegible]ணுதயனே
தெருளேமறைத் தெளிவேதெளி தேனேதீஞ் சுவையே
திகழற்புத மிகுதற்பர புகழ்விற்பன மகிழ்வே
பெருமாதவ ருளமேவுளத் தவனேபகாப் பதமே
பேசாமலே பேசுஞ்சுகா தீதப்பர வெளியே
அருளேயருண் மழையேமழை வளமே கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (க)

பகரும்பல வடிவேவடி வதனுண்மறை யுயிரே
பணியேநலப் பணியேதரு மணியேதேவ ரணியே
புகலேதர வருகுந்தயைப் புனிதா புராதனனே
பூர்க்காமலே பூர்த்துமணம் பொருந்துந்திவா கரனே
சகலாகமஞ் சொலுஞ்சத்துவ சதுரேஞான மதுவே
சதிசற்பனை விதிபுற்புதந் தனைப்போக்கிடுந் தவமே
அகலாமனத் தவர்பானடம் புரிகபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (உ)

தேடர்க்கரி யவனேதிகம் பரனே மனோகரனே
திதியேதரு நீதியேயொளி மதியே பசுபதியே
பாடர்க்குரி யவனேபண் ணிசையே யிசைத் தொனியே
பாராமலே பார்த்துமகிழ் பஞ்சாக்கர வுருவே
கேடர்க்கரி யவனேகிளைப் பவனே கிருபாகரனே
கேளாமலே கேட்டுவுளே கீர்த்திக்கொளு மரசே
ஆடர்க்குரி யவனே வகிலேசா கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (ங)

முத்தர்க்குளே முறையின்படி முனிவாய்நிறை முதல்வா
முதிருஞ்சுவைக் கனியானவா மூடனெவ்வா றடைவேன்
சித்தர்க்குளே பலவாச்சார்ய செயலேசெயுந் தேவே
தெரியாமலே தெரிவார்சனே தெளிவா ரிதன் குணமே
பத்தர்க்குளே பயிலும்பரி பூர்ண சுகார்ஜிதமே
பரமானந்தந் தருமண்ணலே பகர்வாரெவருருவே
அத்தாபரி சுத்தாமனக் கர்த்தாகபாலீச் சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (ச)

பதந்தந்தருள் பவனேஞான காரனேசாட்சா தீசுரனே
பவமேவரு மவமேபுரிந் தனனேயென்செய் குவனே
நிதமுன்னடி நினையேன்பழி நினைவேநிறை நீசன்
நெஞ்சாரவே வஞ்சஞ் செய்வே னஞ்சேனொரு தினமே
இதமேபுரி பவர்க்கேயிடர் விளைவேன் நீயினுளைவே
னெனைநேரொருப் பதடனுல கெங்குமிலை யுண்மையதே
அதமிஞ்சியே யழிவேனை யாள்குவையோ கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே. (ரு)

கற்றார்நிலை யுற்றருயிரை விற்றருண தடிக்கே
கருதார்வினைப் பொருந்தார்களு ழருந்தார் தவத்தோடிருந்தார்
மற்றாரிதற்குச் சுற்றமே மருந்தே நாய்நரி விருந்தே
மதியேகுலைந் துவிதிபோலலைந் துமறந்தேன்பழியிற் சிறந்தேன்
பற்றாமலே பற்றிக்கொளும் பணிவாய்த்திடுந் துணிபே
பகராமலே பகர்வாரெவர் பதியே தயாநிதியே
அற்றார்விதி யவரேமஹா பெரியோர் கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே. (சு)

கடமானதை யிடமாகவே கணித்தாயருட் பணித்தாய்
காணும்படி கருத்தேதருங் கர்த்தாயாவுநிர் மித்தாய்
திடமாயுன துருவானதைத் தெரியேன்வெகு சிறியேன்
செயலுஞ் செய்கை யுடனேசிந்தையதுவுஞ் சிந்திப்பதுவுந்
தொடராப்படி நெறிவாய்த்திடின் சொல்லாசுகஞ் சூழும்
தொந்தோம் தொந்தோமெனவே பவந்தொலையும்வரு மிதமே
அடயோகியர் தனக்குடரி சிக்குங் கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே. (எ)

புலையர்களா மைவர்த்தன் ஞற் பொலியும்பல நலிவாற்
பொறையென்பதோர்ச் சிறிதுமின்றி போனது நாளதுவே
கலைசொற்படி நடவாமலே கழித்தேனுனிற் கொழுத்தேன்
கன்மமல்லான் றன்மமிலை வன்மநிறை சன்மம்
மலைவுற்றிடும் பலவிற்பன மதியானது சதிசெய்
மாற்றானெனக் காற்றடியாய் மாறிதுன்பஞ் சேறும்
அலைவுற்றலை யதினுனல மறியேன் கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே. (அ)

சிறகற்றவோர்ப் பறவைநிகர் சிதறிமனம் பதறிச்
செய்யாமிடிச் செய்தேனிவைத் தீரும்வழிகூறாய்

துறவுற்றந லவரே மாயைத் தொலைத்தார் விதியைக் குலைத்தார்
சுகதுக்கமும் பரிதாபமுந் தோன்றாதவர் முனமே
மறமுற்றவர் களுக்கிந்நெறி வாரா வெழிடாரா
வரமுமோனத் திரம்பெற்றிடின் வாய்க்குங்கனிகாய்க்கும்
அறமுற்றவ ரடையும்பல னருளே கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (௯)

மயமியாவுமுன் மயமே சிவ மயமே சிவமயமே
மலையான்மக டனையேமணங் கொண்டசோம சுந்தரனே
நயமாமிரு தயமீதுறை நாதா பிரக்யாதா
நம்பிமனம் வெம்புமிந்த நாயேன்றனை யாளாய்
கயவக்குண மவியுமெனைக் காப்பாரெவர் சேர்ப்பார்
கயிலாயமே மயிலைத்தனிற் காட்டுஞ் சூக்மவடிவே
அயனின்சிரங் கரங்கொண்டவெ னப்பா கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (௰)

இனியாகிலு முனதுக்கழ லிறைஞ்சுமதி யருளி
லின்னலவை யகல்வேன்றுதிப் புகல்வேன்பதி யடைவேன்
பனியானதுப் பருதிமுனம் படராவினைத் தொடராப்
பலனுனது நலமானதாய்ப் பறைந்தார்கண் முன்னவரே
கனியாக்கனி சுவைதந்திடக் காணுதனுபவமே
கருதுக்குண செயலவ்வணங் காட்டும்பழி வாட்டும்
அனியாயநெஞ் சினனியானுநீ யறிவாய் கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (௧௧)

பார்க்கப் பரிதாபக்கதி பற்றிவுயிரைச் சுற்றிப்
பண்ணுக்கோலம் பண்ணவுனை யெண்ணவினை புண்ணுஞ்
சேர்க்கைத்தனு லார்வப்படு மூர்க்கப்பய லைவர்
சிந்தையைதூர்க் கந்தமிகு சிந்தைத்தனின் மூந்தத்
தீர்க்கப்படு முறைபோலவைத் தீர்ப்பார்விழி பார்ப்பார்
சிறியேனறிந் திலனேயென்னச் செய்வேன் வழிவுய்வேன்
ஆர்க்குந்துணை நீயல்லவோ அபயங் கபாலீச்சுரனே
அரவோம்ஹர ஹரவோம்ஹர ஹரவோம் சிவபரனே (௧௨)

## கலிவிருத்தம்.

போற்றி சங்கர போற்றிக் கைலாசனே
போற்றி ஹரஹர போற்றி மைலேசனே
போற்றி சிவசிவ போற்றி கபாலீசனே
போற்றி பூங்கழல் போற்றிசீர் போற்றியே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# சிவநேசர்க்கும்மி.

## கணேசர்

ஜெய விநாயகன் றாட்டேடி—மகிழ்
சித்திபுத்தியின் புகழ்நாடி
நயஞ்சேர்க் கும்மி யதைப்பாடி—அன்பு
நாட்டுங்கள் மெய்ச்சிவ நேசர்களே (௧)

கணங்கட் கிறைவன் கணபதியே—நற்
கலைமா தேத்து மணிநிதியே
குணங் கமழ்த் தலைமைப் பதியே—துணைக்
கொண்டு வாழ்வீர் சிவ நேசர்களே (௨)

மாலயன் கண்டு பணிந்தேத்த—வரம்
வழங்கியன்னோர் மிடிதீர்த்த
மூலப் பிரணவனை வாழ்த்த—எல்லாம்
முற்றுப் பெறுஞ் சிவ நேசர்களே. (௩)

சங்காழி கண்ணர்க்குத் தந்தானே—பல
சாட்சிக்கொண் டுருவாய் வந்தானே
எங்கு நிறைந்த பரந்தானே—சதா
யேத்தித் தொழுஞ் சிவ நேசர்களே. (௪)

மரகதமுனி செய்தவத்தை—பூத
மங்கைக் கெடுக்க வந்த விபத்தை
சரணடைந்த தேவர்க் கவத்தை—தீர்த்த
தந்தாவளன் சிவ நேசர்களே. (௫)

அம்பிகை யோடு வரன்பார்க்க—மைமி
யானோர் மண்டபச் சித்திரம் பூர்க்க
நம்பின தேவர்களைக் காக்க—கண
நாதன் வந்தான் சிவ நேசர்களே. (௬)

ஓம்சிவ கணேச வென்றோதி—சூர
னுயிர்விடுமுன் னம்பரஞ்சோதி

தாம்வேண்டும் வரங்கள் நீதி—படி
தந்தேறினார் சிவ நேசர்களே. (எ)

வல்லாளன் செய்தப் பூசையாலே—பிதா
மங்கித் துயருற்றான் நீதாலே
சொல்லரியப் பேர்க்கொண் டன்பாலே—தொழத்
துணைக்கொண்டான்சிவ நேசர்களே. (அ)

சேரமகாந்த மன்ன னூழ்வினையே—நீங்க
சூட்சிதமான புராணந்தனையே
நேமமிட்டையாற் றிணநினையே—பழி
யில்லா தோடுஞ் சிவ நேசர்களே. (கூ)

தானே பிர்மமென் றுரைசனகன்—எதிர்
சங்கையறக் கண்டா னக்கனகன்
ஆனேறு மீசன் மகிழ் மனத்தன்—தொர்ந்தி
ஐங்கரத்தான் சிவ நேசர்களே. (ய)

விக்கினந் தீர்க்கும் விநாயகனே—சர்வ
வித்தைகளுக்கு மெய்த் தாயகனே
முக்கண்ணார்க் களிக்குஞ் சேயகனே—மூல
முத்திப் பொருட் சிவ நேசர்களே. (கக)

## சிவபெருமான்

முப்புரந் தன்னைச் சுட்டெரித்தான்—காமன்
மூர்க்கமுந் தக்கனையு மழித்தான்
அப்பரவம் மழுமான் றரித்தான்—கங்கை
யாள னுருஞ் சிவ நேசர்களே. (கஉ)

சோமன் சூர்ய னக்னி மூன்று—விழித்
துலங்க மங்கைபாகன் சான்று
நேமம் வழாருக் கருளீந்து—சதா
நின்றானரன் சிவ நேசர்களே (கங)

பார்வதா தேவி யிடப்பாகம்—கொன்றைப்
பனிமலர்ச் செஞ்சடையும் போகம்
சீர்த்திகிறை வெண்ணீறேதேகம்—அக்கம்
திருவிழிகட் சிவ நேசர்களே. (கச)

மாலயன் தேடி மயங்கிடவே—அண்ணா
மலையாய் நின்றார்த் தியங்கிடவே

பாலனுக் கன்பு வழங்கிடவே—கூற்றன்
பதைத் தழுதான் சிவ நேசர்களே. (க௫)

ஆயனுக்குச் சாபந் தந்தானே—தாழை
யானதுங் கெட்ட ததித்தானே
மாயன்கண் வைத்துத் துதித்தானே—ஈசன்
வல்லபஞ் சொல் சிவ நேசர்களே (க௬)

பார்த்தன் வணங்கக் களித்தானே—அன்று
பாசு பதாஸ்திர மளித்தானே
மூர்த்திகரமாய்ச் செழித்தானே—கைலை
முன்னோ னவன் சிவ நேசர்களே. (க௭)

பாற்கடலில்வந்த வாலமதை—அன்பாய்ப்
பருகியே காத்திட்டக் கோலமதை
யேற்றுக் கொண்டுச் செய்நீ சீலமதை—வர
மீவான் பரன் சிவ நேசர்களே. (க௮)

சண்முகர்க்குஞ் சம்பந்தர்க்குந் தந்தை—செயல்
தான்காணு வந்தது யென்னவிந்தை.
எண்டோளு மைம்முகங் கொண்டயெந்தை—கழ
லென்றுஞ் சதஞ் சிவ நேசர்களே. (க௯)

காளிதோர்க்கத் தில்லையி னடித்தான்—வேதங்
கையா லெழுதி யன்று முடித்தான்
ஆளாய்ச் சுந்தரர்க் கன்றுபடித்தான்—உண்மை
ஆராய்ந்துப் பார் சிவ நேசர்களே. (௨௦)

கண்ணப்பனெச்சிலைத் தானுமுண்டான்—லிங்க
காட்சித் தந்தான் மறையோனுங் கண்டான்
பண்ணிசைக்க சீர் மகுடம் விண்டான்—தன்
பட்சத்தைக் காண் சிவ நேசர்களே. (௨க)

புலியத ளுரித்தே போர்த்தான்—என்பு
பூண்டடி யார்கள் வினைத்தீர்த்தான்
பலிதந்த சேயனுயிர்க் கார்த்தான்—தன்
பராக்கிரமமே சிவ நேசர்களே. (௨௨)

கரிக்குருவி வலிதாக—பன்றி
கண்டோர்த் தியங்க ...திரியாக
பரிவு பெற்ற பெரும் யோகம்—தந்த
பண்பென்ன சொல் சிவ நேசர்களே. (௨௩)

கல்லானையுங் கரும்புத் தின்ன—னோன்
கற்றயிலக்கணத் தாலே முன்னம்
வல்ல வரனைக் காணுன் பன்ன—கலே
மாசற்றதோ சிவ நேசர்களே. (௨௪)

இலக்கண மென்ப திலட்சணமே—அரு
ளெய்தினோர்க் காணுந் தட்சணமே
துலக்க முள்ளோர்க்கு அச்சணமே—உருத்
தோன்றி நிற்குஞ் சிவ நேசர்களே. (௨௫)

பிட்டுக்காய் மண்ணைச் சுமந்தானே இந்தப்
பிரபு லிங்கமுணர்ந்தா ரியார்த்தானே
அட்டவித புட்பத்தால் தானே—தினம்
அர்ச்சனைச் செய் சிவ நேசர்களே. (௨௬)

ஆயன் கபாலங் கைக்கொண்டானே—மயி
லாயுமை போற்றிடக் கண்டானே
மாயோனு னந்திமே லூர்ந்தானே—சுக்கிரன்
வணங்கிடவே சிவ நேசர்களே, (௨௭)

சுப்ரமண்யர்.

ஈசன் றிருவிழியி னனலே—வரு
வெய்தி யறுமுக மாய்ப்புனலே
வாசமாய் கார்த்திகை யர்ப் பாலே—உண்டு
வந்தான் கந்தன் சிவ நேசர்களே. (௨௮)

சூரசம்ஹார சுப்ரமண்ணியன்—சேவற்
றுவசமும் வேற்கரங் கொண்டகண்ணியன்
காரணம் போதித்த மாபுண்ணியன்—அரன்
கண்மணியாஞ் சிவ நேசர்களே. (௨௯)

மாலின் மருகன் முருகேசன்—மந்த்ர
வண்மை யரனுர்க் குபதேசன்
ஞாலம்பணியுங் குமரேசன்—பத
நாடி தொழுஞ் சிவ நேசர்களே. (௩௦)

ஆறுமுகம் பன்னிரண்டு புயன்—கலே
ஆருதாரங் கொண்ட சத்வநயன்
கோறுமன்பர்களி னிருதயன்—ஞானக்
குழந்தைவேற் சிவ நேசர்களே. (௩௧)

சரவண பவனே குகனே—வரந்
தந்தருட் செய்யுந் தவமுகனே
புரந்தர கங்கையன் மகனே—எனப்
போகும் பாபஞ் சிவ நேசர்களே (௩௨)

## திருஞான சம்பந்தர்.

ஞானசம்பந்த சிகாமணியே—சைவ
நாட்டித் தந்த மெய்யருட் பணியே
வானவர்த் தானவர்க்குந் தினியே—நலம்
வழங்கினர் சிவ நேசர்களே (௩௩)

காழி பிரானுகவே வந்து—உமைக்
கலசத்தால் பால்தரப் பருகி யன்று
மாழையதாய் மகிமைப் புரிந்து—நின்ற
மாண்பினைக் காண் சிவ நேசர்களே. (௩௪

புன லனலிலு மேயேடு—யிட்டு
புத்தமன் பட்டத் துன்பப்பாடு
மனங்கண்டு சைவத்திற் கீடு—பட்டால்
வாழ்வதுவே சிவ நேசர்களே. (௩௫)

பாண்டியனைச் சூலை நாடியதே—நீற்றுப்
பதிகத்தாற் பறந் தோடியதே
ஆண்டபொய்ச் சமயம் வாடியதே—உண்மை
ஆராய்ந்துப் பார் சிவ நேசர்களே (௩௬)

புத்தம னேலே வாளையாக—கடற்
பூர்க்கச் செய்தார் மகிமையாக
பத்தர்க்குப் பத்திசெந் தேனுக—உண்டு
பற்றற்றாரே சிவ நேசர்களே. (௩௭)

கழுவேறித் தொங்கியே மடிந்தார்—கண்
காட்சியுற்றார் சைவத்திற் படிந்தார்
பழுது சொன்னோர்ப் பவம் முடிந்தார்—பாடு
பட்டாற் பங்காஞ் சிவ நேசர்களே. (௩௮)

செட்டிமக ளங்கம் பெண்ணாச்சு—எல்லாத்
தேசத்திலுஞ் சைவ முண்மையாச்சு
பட்டிமா டாவார்க் கதையேச்சு—என்னப்
பண்ணுஞ் சொல்லுஞ் சிவநேசர்களே. (௩௯)

## சுந்தரமூர்த்தி.

சுந்தர மூர்த்தியு மாரூரில்—வந்து
சுபங்கொள்ள யீசனு நேரில்
வந்து தடுத்தாட் கொண்டார்ப் பாரில்—கைலை
வார்த்தைப்படி சிவ நேசர்களே. (௪0)

பாடுந் தொழிலே யிச்சையாக—சொல்லப்
பாடினார் பண்சீர்ப் பித்தனாக
கூடும் பரவைபாற் றூதாகக்—கொண்டக்
கோலத்தைப் பார் சிவ நேசர்களே. (௪௧)

வன்றொண்ட னென்னும்பேர்க் கொண்டாரே—அன்பர்
மாண்பின் றிருத்தொகை விண்டாரே
சின்மயக் காட்சிக் கண்டார் நேரே—பக்தி
தேர்ந் துணர்வீர் சிவ நேசர்களே. (௪௨)

குளத்தி லிட்ட பொன்னை நதியில்—அவர்க்
கோரிக்கைப் போலெடுத்தார்த் துதியில்
உளம்போற் பஞ்சம் அன்னமலையால்—நில்லா
தோடினதே சிவநேசர்களே (௪௩)

கல்லது கனக மாகினதே
கலியாணம் பின் விழிப் போயினதே
அல்லல் தீர்க்குங் குளத்தில் மூழ்கினதே—விழி
யடைந்தனரே சிவ நேசர்களே. (௪௪)

முதலையுண்ட பிள்ளைப் பிழைக்க—கண்டோர்
முன்னோ னானசீ ரென்றுச் செழிக்க
இதமாய்ச் சேரமானுந் தழைக்க—மந்திர
மீந்ததைப் பார் சிவ நேசர்களே. (௪௫)

## அப்பர்.

ஆமூரில் வந்த மருணீக்கி—சைவ
மகன்றுப் புன்சமணந் தேக்கி
நேமமறச் சூலைக் காளாக்கி—துன்ப
நேடினமே: சிவ நேசர்களே (௪௬)

அமண மார்க்கத்திற் சென்றாரே—புத்த
ரானவரை வாதில் வென்றாரே
அமலனீறால் நோயைக் கொன்றாரே—தன்
அப்பியராற் சிவ நேசர்களே (௪௭)

ஆலத்தைப் பால்போற் குடித்தாரே—ஆணை
அடிதொழச் சமணர்த் துடித்தாரே
சால சைவமெய்ப் படித்தாரே—மன்னன்
றன்றொழுதான் சிவ நேசர்களே. (௪௮)

தழலு நீராய்க் குளிர்ந்ததுவே—பொய்ச்
சமயப் பற்றுக ளொளிந்ததுவே
விழைகருங்கல் தெப்ப மானதுவே—ஞான
மேன்மையைப் பார் சிவ நேசர்களே (௪௯)

அப்பூதி செய்தத் திருப்பணியும்—குரு
ஆசாரத் தார்ப்பெற்ற மகத்திணியும்
மெய்ப்பட யெழுப்பிய வியனணியும்—கண்டார்
விலகுவரோ சிவ நேசர்களே. (௫௦)

மன்னன் சமண் பாழிக ளிடித்தான்—சைவ
மண்டப மாலயமும் முடித்தான்
நன்மை நிலையைக் கண்டுப் பிடித்தான்—இதை
நம்பில் கெடார் சிவ நேசர்களே. (௫௧)

மாணிக்கவாசகர்.

வாதவூர் வந்த சிகாமணியே—திரு
வாசகஞ் சொன்ன தவமுனியே
நாதனைக் கண்டு தொழும் பணியே—பெற்ற
நாட்டத்தைக் கொள் சிவ நேசர்களே. (௫௨)

மந்திரியார் தொழிற் செய்தாரே—புத்த
மார்க்கத் தலையதைக் கொய்தாரே
சுந்த்ர நீறில்லாரை வைதாரே—அருட்
சொந்தமென்றார் சிவ நேசர்களே. (௫௩)

திருப்பெருந் துறைச் சேர்ந்தாரே—பணி
செய்ய வேண்டியன்புக் கூர்ந்தாரே
கருத்துப் போலீசன் நேர்ந்தாரே—வேறு
காட்சியேன் சொல் சிவ நேசர்களே. (௫௪)

நரியெல்லாம் பரியானதுவே—பரி
நரிகளாய் மாறிப் போனதுவே
பிரிவிலார்க்கு தவமெதுவே—நல்லோர்
பேதப் படார் சிவ நேசர்களே (௫௫)

வைகைப் பெருக்குற வைத்ததுவே—பிட்டு
வாங்கி புண்ணவுரு வாய்த்ததுவே
செய்கை வேந்தனறி யாததுவே—பின்புத்
தேம்பின தேன் சிவ நேசர்களே. (௫௬)

ஈச னெழுதத் தமிழ்வேதம்—சொன்ன
வின்ப மறிந்தார்ப் பலபேதம்
ஆசித்துக் கொள்ளார் வேறோர்ப்போதம்—உன்னு
ளாய்ந் துணர்வீர் சிவ நேசர்களே. (௫௭)

புத்தரைக் காணு திருந்தாரோ—நீறுப்
பூசாரைப் பார்க்கப் பொருந்தாரே
சித்தஞ் சிவமா யிருந்தாரே—உண்மைச்
சேர்ந்தால் வருஞ் சிவ நேசர்களே. (௫௮)

ஊமைப் பெண்பேசவே கொண்டாட்டம்—புத்தர்
ஊமையாய்ப் போனது திண்டாட்டம்
நாமகட் போனப்பின் போராட்டம்—நீங்கி
நாட்டங் கொண்டார் சிவ நேசர்களே. (௫௯)

பொய்யறிந் தேந்தல் மதித்தானே—நீறுப்
பூசி சைவத்தைத் துதித்தானே
வையமேன்வேறு பதிதானே—சொல்லி
வாழ்த்துதல் வீண் சிவ நேசர்களே (௬௦)

சம்புவின் ஞான மறைத் தழைக்க—சதா
சார்ந்த திருத்தொண்டர் கட் செழிக்க
உம்பரர் போல வருட் கொழிக்க—சைவ
மொன்றுதான் மெய் சிவ நேசர்களே. (௬௧)

## திருத்தொண்டர்.

தில்லைவாழ்ந்தணர் செய்யாகம்—மன்றுள்
தேவ ரறிந்துத் தரும்போகம்
வல்ல நீல கண்டத்தால் மோகம்—மாற்றி
வாழ் வடைந்தார் சிவ நேசர்களே. (௬௨)

ஓடுங் கோவணமுந் தந்தாரே—பணி
வோங்குத் தனத்தி லுவந்தாரே
ஆவலுட னரன் வந்தாரே—இதை
யாரறிவார் சிவ நேசர்களே. (௬௩)

சீராளன் றன்னை வதைத்தாரே—பள்ளிச்
சென்றுப்போ லுயிர்ப் பிழைத்தாரே
ஆராலாகுஞ் சொல் பழித்தோரே—இது
அற்ப மாமோ சிவ நேசர்களே. (௬௪)

தன்னை யழிக்காததே ஞானம்—வீணில்
தன்னை யழிப்பதுவே யீனம்
மன்னுஞ் சிறுத்தொண்டன் செய்மோனம்—கண்டால்
வாய்ப் பேச்சில்லை சிவ நேசர்களே (௬௫)

அன்பர்க்குச் சோறுங் கனிகொடுத்தார்—பத்தா
வன்றுகேட்க யீசனை யடுத்தார்
மன்னுங் பழங்கண்டு வெடுவெடுத்தார்—வேறு
மணம்புரிந்தான் சிவ நேசர்களே. (௬௬)

கொண்டவன் வேண்டா தேகஞ்சுமந்து—பயன்
கொள்வதென் னென்று மனமயர்ந்து
விண்டு பேய் ரூபம் வேண்டிநடந்து—கைலை
மேவினர்பார் சிவ நேசர்களே, (௬௭)

அம்மை யென்று வரனுங் கூற—அம்மை
அப்பாயென் றேத்தி யருள்வீற
செம்மை யாலங்காட்டினிற் சேர—முத்தி
சித்தித்ததே சிவ நேசர்களே. (௬௮)

விசயனுக முன் வந்தாரே—கிருஷ்ணன்
வேதகீதா பாஷ்யந் தந்தாரோ
பசைப் போகாப்போர்ப் புரிந்தாரே—ஞானம்
பலித்த தெங்கே சிவ நேசர்களே. (௬௯)

பர்க்குணன் திண்ணனுகப் பிறந்து—பூர்வ
பற்றுநேர் பக்தி பூசைச் சிறந்து
சர்க்குணத் தானுனுங் கண்ணுந் தந்து—மூத்தி
சார்ந்ததைப் பார் சிவ நேசர்களே. (௭௦)

கண்ணிலுட் கண்ணைத் தருவாரே—அவர்க்
காணும்பொருள் வெளியி லேதே
அண்ணலுக் கன்பர்களானுரே—காண்பர்
அந்தரங்கஞ் சிவ நேசர்களே. (௭௧)

மறையோன் சிவகேசரிப் பார்க்க—இரத்தம்
வடிய விழிவைத் தன்பு பூர்க்க

O123;80,2H.K 164408
N15

இறைவ னருட்கதியிற் சேர்க்க—தவ
மென்செய் தாரோ சிவ நேசர்களே. (எஉ)

ஊனும்பற் பூசைத் தருவார்கள்—பொய்
யோங்க யீனர்முன் வருவார்கள்
ஆனாலுட் கண்ணைப் பெருவார்கள்—மா
அரிதல்லவோ சிவ நேசர்களே. (எங)

தண்ணீரினால் விளக் கேற்றினரே—ஈனச்
சமண குண்டர்கட் போற்றினரே
அண்ணல் மகிமையைச் சாற்றினரே—இது
அற்புதமே சிவ நேசர்களே. (எச)

தண்டி யடியர்கண் பெற்றாரே—பாவஞ்
சார்ந்த யமணர்க ளற்றாரே
எண்டிசையுங் கீர்த்தி யுற்றாரே—சைவ
மெங்கும் போற்ற சிவ நேசர்களே. (எரு)

சந்தன மன்பர்க்கு யீந்தாரே—சமண்
சற்பனையால் கைத்தேய்த் தோய்ந்தாரே
சுந்தர யீசன்சீர் வாய்ந்தாரே—பின்
சுகஞ் சாட்சியஞ் சிவ நேசர்களே. (எசு)

மும்மையினாலுல காண்டாரே—தவ
மூர்த்தி யெனும் பெயர்க் கொண்டாரே
செம்மை சைவநெறி விண்டாரே—வேறு
சிந்திப்ப தேன் சிவ நேசர்களே. (எஎ)

குங்கிலியந் தன்னைப் பெற்றாரே—இல்லாள்
கொடுக்கத்தன் தாலியை விற்றாரே
லிங்க மிரப்பே ருற்றாரே—பக்தி
நேசத்தினால் சிவ நேசர்களே. (எஅ)

தன்மனையாளைக் கொடுத்தாரே—சுற்றந்
தன்னுடன் சமர்க் கொடுத்தாரே
மன்னுஞ்சீர் முத்தி யடுத்தாரே—இந்த
மாட்சிமைப் பார் சிவ நேசர்களே. (எகூ)

மகளின் கூந்த லளித்தாரே—மணம்
வாய்த்துண்மைக் கண்டுக் களித்தாரே
இகத்தின் பாச மொழித்தாரே—சதா
யேத்தித் தொழுஞ் சிவ நேசர்களே. (அ0)

பூசைக் காய்த் தந்தைக்கால் வெட்டினரே—அன்பு
பூர்த்து சண்டேசர்சி ரொட்டினரே
ஆசாபாச வழிக் கட்டினரே—வெகு
ஆனந்த மாஞ் சிவ நேசர்களே, (அக)

பூக்குடலை யதைத் தானெரிந்த—துயர்ப்
பொங்கி ஆனைசேனையுஞ் செறிந்த
நோக்கத்தா லழித் தருணிறைந்த—நோன்பு
நோற்பவ ரியார் சிவ நேசர்களே. (அஉ)

பரிவா யமுதுத் தான் படைக்க—சென்றப்
பாதையிற் பசியால் வீழ்ந்துத் துடிக்க
அரிவாளாற் றன்னுயிரை மடிக்க—தமைத்
தாட்கொண்டார் பார் சிவ நேசர்களே. (அங)

நந்தனெனுங் கனியைப் புசித்தார்—தில்லை
நடராச னாலயத்துள் வசித்தார்
விந்தையாய் தேவரெலாம் பசித்தார்—எத்தி
விளங்கினரே சிவ நேசர்களே. (அச)

தேகத்திலுள்ளது வார்நரம்பு—இது
சித்தி யடைதல் ஞான வரம்பு
ஆகமத்தி னந்தரங்க நம்பு—முத்தி
யானதது சிவ நேசர்களே. (அரு)

ஆலயங் கட்டி துதிபுரிந்து—அன்பர்க்
கன்னஞ் சொர்ன மாடையு மகிழ்ந்து
சீலமன்பு சத்திய மிருந்து—செய்தல்
திருப்பணி யாஞ் சிவ நேசர்களே. (அகா)

பூமாலைச் சாத்திப் புகழ்ந்து நின்று—உள்ளம்
பூரித்து மும்பாசைத் தன்னைவென்று
பாமாலைப் பாடினூர்த் தொண்டரென்று—மிவைதப்
பற்றித் தொழுஞ் சிவ நேசர்களே. (அஎ)

முக்காலம் பூசை முடித்தாரே—பக்தி
மூழ்கித் தேவாரம் படித்தாரே
அக்கு மாலைக்கைப் பிடித்தாரே—ஈசன்
ஆசிரல்லோ சிவ நேசர்களே. (அஅ)

மூவாயிர வருட நீடி—திரு
மூலர் திரு மந்திரம் பாடி

சீவர்ப் பிழைக்கத் தந்தார்க் கோடி—புண்யஞ்
செய்த பயன் சிவ நேசர்களே. (அகூ)

அன்பே சிவமெனச் சொன்னாரே—சைவ
ஆகமந் தெளிந்த முன்னோரே
இந் நெறி தன்னை யிகழ்வாரே—மதி
யீன ரன்றோ சிவ நேசர்களே (கூ0)

ஆக்கையை ஆலய மாக்கினரே—சர்வ
ஆடம் பர மெல்லா நீக்கினரே
வாக்குடன் மனமொன் றாக்கினரே—ஞான
வாழ்வுடையார் சிவ நேசர்களே. (கூக)

நீலகண்டமெனச் சொன்னாரே—நெறி
நின்று யில்லாள் மொழிபோலியாரே
சாலக் குளமூழ்கி நின்றாரோ—முத்தி
சார்ந்ததைப் பார் சிவ நேசர்களே. (கூஉ)

சாக்கிய ரன்பெனுங் கல்லாலே—புத்தர்த்
தான் காண லிங்க மதின்மேலே
நோக்கமா யெறிந்தப் பயனாலே—செய்த
நோன் புணர்வீர் சிவ நேசர்களே. (கூங)

## தெரிவரு நிலை.

அண்டர்ப் பணியு மந்த்ர மூலன்—தமை
யண்டின வர்கட் கநுகூலன்
தொண்டர்கட் கேற்ற பரிபாலன்—பலத்
தோற்ற மானான் சிவ நேசர்களே. (கூச)

தீன தயாபர மெய்க்கடவுள்—அன்பாய்ச்
சேவை செய்தவ னருள்தனைக் கொள்
வானவர்ப் போற்று மரன்றாளுள்—பக்தி
வைத்துத் தொழுஞ் சிவ நேசர்களே. (கூரு)

ஆனந்தத் தாண்டவ மாடினனே—தமை
யர்ச்சித்தோர் பாபத்தைச் சாடினனே
தானே சர்வத்துளுங் கூடினனே—உண்மைத்
தானறிவீர் சிவ நேசர்களே. (கூசு)

எங்குந் ததாகார மானதுவே—சிவ
மின்றி வேறுண்டெனச் சொல்வதுவே

தங்கும் பாப மேது வேறெதுவே—மெய்த்
தானுணர்வீர் சிவ நேசர்களே. (௯௭)

வேதங்க ளுண்மை யதைத் தெரிந்து—அருண்
மேவுந் தான தவங்கட் புரிந்து
சாதனையி னுள்ளவை யறிந்து—துதி
சந்ததஞ் செய் சிவ நேசர்களே. (௯௮)

சச்சிதா னந்தன் கழற் சொந்தம்—சதா
தாவித் துதித்தோர்க் கேது பந்தம்
இச்சையினாற் செய்யு நிர்ப்பந்தம்—பின்
இடரல்லவோ சிவ நேசர்களே. (௯௯)

காரண காரியமுங் கடந்து—வீண்
கட்டுக் கதையில் மன மிடைந்து
பூரண பக்தி விஞ்சைத் தொடர்ந்து—அன்பிற்
பூத்தெழிற் சேர் சிவ நேசர்களே. (௧௦௦)

அங்கிங்கு யென்றப் பொருள்தானே—சர்வ
அம்மை யிம்மைத் தரையும் வானே
இங்க பத்தருண் ணூந் தேன்றானே—கண்டுச்
சொல்வா ரைப்பார் சிவ நேசர்களே. (௧௦௧)

சிவமய மானதே சீவ மயம்—இதைத்
தேர்ந்தறி யார்க் கேது ஞான நயம்
அவமனத் தினர்க் கென்றும் பயம்—உனை
அண்டா தேத்துஞ் சிவ நேசர்களே. (௧௦௨)

செஞ்சிலம் பானதது ஆட—கடஞ்
செய்த பிரா னருளிற் கூட
தஞ்ச மென்றேத்து பாபமோட—வருஞ்
சங்கற்பம் போம் சிவ நேசர்களே. (௧௦௩)

சத்தி சிவ மாய்த் தழைத்தானே—தன்னைச்
சார்ந்தோ ருளத்திற் செழித்தானே
பத்தர்த் துயரை யழித்தானே—உண்மைப்
பாவித்துப் பார் சிவ நேசர்களே. (௧௦௪)

ஈசன் றிருமேனி விபூதி—தா
னில்லான் செய் பக்தி யவநீதி
காசினி யோர்க்கு யெடுத்தோதி—மெய்க்
காட்டுதற் சீர் சிவ நேசர்களே. (௧௦௫)

சைவ சமயமே மெய் வேதம்—தனைச்
சார்ந்தோர் கேட்கார் வேறோர் துர்ப்போதம்
துய்ய சாந்த தேவதைப் பாதம்—சதா
துணையாய்க் கொள் சிவ நேசர்களே. (௧0௬)

அரும் பொருளது வொன்றாமே—சைவ
ஆகமங் காண்பது நன்றாமே
பெரும் பயன் வேறொன் றின்றாமே—உன்னுட்
பேசுஞ் சிவம் சிவ நேசர்களே. (௧0௭)

சித்தஞ் சிவ மாகக் கல்லாது—கல்வித்
தேர்ந்தோ மென்பார் நடைப் பொல்லாது
பத்தர்மு னன்னோர்சொற் செல்லாது—காற்றாய்ப்
பறந்துப் போம் சிவ நேசர்களே. (௧0௮)

சருவ வியாபக மாமுடனே—தழை
சங்கர சம்புவென் றோர்த்திடனே
திருமறை போற் றுதிகடனே—வினைத்
தீண்டா தோமே் சிவ நேசர்களே. (௧0௯)

அண்டர்ப் பரவித் தொழுமலையே—நம
தப்பனுரு வான தோர்சிலையே
தொண்டர்கட் கென் றும் பாபமிலையே—நம்பித்
தோத்திரஞ் செய் சிவ நேசர்களே. (௧௧0)

சத்திய மென்பதுவே ஞானம்—அதைச்
சார்ந் திருப் போர்க்கேன் வேற தியானம்
பத்திய மென்பதோ வஞ்ஞானம்—உன்னுட்
பார்த் தடங்குஞ் சிவ நேசர்களே. (௧௧௧)

சித்தாந்த ஞானஞ் சிவஞானம்—உண்மைத்
தெளிந் தோர்க் கன்றோ பிரதானம்
பத்தி நெறி நில்லார்க வீனம்—சொல்லிப்
பகட்டுவர் பார் சிவ நேசர்களே. (௧௧௨)

அறிவெனும் தெய்வந் தனைப்போற்றி—அறி
வானந்த தெப்பத் தினை யேத்தி
குறிகுண மற்றுண்மையைச் சாற்றி—தொழக்
கூற்ற னில்லை சிவ நேசர்களே (௧௧௩)

ஆசானிருக்கு மிடந் தேடி—அவ
ராசி ரருளந்த முங்கூடி

பேசா மௌன நிலை நாடி—நின்றால்
பேரின்ப மாம் சிவ நேசர்களே (௧௧௪)

சத்து சித்தானந்த மானவனே—சர்வ
சங்கார மூர்த்தி யவன் றானே
சித்தந் தெரிந்தார் சிவன் றானே—உண்மைச்
சேவைச் செய்வீர் சிவ நேசர்களே. (௧௧௫)

ஈசனுக் கன்பர் வலியாரே—இவை
யில்லார்க ளென்று மெளியாரே
நேசர்க் கூற்றுக்கு வொளியாரே—கண்டால்
நிற்கா னெதிர் சிவ நேசர்களே. (௧௧௬)

எந்தெந்த நோக்கங்கட் கொண்டாலும்—பக்திக்
கேற்ற தவ நோன்பு விண்டாலும்
அந்தந்த வெண்ணத்தின் தொண்டாலும்—ஈசன்
அகப்படுவான் சிவ நேசர்களே. (௧௧௭)

## பயண்படாக் கொள்கை.

கன்மப்படி நோய்ப் பிடித்தாச்சு—சதா
காலத்தூங்குமே யேச்சிப் பேச்சு
தன்மமென்பது தூரப் போச்சு—இதைத்
தாங்குவ ரியார் சிவ நேசர்களே. (௧௧௮)

அந்தரத்தில் மாய வீடுக் கட்டி—ஆ
ழறியாமையால் பாபக் காடுவெட்டி
சந்ததம் வாழ்வே னென்பானைக் கிட்டி—எவர்
சார்ந்திருப்பார் சிவ நேசர்களே. (௧௧௯)

பல்லாயிர தானம் பண்ணாலும்—கள்ள
பக்தி செய்தென் றண்மை நண்ணாலும்
எல்லாஞ் சம மென்று யெண்ணாலும்—ஈச
னேற்பதிலை சிவ நேசர்களே. (௧௨௦)

பொய்யதைப் போன்றக் கொலையேது—நெறி
பொன்றார்க் கவமே நலமேது
மெய்யை யென்றைக்கும்பொய் வெல்லாது—பாப
வித்திதாகுஞ் சிவ நேசர்களே. (௧௨௧)

வாய்ஞானம் நல்லோர்கட் பேசுவரோ—சிவ
வள்ளலை வணங்கக் கூசுவரோ

பேய்மதியா லிகழ்ந் தேசுவரோ—கல்லாப்
பேதையர்க் காம் சிவ நேசர்களே. (௧௨௨)

பற்பலப் பொய்வேடம் பூண்பாரோ—தெய்வப்
பற்றிலா ருண்மையைக் காண்பாரோ
அற்பர்கள் பூமிக்கு வீண்பாரம்—என
அன்பர்க் கொள்கை சிவ நேசர்களே. (௧௨௩)

கோடிவேத மந்த்ரங் கற்றாலும்—தீட்சைக்
குரு கொடுத்திடப் பெற்றாலும்
வாடிடுமும்மல மற்றாலும்—சத்தியம்
மாறில் வீணாஞ் சிவ நேசர்களே. (௧௨௪)

வேத வேதாந்த மெனப் பேசி—வெளி
வீறுப்பு காட்டுவ தேன் சீசீ
பூதங்கலங்கி மயல்வீசி—உயிர்ப்
போம்பய னென் சிவ நேசர்களே. (௧௨௫)

சாத்திர மருளோ சக மருளோ—உண்மை
தானறியா மருள ரிருளோ
சூத்திரப்படி யேறாதார்ப் பொருளோ—எமன்
சொந்தங் கொள்வான் சிவ நேசர்களே. ௧௨௬)

ஆராய்ந்து வாராய்ந்துப் பார்த்தாலும்—புலி
ஆவின் தோலானதைப் போர்த்தாலும்
பாராயணஞ் சொல்லி வேர்த்தாலும்—தெய்வம்
பாழாக்கும் பார் சிவ நேசர்களே. (௧௨௭)

கொன்றதெலா முனக் குள்ளிருக்க—சன்மங்
கொண்டதும் போனதுங் கண்டிருக்க
தின்றதா லான்மா பிழைத்திருக்க—மாயஞ்
செப்புதல் வீண் சிவ நேசர்களே. (௧௨௮)

உள்ளது யென்றைக்கும் போகாது—அங்கில்
கோடினும் வினைச் சாகாது
பள்ளமிறைக் கார்க்குப் பங்கேது—எண்ணம்
பாழாய்ப் போமே சிவ நேசர்களே. (௧௨௯)

தாயின்றிப் பிள்ளைப் பிறந்ததுவும்—ஈசன்
தானின்றி வுலகஞ் சிறந்ததுவும்
மாயவா திகட் பறந்ததுவும்—பொய்
மயக்கத்தைப் பார் சிவ நேசர்களே (௧௩௦)

தெய்வபயஞ் சற்று மில்லாரே—பலத்
தீமைச் செய்வதில் மா வல்லாரே
மெய்ய ரன்னோர் வழி செல்லாரே—மாய
வேடிக்கையாஞ் சிவ நேசர்களே. (௧௩௧)

திருப்பணியை மறந்தோரும்—பல
தீயச் செயலிற் சிறந்தோரும்
கருப்பிணியி னிறைந்தோரும்—துன்பக்
காட்டடை வார் சிவ நேசர்களே. (௧௩௨)

பேதித்திடு மனப் போராட்டம்—அதன்
பின்றிரிந் தாடிடுங் கொண்டாட்டம்
சாதியெனும் வழக்கின் கோஷ்டம்—மூடர்த்
தங்களுக்காஞ் சிவ நேசர்களே. (௧௩௩)

பொய் மெய் யிரண்டு மறியாதே—உன்
புத்திநிலைக்கத் தெரியாதே
வெய்யவினை சூ தறியாதே—கல்வி
வெல்லுவதென் சிவ நேசர்களே (௧௩௪)

ஆண்டவ னூழியம் பண்ணாமல்—அரு
ளாம் வழியானதை யெண்ணாமல்
நீண்ட மதிவினை நண்ணாமல்—பழி
நீங்குமோ சொல் சிவ நேசர்களே. (௧௩௫)

இன்றைக் கிருப்பதும் பொய் யென்றாய்—நாளைக்
கிருப்பது மெண்ணமும் பொய்யென்றாய்
நன்மைக்குத் தீமைச் செய்து நின்றாய்—கற்ற
ஞானம் பாழே சிவ நேசர்களே. (௧௩௬

பொருள் வருகும் வழிப் பார்த்து—மனம்
பூர்த்திடு மாசையாவுந் தீர்த்து
அருள் வருநெறியில் சேர்த்து—நின்றோ
ராண் பிள்ளையோ சிவ நேசர்களே. (௧௩௭

வாராத தென்றைக்கும் வாராது—பொய்
வழக் கானது சுகந் தாராது
தீராப் பழியை யொழிக்காது—பக்தி
செய் தென்பயன் சிவ நேசர்களே. (௧௩௮

நலம் பொல மௌனந் காணாதே—பக்தி
ஞான நகையதைப் பூணாதே

குலம் பலப் பேசிற் ரேறுதே—பின்பு
குற்ற மாகுஞ் சிவ நேசர்களே. (௧௩௯)

## தேகாதிபந்த ஆபாச தத்துவம்.

சன்ம தன்மத் தினாலேதேகம்—வந்துக்
காலனுக் காட்பட பன்மோகம்
நன்மையில்லான் நடத்தும் யோகம்—வீண்
நாட்ட மன்றோ சிவ நேசர்களே. (௧௪௦)

முப்பசையாங் கடி நாயாலே—வினை
மூண்டதுப் போதானுழ்ப் பேயாலே
அப்பப்பா யார் சொல்வார் வாயாலே—கண்
டடங்கு புண்யஞ் சிவ நேசர்களே. (௧௪௧)

பொல்லாத மூர்க்கப் புலியாலே—உயிர்ப்
போகுதே பாப வலியாலே
நல்லோர்க ளேம னலியாலே—துன்பம்
நாடா ருணர் சிவ நேசர்களே. (௧௪௨)

அல்ல லெனும் பாவக் கொல்லையிலே—ஐவ
ராடித் திரிந்திடு மெல்லையிலே
தொல்லை வருமென்று சொல்லையிலே—கேட்டுத்
துறந்ததென் சிவ நேசர்களே. (௧௪௩)

பாம்புத் தேரையை விழுங்கினது—போல
பாபத்தி லுள்ளம் மழுங்கினது
சாம்பவத் திற்கே யழுங்கினது—என்ன
சன்ம மாகுஞ் சிவ நேசர்களே. (௧௪௪)

பூனைவாய்ப் பட்ட யெலி போலும்—சமண
புத்தர்கள் சைவ நலியாலும்
ஆனைவாய்க் கரும்பதாய் சாலும்—படும்
அவதியைப் பார் சிவ நேசர்களே. (௧௪௫)

ஒன்பது வோட்டையில் மண்கோட்டைக்—கட்டி
வோடி சேர்க்கின்றாய் மல மூட்டை
அன்பர்க் காமோ வெறி நாய் வேட்டை—இதை
ஆராய்ந்துக் கொள் சிவ நேசர்களே (௧௪௬)

பாபமெனுஞ் சுடு காட்டினிலே—பொய்ப்
பறைவார்கள் மாய மேட்டினிலே

ஆபத்துக் குதவான் நாட்டினிலே—துய
ரல்லான் வேறென் சிவ நேசர்களே. (கசஎ)

பொய்யதற்கு வொரு வீடு கட்டி—தூக்கிப்
போதிக்க மூடர் புயத்தைத் தட்டி
வையமெலாம் படை யாகக் கிட்டி—வந்தும்
வசைதானே சிவ நேசர்களே. (கசஅ)

வேடுவன் முன் பட்ட மான்போல—வலை
வீச வகப்பட்ட மீன் போல
கூடுவிட் டேமன் கொள்ளசால—உயிர்க்
கூச்சற் போமோ சிவ நேசர்களே. (கசகூ)

வேட்டைக ளாடுவர் நாயாலே—வெளி
வேடங் கொள்வார் கன்மப் பேயாலே
பாட்டிசைப் பார் நாற்ற வாயாலே—மௌனம்
பண்ணலெப்போ சிவ நேசர்களே. (கரு௦)

வாசனையானத் தேரைப் பிடித்து—பல
மாருட்டப் பாம்பின் பல்லாற்கடித்து
ஈசனைக் காணமல் துடிதுடித்து—முடி
வென்ன மன்தான் சிவ நேசர்களே. (கருக)

ஓடக் காலில்லாத வொண்டி நொண்டி—சுவை
யொன்று மில்லாத வுணவைக் கிண்டி
ஆடல்பட் டேறின மாயவண்டி—பின்னே
ஆர் போவார் சொல் சிவ நேசர்களே. (கருஉ)

சஞ்சல மாகு மெழுகடலே—அதிற்
றூனேடமான வூத்தையுடலே
வெஞ்சினத்தார் செய்தட புடலே—எல்லாம்
வினைக்கிடமே சிவ நேசர்களே. (கருங)

பங்குக்குப் பங்காளி மூன்று பேரு—கெட்டப்
பாவச் செயற்கு முதல் வேரு
இங்கி வரை நீங்குவா ரியாரு—நீங்கி
லென்றுஞ் சுகஞ் சிவ நேசர்களே. (கருச)

ஓயாக் கவலை யெனு மலையே—உன்னு
ளோங்கிச் கெடுக்கி லெது நிலையே
தோயாமலே படி நற்கலையே—அது
துணையாகுஞ் சிவ நேசர்களே. (கருரு)

நிமை நிமை நேரம் மாறி மாறி—பொல்லா
நீச்சக் குணப் புலியாற் சீறி
அமைத லின்றி வினைமீறி—கெட்டா
லியார்க்கு நஷ்டஞ் சிவ நேசர்களே. (௧௦௬)

எல்லா மிருக்குது மெய்யதிலே—உண்மை
யின்றி வீழ்ந் தேங்குதுப் பொய்யதிலே
வல்லாண்மையாம் மாய நெய்யதிலே—யாகம்
வளர்ப்பவ ரியார் சிவ நேசர்களே. (௧௦௭)

ஆர்க்கு மாகாத வூனை தேகம்—இதி
லேந்து மொன்றுவதுவே யோகம்
தீர்க்கமாய்க் கற்றோர்க்கேன் வீண்போகம்—உண்மைத்
தெளிந்துக் கொள் சிவ நேசர்களே. (௧௦௮)

சொல்லாம லோடுஞ் சுடுகாடு—நால்வர்த்
தூக்கிச் சுமக்க வருங்கேடு
பொல்லா யெண்ணத்தைத் தூரப்போடு—ஈசன்
பூந்தாட் பணி சிவ நேசர்களே. (௧௦௯)

சாக்கடைத் துத்த தினம் வேலை—பொய்ச்
சமயத்துக் கேற்றக் கதை நூலை
பீக்கடைக் காய்க் கற்று யூழ்மாலை—கொண்டார்
பிராந்திப் போகா சிவ நேசர்களே. (௧௧௦)

ஒன்பது பொத்தலா லோர்வீடு—கட்டி
வுள்ளே செண்டாட மனக் காடு
கன்ம தன்மம்போ லவர்பாடு—செய்யக்
காலன் வேறேன் சிவ நேசர்களே. (௧௧௧)

ஆனையைப் போல் வாரி யடிக்குமனம்—தன்னை
யடக்கவே பத்தி செய்யுந்தினம்
ஞானக் கண்ணுள்ளோர்க்கு யேது சினம்—உண்மை
நாடித் தொழுஞ் சிவ நேசர்களே. (௧௧௨)

வாழ்ந்தவர்த் தாழ்ந்தவருஞ் சரியே—கூற்று
வந்திடி லோடு மாயப் பரியே
ஆழ்ந்த நூற்கண்டு பரிசுரியே—பின்
ஆபத்து தான் சிவ நேசர்களே. (௧௧௩)

உண்ணு லுடுத்த லவைப்பெரிதோ—பொய்க்
குழைத்து யலுத்த லதுபெரிதோ

மண்ணுக்கு மண்ணாய்ப் போவதரிதோ—இது
மறைவோ சொல்வீர் சிவ நேசர்களே. (௧௬௪)

ஊத்தை யுடலுக்குத் தானுழைத்து—வயி
றோம்ப தந்திர மந்திரத்திற் றழைத்து
சேத்திற் கம்பம் போலவே பிழைத்து—உயிர்ச்
சேதமாமே சிவ நேசர்களே. (௧௬௫)

பத்தும் பதினாயிரந் தலையே—நிற்கப்
பார்க்க யில்லையே வெதுநிலையே
ஒத்துயிருந் திடக் கற்கலையே—வினை
யோடிடுமோ சிவ நேசர்களே. (௧௬௬)

போகிக்க மோகிக்க புத்தியுண்டு—அதிற்
பொருந்த தந்திர வழிகொண்டு
யூகித் தடுத்தார்களைக் கண்டு—பின்னும்
யோசிப்பதேன் சிவ நேசர்களே. (௧௬௭)

சோற்றைத் துருத்துச் சுகம்பார்த்து—கன்மச்
சோங்கேறி யாசை யெல்லாந் தீர்த்து
காற்றுப் போகுதே வுடல் வேர்த்து—அப்போ
காண்ப தென்னோ சிவ நேசர்களே. (௧௬௮)

கோமாளி வேஷ மதைப்போட்டு—பல
கோரணிச் செய்கை யதைக் காட்டி
லாமா றேது வினைவாட்டு—மிதை
யார் தடுப்பார் சிவ நேசர்களே. (௧௬௯)

செல்லாப் பணந்தனை மூட்டைக் கட்டி—வைத்து
சேர்க்கத் தருபவ ரியார் வட்டி
இல்லாததை யுண்டென வதட்டி—பேசி
லேமன் விடான் சிவ நேசர்களே. (௧௭௦)

மண் குதிரையை நம்பலாமோ—உயிர்
வரவில்லை யென்றுப் பின் வெம்பலாமோ
விண்கீழ் நின்று மழைக் கஞ்சலாமோ—விதி
விட்டிடுமோ சிவ நேசர்களே. (௧௭௧)

ஓடக்காரனோடே மோட்டுகிறான்—உள்ளே
உள்ளோர் மாயை சாடைக் காட்டுகிறாள்
ஆடலும் பாடலால் வாட்டுகிறாள்—பின்னே
அழிவா ரியார் சிவ நேசர்களே. (௧௭௨)

குப்பை மண்ணில் மேடை வீடாச்சு—எற்றக்
குறீசொல்ல ராமனின் பாடாச்சு
அப்பா வினை ப்பிடிக்க மூச்சு—சொல்லா
தடங்கிடுதே சிவ நேசர்களே. (கஎ௩)

சென்மமாந் தெப்பம் வினைக் கடலில்—வீழ்ந்து
தேய்ந்து தேய்ந்ததே மலத் திடையில்
கன்ம மென்னுந் தெருவின் கடையில்—வாங்கிக்
கடனுச்சு சிவ நேசர்களே. (கஎ௪)

எண்ணிக்கை யில்லா மலை நாட்டம்—உள்ளே
யிருக்கு மைவர்களின் கொண்டாட்டம்
தொண்ணூற் றறுவர்கள் செய்மீட்டம்—ஒன்றாய்த்
தோற்றப் படா சிவ நேசர்களே. (கஎ௫)

தோலு நரம் புதிரங் கூடி—மண்
சுகமாய் தத்துவ முறை நாடி
சால வடைந்தன வூழ் நீடி—வீண்
சங்கற்பமே சிவ நேசர்களே. (கஎ௬)

மந்திக் கிடக்குது பள்ளத்திலே—பல
மாய மிருக்குது வுள்ளத்திலே
சிந்தைப் படுத்தது கள்ளத்திலே—நலஞ்
சேர்வதெங்கே சிவ நேசர்களே (கஎஎ)

மாடு மறைந்தது பாசத்திலே—இரு
வாளைப் பிரண்ட தாபாசத்திலே
ஆடுகரந்தது நேசத்திலே—உண்மை
யறிந்தவ ரியார் சிவ நேசர்களே (கஎஅ)

பொத்தலை யடைக்க மாட்டால்—வெள்ளப்
புகுந் தடித்துக் கொண்டு வாட்டாமால்
சத்தனை சத்துளே காட்டாமல்—வினைத்
தாண்டு வரோ சிவ நேசர்களே (கஎ௯)

ஊதாரிப் பையன் வேட்டையிலே—சத்த
மொடுங்கிப் பலமாயங் காட்டையிலே
சேதாரத்தை யொன்றாய்க் கூட்டையிலே—வாங்கி
செல வாகாதோ சிவ நேசர்களே (கஅ௦)

பஞ்சவர்ணக் கிளியால் மோசம்—வந்து
பார்வைக் கெடுக்குந் தவநேசம் ...

கெஞ்சினாலும் விடாதே பாசம்—கதி
கிடைப்ப தெப்போ சிவ நேசர்களே (௧௮௧)

அன்ன மயமும் பிராண மயம்—ஒன்
றாயின் சத்திசிவஞ் சிவமயம்
அன்புகொண் டொடுங் கிலேமபயம்—அன்றே
யகன் றுப் போம் சிவ நேசர்களே (௧௮௨)

கோட்டை யிடிந்துப் பாழாகயிலே—தூக்கிக்
கொண்டு சுடுகாடுப் போகையிலே
பாட்டை விட்டுவெளி யேகையிலே—தொழிற்
பண்ணுவ ரியார் சிவ நேசர்களே (௧௮௩)

பன்றி மலையேறிப் பாய்ந்திடவே—ஐந்து
பங்காளியு மயர்ந் தோய்ந்திடவே
குன்றின்மே லின் றவன் சாய்ந்திடவே—பள்ளம்
கொண் டுண்ணுதே சிவ நேசர்களே (௧௮௪)

எட்டிப் பார்த்தவீ டிடிந்திடுதே—அதற்கு
யேற்றத் தோழர்க ளடைந்திடுதே
குட்டிச்சுவராய் முடிந்திடுதே—ஊர்க்
கூட்டம தேன் சிவ நேசர்களே (௧௮௫)

மயிலாடக் குயில் பாடிடுதே—பல
மந்திப் பல்லிளித்துக் கூடிடுதே
உயிர்க் குயிராய் நடநீடினதே—இத
னுள வறிவீர் சிவ நேசர்களே (௧௮௬)

ஓடி ஓடிக் கொண்டா னடித்து—மாயைக்
குழைத்து வேரற்று மடிபிடித்து
வாடி யுடல்விட் டுயிர்த்துடித்து—ஞானம்
வாய்த்த தெங்கே சிவ நேசர்களே (௧௮௭)

சாக்கா டென்பதோர்ப் பேய்க்காடு—ஐந்தைத்
தானறுக் கினார்க் கெணையீடு
நோக்கி முன்னோர்கள் பட்டபாடு—சைவ
நூற்கண் டுணர் சிவ நேசர்களே (௧௮௮)

இருந்த சிவமது போனதுவே—சவ
மென்றபேர் வந்தது தானதுவே
பொருந்தக் கண்டு முணரார்க் கேதுவே—சொல்லிப்
போதிப்பா ரார் சிவ நேசர்களே (௧௮௯)

பெற்றார்ப் பிறந்தா சிருக்கையிலே—பிண்டம்
பிணமதாகிச் சுடலையிலே
உற்றதைப் பார்த்தி நடலையிலே—நீ
யுழல்வதேன் சொல் சிவ நேசர்களே (௧௧௦)

மன்னாதி மன்னர்களும் போனார்—எல்லாம்
மண்ணை யல்லாள் வேறு யென்னானார்
சின்மயா னந்த சிவக் கோனார்—பாதஞ்
சேவி சுகஞ் சிவ நேசர்களே (௧௧௧)

எண்ண மென்னும்பெரு நீரோடை—தன்னு
ளிழுத்துக் கொல்லு தைந்துப் பேய்வாடை
கண்ணுங் கருத்தும் போறத்சேடை—பழி
கலந்துக் கொள்ளுஞ் சிவ நேசர்களே (௧௧௨)

## அன்பருண்மைநிலை.

எல்லாஞ் சிவமய மென்பவரே—சன்மம்
எடுத்தப் பயனை யுணர்ந்தவரே
தொல்லை யற்றன்ப ரானாவரே—இன்பஞ்
சூழ்ந்தவரே சிவ நேசர்களே. (௧௧௩)

உத்தம நண்பர்க் கேதுமோசம்—வினை
யோங்கினுந் தீ பஞ்சுபோல் நாசம்
அத்தன் பணியதில் விஸ்வாசம்—இருந்
தாற் காணலாம் சிவ நேசர்களே. (௧௧௪)

சாதனை யான துடையவரே—சம்பு
சங்கரன் பக்தி யுடையவரே
பேதஞ் சொல்வார்கள் கடையவரே—மூடப்
பேதையர் காண் சிவநேசர்களே. (௧௧௫)

கோடிகோடி வேதம் வந்தாலும்—தனங்
கூடைக் கூடை வாரித் தந்தாலும்
ஆடிப் போற்பறந்து வோர் நாளும்—பக்தி
அன்பர் விடார் சிவ நேசர்களே. (௧௧௬)

தொண்டு புரிந்தார்ப் பெரியோர்கள்—அதைத்
தூஷித்தவரே சிறியோர்கள்
விண்டவரிதற் குரியோர்கள்—வினை
விட்டதாரை சிவ நேசர்களே. (௧௧௭)

காலனையன் றுவுதைத்ததுவே—பூசைக்
காட்டி மார்க்கண்டன் பிழைத்ததுவே
மூல முணர்ந்தோர்த் தழைத்ததுவே—இது
முத்தி வித்தாஞ் சிவ நேசர்களே: (கசுஅ)

திரிபுரம் பொடி யாக்கினதே—காமன்
சிதைவுற வுட்க ணேக்கியதே
பரிவா யன்பருழ்ப் போக்கியதே—ஞானப்
பாக்கிய மாஞ் சிவ நேசர்களே. (கசுகூ)

திரிகால பூசைச் செய்து வந்துத்—வலியத்
தீண்டும் வினையின் சிரங் கொய்து
விரிஞ்சன் கொண்டயெண்ணத்தை வைது—அன்பர்
விளக்கினரோ சிவ நேசர்களே. (உ00)

## சிவஞானமுத்தி.

ஓங்கார வட்டச் சுழியதிலே—கலைக்
குள்ளே நிலவும் விழி யதிலே
நீங்காம னிற்கும் வழியதிலே—நீட்டை
சேடல் முத்தி சிவ நேசர்களே. (உ0க)

தத்வ மசியெனு மெய் வாக்கியம்—குரு
தன்னாற் கண்டடை வதே பாக்கியம்
ஒத்திரண் டொன்றுவதே மோக்கியம்—பேசா
வடமை யிடஞ் சிவ நேசர்களே. (உ0உ)

பஞ்ச தசமாம் பிரகரணம்—தன்முன்
பற்றுது மாயை யொரு திரணம்
வஞ்சமற் றுசானைச் செய் சரணம்—ஞான
வாழ் வடைவீர் சிவ நேசர்களே. (உ0ங)

கோடானுக் கோடி யழிக் தாலும்—உயிரைக்
கொன்று வுதிரம் பிழிந் தாலும்
நாடார் வேறோர்ப் பொருள் நாளும்—குரு
நாட்ட முள்ளார் சிவ நேசர்களே. (உ0ச)

குருவே சிவமெனக் கொண்ட வரே—மனக்
கோட்ட மடங்கி சீர் விண்டவரே
அருள் வழிக்கே செய்வார் தொண்டவரே—ஞானா
னந்த மதாஞ் சிவ நேசர்களே. (உ0ரு)

ஆகாயந் தன்னிற் பறந் தாலும்—பருந்
தாகாது வூர்க் குருவி சாலும்
போகா தாம்லினை யிறந் தாலும்—குரு
போத மின்றேல் சிவ நேசர்களே. (உ0சு)

இருந்த யிடத்தை நீங்காரே—பல
யிச்சையால் நாட்கழித் தோங்காரே
பொருந்தா யெண்ணத்தா லேங்காரே—கிட்டைப்
பூர்த்தி யானார் சிவ நேசர்களே. (உ0எ)

தன்னைத்தா னடக்கி யாளாமல்—பாப
சங்கற் பங்கள் விட்டு மீளாமல்
மன்னுஞ் சிவநூலைக் கேளாமல்—முத்தி
வாய்ப்ப திலை சிவ நேசர்களே. (உ0அ)

நன்மைத் தீமையென யெண் ணுரே—பல
நாமங்க ளாற்றுதி பண்ணுரே
என்று மொன்ருனல் நிக ரியாரே—முத்திக்
கிடமதுத் தான் சிவ நேசர்களே. (உ0கூ)

ராசனு யுலகை யாள் வாரே—சீர்சே
ரிராச யோகஞ் செய்து வாழ்வாரே
பாச வலையதில் மீள் வாரே—குரு
பாக்கியத் தால் சிவ நேசர்களே. (உக0)

வெள்ளைக் கில்லைக் கள்ள மென்பாரே—திரு
வெண்ணீறு மயமாய் நிற்பாரே
உள்ளமே கோயிலாய்க் கொள்வாரே—ஞான
வுறவினர் காண் சிவ நேசர்களே. (உகக)

உண்ண லுடுத்தலை நோக்கார்கள்—சர்வம்
ஒன்றெனத் தன்னுளே பார்ப்பார்கள்
மண்ணும் பொன் னென்ருய் மதிப்பார்கள்—ஞான
வாழ்வுடை யார் சிவ நேசர்களே. (உகஉ)

கையேந்தித் தின்ருலும் தின்பார்கள்—மட்
கண்ணு லனைத்தையுந் தெரிவார்கள்
தெய்வ தேகத்தை யடைவார்கள்—அஷ்ட
சித்தி யுள்ளார் சிவ நேசர்களே. (உகங)

பூசை ஜெபதபம் வேண்டார்கள்—ஞானப்
பூரண நிலையைத் தாண்டார்கள்.

பாச வலைவழித் தாண்டார்கள்—அவர்கட்
பரபிர்ம மாஞ் சிவ நேசர்களே. (உகச)

தன்னை மறந்த விடந் தானே—நிர்ய
சமாதி யென்ப ததுதானே
மன்னு மானந்த ஞானத் தேனே—உண்ட
வள்ளலா வர் சிவ நேசர்களே. (உகரு)

உண்ணுமை லுண்டு மகிழ்வார்கள்—கண்
ணுறங்காப்போ லுறங்கித் திகழ்வார்கள்
எண்ணமற் றெங்கு மிருப்பார்கள்—அவர்க
ளேகாங்கி யாஞ் சிவ நேசர்களே. (உகசு)

வெட்டெனப் பேசித் திரியார்கள்—வெளி
வேடத்தால் மயக்கார்ப் பெரியோர்கள்
எட்டையு மொன்றாய் நினைப்பார்கள்—முத்தி
யின்பம தாஞ் சிவ நேசர்களே. (உகஎ)

பேத மபேத மிரண்டு மில்லை—முத்தர்
பிரமா னந்தத்திற்கோ ரெல்லை யில்லை
ஆதவன் முன்பனி போலத் தொல்லை—கண்டோர்ச்
சகன் றுப் போகுஞ் சிவ நேசர்களே. (உகஅ)

தானேதானே தானாகித் தானாவார்—தொந்த
சம்பந்த மில்லாமற் கோனாவார்
ஞானாதி காரப் பெரு மானார்—வழி
நாமடை வோஞ் சிவ நேசர்களே. (உககூ)

பசிதாக நித்திரை மயக்கமில்லை—இருட்
பகலென்னு நோக்கமு மங்குமில்லை
சுகிசுகந் துக்கம் தொடர்பு யில்லை—வெகு
சூட்சத்தி லாம் சிவ நேசர்களே. (உஉ0)

சிவ முத்தர்க ளிடந் தானே—மூர்த்த
தீர்த்த க்ஷேத்திரக் கோயில் மடந்தானே
பாவா தீதத்தின் றிடந்தானே—ஞானப்
பாக்கிய மாம் சிவ நேசர்களே. (உஉக)

மோனமே ஞான வரம்பாகும்—தவ
முடிந்த நிலையே சுக போகம்
ஞானி மய மாவதே யோகம்—குரு
நாதன் மொழி சிவ நேசர்களே. (உஉஉ)

சித்தாந்த ஞானந் தெரிந் திடவும்—தன்னைத்
தெரிந்து சிதாகாயத் துட் படவும்
மித்தைக ணீங்கி வினைக்கெடவும்—சத்திய
விஞ்சை வேண்டுஞ் சிவ நேசர்களே (உஉ௩)

சிவமுத்தர்க டிரு வுருவம்—உப
தேசமும் வாய்த்திட நற்குருவும்
பாவாதீத நன்மையும் வரமும்—பெறப்
பணியீசன் ருட் சிவ நேசர்களே (உஉ௪)

பத்திசெய் தார்கள் பரமனுர்—ஞானு
பரண மணிந்து முத்தரானுர்
சித்திகள் மன்னுந் திருவானுர்—உள்ளத்
தெளிந்துக்கொள்வீர் சிவ நேசர்களே (உஉ௫)

அவப்ர காசர் மாயப் பூட்டுக்—குள்
அடங்கி மாயாம லுழைமீட்டு
சிவப்ரகாசன் மொழிகேட்டு—முத்தி
சேர்ந்து வாழ்வீர் சிவ நேசர்களே (உஉ௬)

## வாழி விருத்தம்.

மாமேவு மைங்கரன் கபாலீசனுமைகற்பக வல்லியுஞ் சுப்ரமண்யன்
நேமேவு மிருமங்கை மயில்வேலுஞ் சிவசமய நிலவுகுரு நால்வரடியார்
பாமேவுந் திருநீறு ருத்ராக்கமு மிந்நூல் பாரில் முத்திரிக்கவுதவும்
பூமேவு மன்பர்களுங் கயிலையெனு மயிலையும் பொற்புடன் வாழியதுவே.

ஓம் நமப்பார்வதே பதயேநம:

ஹராஹர மஹாதேவ:

திருச்சிற்றம்பலம்.

சென்னைத் திருமயிலை

ஸ்ரீ கபாலீஸ்வரரின்

சிவஞான மனோரஞ்சிதமும் சிவநேசர்க் கும்மியு

சமாப்தம்.

164408